
நெஞ்சில் உறுத்திக் கொண்டிருந்த
தியாய் உணர்ந்தான். புரட்சி பேசும்
காட்டிலும், அன்பு காட்டும்
பது அதிகம். எடுப்பதை விடக்
ளைத் தருகிறது. சர்வாதிகாரத்தில்
கூட அந்த அன்பின் முன்
ான்.

கரை உற்சாகம் அணைத்துக்
னியாவைத் தேடி நுழைந்தான்.
போட்டி போட்டுக் கொண்டு

கண்ணில் தெரிகின்ற வானம்



தன் பணிகளை முடித்துக் கொண்டு, கணக்கு வழக்குகளை விடியலிடம் ஒப்படைத்து விட்டுச் சென்றிருந்தது இருள். அந்த சந்தோஷத்தில் சிறகுகளைப் படபட வெனச் சோம்பல் முறித்து குட்மார்னிங் சொல்லப் புறப்பட்டன பறவைகள்.

புத்தம் புதிய அந்த நாளைய துவக்கத்தின் காலையில் சீறிப்பாய்ந்த வண்டிகள் டீசல் புகையைக் கலக்க ஆரம்பித்தன.

தொப்பையைக் குறைக்க, வியர்க்க, விறுவிறுக்க ஓடியவர்கள் நல்ல காற்றைச் சுவாசித்த மகிழ்ச்சியோடு வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தனர்.

அந்த அழகான பங்களாவின் முன்புறம் அழகான புல்வெளியும், சுற்றிலும் கண்ணைப் பறிக்கும் வண்ண வண்ண மாய்ப் பூத்திருந்த பூக்களின் நடுவே அந்தப் பூவும் மலர்ந்திருந்தது. ஆனால் என்ன ஒரு அதிசயம்! அந்த உயிருள்ள பூவின் கையில் ஹோஸ் பைப் இருந்தது. அதிலிருந்து பீய்ச்சியடித்த தண்ணீர் மழைத் தூறலாய்ச் செடிகளைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தது.

நைட்டியில் இருந்த ஜீவிதா துள்ளும் இளமையின் துவக்கத்தில் இருக்கும் கல்லூரி மாணவி. அழகிய பெரிய இரு கருவிழிகளே போதும். வேறெதையும் வர்ணிக்க அவசிய மில்லாத அழகி. கவர்ச்சியான மாநிறம். வசீகரிக்கும் இன்முகம். ஆனால், இப்போது அந்த முகத்தில் ஒருவிதப் பதற்றம் குடி கொண்டிருந்தது.

'நேரமாகிக் கொண்டிருக்கிறதே!'

கேட்டில் அன்றைய தமிழ் ஆங்கிலத் தினசரிகளையும் சில வார, மாத இதழ்களையும் செருகி வைத்து விட்டு மணி யடித்துக் கொண்டே சென்றான் பேப்பர்க்காரன்.

ஜீவிதா பேப்பர்களை எடுத்துக் கொண்டு உள்ளே சென்றாள்.

விசாலமான பங்களா! தரையில் முகம் பார்க்கலாம் போன்ற பளிங்குத் தரை. சினிமாவில் வரும் பணக்காரப் பங்களா போன்றிருந்தது.

குஷன் வைத்த ஊஞ்சலில் ஒய்யாரமாய் அமர்ந்தபடி கண்களில் கர்வம் மிளிர ஆடிக் கொண்டிருந்தாள் ராகினி. அந்த அலட்சியமும், கம்பீரமும் நிஜமாகவே அரசாளும் ராணியைப் போலவே இருந்தது.

இப்போதுதான் படுக்கையை விட்டே எழுந்து வந்திருக் கிறாள் போலும். 'இவள் எப்போது பேப்பர் படித்து, பிறகு குளித்து, அதன் பிறகு நான் குளித்துக் கிளம்புவது?' அலங்கலாய்த்தாள் ஜீவிதா.

''என்ன பார்த்துக்கிட்டே நிக்கிறே?'' ராகினியின் குரலும் கம்பீரமாய் ஒலித்தது.

ஜீவிதா திடுக்கிட்டுப் பேப்பரை அவளிடம் கொடுத்தாள்.

''இன்னும் காபி வரலே பார்! போய்க் கொண்டுவா!'' பேப்பரில் கண்களை ஓடவிட்டபடி கட்டளையிட்டாள்.

ஜீவிதா அவசர அவசரமாய் அம்மாவைத் தேடி கிச்சனை நோக்கி ஓடினாள்.

வேணி அப்போதுதான் சர்க்கரையைக் கலந்து கொண்டிருந் தாள்.

''வாடி...!''

''நான் வர்றது இருக்கட்டும். நீ இன்னுமா அந்த மகாராணிக்குக் காபி தராம இருக்கே? சீக்கிரம் கொடுக்கறதுக் கென்ன?'' என்றாள் கோபமாக ஜீவிதா.

''அவ இப்பதானேடி எந்திரிச்சே வந்தா!''

''எழுப்பித் தர்றதுக்கென்ன?''

''யார்... நானா? தெரிஞ்சி பேசறாயா, தெரியாம பேசறயா? விளையாடாதே!''

''ஆமா... விளையாடறது ஒண்ணுதான் குறைச்சலா இருக்கு. அந்தம்மா எப்ப குளிக்கப் போய்... நான் எப்ப...''

''புலம்பி ஆகப் போறதிலே ஒண்ணுமே யில்லை! இது தினசரி நடக்கறதுதானே! இன்னைக்கென்ன புதுசா புலம்பிக்கிட்டு...''

''தினசரி... புரபசர்கிட்டே லேட்டா போய்த் திட்டுவாங்கறது நீயோ அந்த மகாராணியோ இல்லே. நான்தான்!''

''அவள் காதிலே விழுந்து தொலைக்கப் போவுது. பேசறதைக் கொஞ்சம் குறைச்சுக்க ஜீவிதா! இந்தா காபி! இதைக் குடிச்சிட்டிரு... நான் ராகினிக்குக் கொடுத்திட்டு வர்றேன்!''

ஜீவிதா முகத்தை உம்மென்று வைத்தபடி காபியை வாங்கிக் கொண்டு சமையல் மேடை மேல் அமர்ந்து கொண்டாள்.

''முகத்தைத் தூக்கி வச்சிட்டிருக்காதே! சிரிடி... நம்மகிட்ட உள்ள ஒரே சொத்து அதுதானே!''

''ஈ... ஈ... போதுமா?'' பல்லை இளித்துக் காட்டினாள்.

''பரவாயில்லே... பழையபடியே முகத்தைத் தூக்கி வச்சிக்க...'' வேணி கிண்டலாய்ச் சொல்லிவிட்டுப் புறப்பட... ஜீவிதா மனம் விட்டுச் சிரித்தாள்.

''காபி கேட்டு அரைமணி நேரமாச்சு. உங்களுக்கெல்லாம் இப்பதான் விடிஞ்சதா?'' காபியை வாங்கிக் கொண்டே சொல்லம்புகளை ஏவத் தொடங்கினாள் ராகினி.

''இல்லேம்மா... உனக்காகப் புது டிகாக்ஷன் போட்டு...''

''ஆமா... உன் பொண்ணு எங்கே? அவளைத்தானே காபி கொண்டு வரச் சொன்னேன்.''

''அவ... அவ... உள்ளே காய்கறி நறுக்கிட்டிருக்கா!''

''இன்னிக்கு என்ன டிபன்?''

''இடியாப்பம், பொங்கல்...''

''அவ்வளவுதானா? என்ன சமைக்கறதுக்குச் சோம்பலா இருக்கா?''

''அப்படி யெல்லாம் இல்லேம்மா! உனக்கு என்ன வேணும்னு சொல்லு... நிமிஷத்துல தயார் பண்ணிடறேன்!''

''ரவா இட்லியும், புதினா சட்னியும் சேர்த்துப் பண்ணிடு. அப்புறம், மதியத்துக்கு மட்டன் பிரியாணி பண்ணி அனுப்பிடு!''

''வந்து... ராகினி...'' வேணி தடுமாறினாள்.

''என்ன...?''

''இன்னைக்கு வெள்ளிக்கிழமை... மட்டனெல்லாம்...''

''என்ன சமைச்சா என்ன? எந்தக் கடவுளும் இந்தக் கிழமைகள்லதான் நான்வெஜ் சமைக்கணும், இந்தக் கிழமைகள்தான் வெஜிடேரியன் சமைக்கணும்னு சொல்லலே! உழைக்கறது எதுக்காக தெரியுமா? திருப்தியாகச் சாப்பிடறதுக் குத்தான். அது எப்ப சாப்பிட்டா என்ன? உன்னால் முடியாதுன்னா சொல்லிடு... நான் ஓட்டல்லேர்ந்து வரவழைச்சுக்கறேன்!''

''ஐயோ... ஏன்டா கண்ணு! ஓட்டல்லேர்ந்து வரவழைச் செல்லாம் சாப்பிடாதே! உடம்புகெட்டுப் போகும். நான்... நானே சமைக்கிறேன்!''

''ரொம்பத்தான் அக்கறை!'' கிண்டலாய்ச் சொல்லிவிட்டுக் குளிப்பதற்காக எழுந்து சென்றாள்.

அந்தக் கிண்டலான பேச்சு வேணியின் இதயத்தைத் தாக்க... கண்கள் ஈரமாகியது.

உண்மையான அக்கறையோடு, அன்போடு சொன்னால்கூட நடிப்பென்கிறாளே!

''என்ன... காலங்கார்த்தால வாங்கிக் கட்டிக்கிட்டியா? உனக்கேன் வம்பு? அவள் என்ன கேட்டாலும் சமைச்சுக்

கொடுக்க வேண்டியதுதானே? ஆடா இருந்தா என்ன? மாடா இருந்தா என்ன? மிருகம் மிருகத்தைத்தான் சுவை பார்க்கும்!'' அங்கு வந்த ஜீவிதா சொன்னாள்.

''ஜீவிதா... என்ன பேச்சுப் பேசறே, மரியாதை இல்லாம? அவள் உன் அக்கா... அதை மறந்திடாதே...!''

''ஞாபகமிருக்கும்மா!'' என்றாள் கசப்பாய்.

வேணி சேலைத் தலைப்பால் முகத்து வியர்வையை ஒற்றியபடி சட்னிக்காகப் புதினா இலைகளை வதக்கத் தொடங்கினாள்.

ஜீவிதா தோளில் டவலோடு இப்படியும் அப்படியுமாய் நடப்பதும் கடிகாரத்தில் நேரம் பார்ப்பதுமாய் நகம் கடித்தாள்.

''ஜீவி... கொஞ்சம் மிக்சியில் போட்டு இதை அரைச்சிக் கொடுத்திடறியா?''

''நீ வேற கோபத்தைக் கிளறாதேம்மா!''

''இந்த வயசுல உனக்கு இவ்வளவு கோபம் வரக் கூடாதுடி!''

''இந்த வயசுல அவளுக்கு மட்டும் அவ்வளவு திமிர் இருக்கலாமா?''

''நீ இப்படியெல்லாம் பேசறது எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கலே ஜீவிதா!''

''எனக்கு இங்கே இருக்கவே பிடிக்கலே!''

''வேற எங்கே போகலாம் சொல்லு!'' கைகள் அதுபாட்டிற்கு வேலை செய்து கொண்டிருக்க, அமைதியாய்க் கேட்டாள்.

''...!''

''இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியலே இல்லே! நிஜத்தைச் சொல்லப்போனா... இதுக்குப் பதிலே இல்லே! நமக்கெல்லாம் எதுக்கு ஜீவிதா வீராப்பும், பொல்லாப்பும்!''

''ராகினியோட அராஜகம் தாங்க முடியலேம்மா!''

''இந்த உலகத்திலே குற்றமில்லாத மனுஷன் ஒரே ஒருத்தன்தான் உண்டு. அவன் இன்னும் பிறக்கலே! புரியுதா? ராகினியோட நிழல்ல வாழ்ந்துக்கிட்டிருக்கோம். சில சமயங்கள்ல அவளைப் பத்தியே குறை சொல்கிறோம். நாம மட்டும் நல்லவங்களா ஜீவீதா!''

''உன்கிட்டே பேசி முன்னுக்கு வர முடியாதும்மா! இதையெல்லாம் பேச வேண்டிய நேரத்திலே பேச வேண்டிய ஆளுகிட்டே நியாயம், தர்மம் பத்தி எல்லாம் லெக்சர் அடிச்சி கேட்க வேண்டியதைக் கேட்டிருந்தா, சேர வேண்டியது சேர்ந்திருக்கும். அட்லீஸ்ட் ஒதுங்க ஒரு குடிசையாவது கிடைச்சிருக்கும். ஆனா இப்ப... இவ்வளவு பெரிய வீட்லே சம்பளம் இல்லாத வேலைக்காரியா உழைச்சிக்கிட்டிருக் கோம்!''

''.....''

''என்னம்மா பதிலைக் காணோம்!''

''உனக்குக்கூட குத்திக்காட்டிப் பேச வருதேன்னு பிரமிச்சுப் போயிட்டேன். வேறொண்ணுமில்லே!'' குரல் அமுங்கிப் போய் வந்தது வேணியிடமிருந்து.

ஜீவிதா தன் தவறை உணர்ந்தவளாய் அம்மாவின் தோளில் கை வைத்து அழுத்தினாள்.

''சாரிம்மா...!''

''பரவாயில்லே...!''

''காலேஜுக்கு நேரமாகுதேன்னுதாம்மா வருத்தம். இவ்வளவு பெரிய வீட்லே ஒரே ஒரு பாத்ரூம்தான் இருக்கு. ஆனா, ராகினிதான் முதல்ல குளிக்கணும். அவளுக்குப் பிறகுதான் மத்தவங்க குளிக்கணும்னு உத்தரவு. இது என்னம்மா மனுஷத்தனம்? எனக்குக் காலேஜுக்கு எட்டு மணிக்கெல்லாம் போகணும். அவளுக்கு ஆபீசுக்குப் பத்து மணிக்குப் போனாக்கூட போதும். அதுவும் இவளோட சொந்த ஆபீஸ்! எப்பப் போனா என்ன? வேணுமின்னே... நான் லேட்டாப் போய்த் திட்டு வாங்கறதுக்காகவே... ஒரு மணி நேரமா குளிச்சிட்டிருக்கா... எனக்குக் கோபம் வருமா வராதா?''

''சரி.. சரி... அவள் குளிச்சிட்டு வந்துட்டா போலிருக்கு. நீ கிளம்பு.''

உயர் ரக சோப்பின் நறுமணம் அந்த இடத்தையே ஆக்கிரமித்துக் கொள்ள... பனியில் நனைந்த ரோஜாவாய் பாத்ரூமிலிருந்து வெளிப்பட்ட ராகினியைப் பார்த்து அயர்ந்து போய்விட்டாள் ஜீவிதா.

'அம்மாடி... என்ன ஒரு அழகு!'

இளமைத் துடிப்பும், பெண்மையின் அகங்காரமும் அவள் நடையில் தெரிந்தது.

என்னைவிடப் பேரழகி வேறு யார் என்கிற மமதை அவள் உடல் முழுக்க நிறைந்திருந்தது.

பாலில் குங்குமம் கலந்தால் ரோஸ் நிறம் வருமல்லவா? அப்படியொரு ரோஜாப்பூ நிறம்! பளபளவென்று வார்னிஷ் அடித்தது போல் பளபளப்பு. ஐந்தரையடி உயரம். வளைவு நெளிவுகளோடு வேண்டிய இடங்களில் போதுமான சதைப் பிடிப்புடன் இருந்தாள். அழகாக வெட்டி விடப்பட்டிருந்த

கூந்தலில் இயற்கை நிறத்தை பார்லரின் உதவியோடு செந்நிறத்திற்கு மாற்றி அயல்நாட்டு அழகோடு போட்டி போட்டாள். அந்த உதட்டுச் சுழிப்பிற்கே ஓராயிரம் பேர் மயங்கி விடுவார்கள். அப்படிப்பட்ட அழகி அவள்.

ராகினி அவள் முகத்திற்கு முன் சிட்டிகை போட்டாள்.

''அ... எ... என்ன?'' திடுக்கிட்டுப் பார்த்தாள்.

''என்ன... அப்பப்ப... சிவலோகம் போயிட்டு வர்றே? இதையெல்லாம் பார்க்கறப்ப... படிச்சிட்டு ஒழுங்கா பட்டம் வாங்கிட்டு வருவியா, இல்லே... எவனாவது பரதேசிப் பயலை இழுத்துக்கிட்டு வருவியான்னு சந்தேகமாயிருக்கு!'' அவள் கிண்டலாய்ச் சொல்ல... ஊசி போல் குத்தியது ஜீவிதாவிற்கு.

பதில் கூறாமல் பாத்ரூம் நோக்கி நடந்தாள்.

''ஹலோ... என்ன... நான் பாட்டுக்குப் பேசிட்டிருக்கேன். நீ பாட்டுக்குப் போய்க்கிட்டேயிருந்தா கொஞ்சம்கூட மரியாதை யில்லாம...!''

''சொல்லுக்கா...!''

''அம்மாவுக்கும், பொண்ணுக்கும் இதிலே ஒண்ணும் குறைச்சல் இல்லே! அந்த சாமர்த்தியம் இருக்கிறதாலேதானே இங்கே வந்து உட்கார்ந்திருக்கீங்க! சரி... சரி... குளிச்சிட்டு சீக்கிரம் வா!''

''என்ன விஷயம்?''

''மகாராணிக்கு எல்லாமே இப்பவே சொல்லிடணுமா? குளிச்சிட்டு வா முதல்ல...!''

எரிச்சலாய்ச் சொல்லிவிட்டு நகர்ந்தாள் ராகினி.

உப்பென்று பெருமூச்சுவிட்டபடி பாத்ரூமிற்குள் நுழைந்த ஜீவிதா... மின்னல் வேகத்தில் குளித்தாள்.

வழக்கத்தை விடவும் இன்று தாமதம்தான்.

முதல் வகுப்பில் புரபஸர் திரிபுரசுந்தரி கண்ணாடி வழியே கண்ணால் எரிக்கப் போகிறாள்.

குளித்து முடித்து இளரோஸ் நிறக் கறுப்பு எம்பிராய்டரி வேலை செய்யப்பட்டிருந்த காட்டன் சுடிதாரை அணிந்து கொண்டாள். அந்த சுடிதார்கூட ராகினியோடதுதான்.

அவள் எந்த உடையையும் நாலைந்து முறைக்கு மேல் பயன்படுத்தமாட்டாள். அப்படிப் பயன்படுத்தத் தகுதியற்ற துணிமணிகளைப் பெரிய மனதுடன் ஜீவிதாவிற்குக் கொடுத்து விடுவாள்.

ஜீவிதா விதம் விதமாக அழகாக அணியும் உடைகள் அனைத்துமே ராகினி போட்ட பிச்சைதான்.

நீண்டகூந்தலைச் சீவி அவசர அவசரமாகப் பின்னி விட்டாள். காலையிலேயே பறித்து வைத்திருந்த ரோஜாவை வலதுபுறக் காதோரம் செருகினாள். ஜீவிதா பவுடர் போடும் பழக்கமில்லாதவள். சிறியதாய்க் கறுப்பு நிற ஸ்டிக்கர் பொட்டை எடுத்து நெற்றிக்கு மத்தியில் வைத்துக் கொண்டாள்.

கண்ணாடி முன் நின்று தன்னை ஒரு முறை முழுதாய்ப் பார்த்துக் கொண்டாள்.

திருப்தியாய் இருந்தது.

புத்தகத்தை அடுக்கி வைத்துவிட்டு கிச்சனிற்கு ஓடினாள்.

''அலங்காரம் பண்றதுக்கு இவ்வளவு நேரமா? சீக்கிரம் வா!''

எதிர்ப்பட்ட ராகினி அழைத்ததும்தான் அவள் குளித்து முடித்ததும் வரச் சொன்னது நினைவிற்கு வந்தது.

அவள் பின்னேயே சென்றாள்.

''இந்தா... இதைச் சீக்கிரம் அயர்ன் பண்ணிக்கொடு!'' ஒரு ஜீன்ஸ் பேண்டையும், டி-சர்ட்டையும் அவளிடம் வீசி எறியாத குறையாகக் கொடுத்தாள்.

''நா... நானா?''

''நீ... நீயேதான்!'' என்றாள் அவளைப் போலவே ராகமிழுத்து.

''ராகினி... அதை நான் அயர்ன் பண்ணித் தர்றேன்மா! அவளுக்குக் காலேஜுக்கு நேரமாச்சு!'' வேணி அங்கு வந்தாள்.

அவளை ஏற இறங்க ஒரு பார்வை பார்த்துவிட்டு, ''நேரமானா பரவாயில்லே... ஒண்ணும் குடி முழுகிப் போயிடாது. இவளே அயர்ன் பண்ணட்டும். நீங்க போய்ச் சாப்பிடறதுக்கு எல்லாம் எடுத்து வையுங்க. எனக்கும் மீட்டிங் இருக்கு. சீக்கிரமா போகணும். ஆபீசை ஒழுங்கா கவனிச்சாதானே... எல்லாரும் திருப்தியா சாப்பிட முடியும்? குய்க்... சீக்கிரம் ஆகட்டும்!'' என்றவள் ஹேர்டிரையரால் கூந்தலை உலர்த்த ஆரம்பித்தாள்.

வேணி நகர... இதயம் கனக்க, ஜீவிதா அவள் கொடுத்த துணிகளை அயர்ன் பண்ண ஆரம்பித்தாள்.

அடுத்த பதினைந்து நிமிடத்தில் சாப்பிட்டு முடித்து ஜீன்ஸ் டி-சர்ட்டில் மமதையோடு குதிரையைப் போல் நடந்து சென்று போர்டிகோவில் நிறுத்தியிருந்த சந்தன நிற சியல்லோ காரை உசுப்பி ஆபீஸ் நோக்கிப் புறப்பட்டாள் ராகினி.


வேணி அவசர அவசரமாய் ஜீவிதாவிற்கு டிபன் பாக்சில் மதியத்திற்கு உணவை அடைத்து வைத்து, தட்டில் காலைச் சிற்றுண்டியோடு மகளிடம் வந்தாள்.

ஜீவிதா அமைதியாக டிபன் பாக்சை மட்டும் எடுத்துக் கொண்டு, ''வர்றேம்மா,'' என்று நடந்தாள்.

''என்ன... ஒண்ணுமே சாப்பிடாம போறே?''

''நேரமிருக்கா என்ன?'' வேதனையுடன் புன்னகை யொன்றை வெளியிட்டு விட்டுப் படியிறங்கிப் போனாள்.

வேணி, கண்களில் நீர் திரையிட, மகளையே பார்த்தபடி நின்றிருந்தாள்.



உலகிலேயே சந்தோஷம் தரக்கூடிய இடம் எதுவென்று கேட்டால் யோசிக்காமலேயே சொல்லி விடுவார்கள்... அது கல்லூரிதான் என்று!

மூடி திறந்த சோடா போல் எந்தப் பக்கம் திரும்பினாலும், இளமையும் கும்மாளமும் சிரிப்பும் பொங்கி வழிந்து கொண்டிருந்தது.

லன்ச் பாக்ஸோடு உட்கார இடம் நாடிச் சென்றது ஒரு பட்டாளம்.

புல்வெளியில் கிடந்த காகிதக் குப்பைகளைக் காலால் தள்ளிவிட்டு அமர்ந்தாள்.

ஜீவிதா டிபன் பாக்ஸைத் திறந்தாள். தக்காளிச் சாதம் கும்மென்று வாசனை வீசியது.

''என்னடி வெஜிடபில் புலாவா?'' என்றாள் மவுனிகா.

''ஊகூம்... டொமாட்டோ ரைஸ்தான்!''

''ஜீவிதா கொடுத்துவச்சவடி! விதவிதமான சாப்பாடு... வசதியான வாழ்க்கை! உங்க வீட்லே யாரு சமைக்கிறா?''

''அ... அம்மாதான்!''

''பரவாயில்லையே! உங்கம்மா கிச்சன் பக்கமெல்லாம் கூடப் போவாங்களா? ஆச்சரியமா யிருக்கே!'' வினோதினி விநோதமாய்க் கேட்டாள்.

''இதுல ஆச்சரியப்பட என்ன இருக்கு! அம்மா சமைக்காம வேற யார் சமைக்கிறதாம்!''

''அது எங்களை மாதிரி மிடில்கிளாஸ் அம்மாங்களுக்கு மட்டும்தான் பொருந்தும். உன்னை மாதிரி ஹைசொசைட்டி யைச் சேர்ந்த வீட்டிலுள்ள அம்மாங்களுக்கு கிளப்புக்குப் போறதும், சோஷியல் வொர்க் பண்றதும்தான் வேலையே!''

ஜீவிதா தனக்குள் சிரித்தபடி சாப்பிட்டாள்.

''சுரிதார் சூப்பராயிருக்கு! எங்கேடி வாங்கினே?'' என்று கேட்டாள் மித்ரா.

''தெரியாது... அக்கா வாங்கிக் கொடுத்தா!''

''எப்படியும் ஆயிரம் ரூபாய்க்கு மேலேதான் இருக்கும். மெட்டீரியல் பார்த்தியா? உங்க அக்காவுக்கு நல்ல ரசனை ஜீவி! நல்ல செலக்ஷன்!''

''ஜீவிதாவுக்கென்ன? தினம் ஒரு டிரஸ் போட்டுக்கிட்டு வந்து அசத்தறா!''

''ஏய்... பேசாம சாப்பிடுங்கப்பா!'' அலுத்துக் கொண்டாள் ஜீவிதா.

''ஆமா... நீ ஏன் தினமும் லேட்டா வர்றே?''

''பீக் அவர்... பஸ் கிடைக்கறது கஷ்டமாயிருக்கு!''

''வீட்லே ரெண்டு மூணு கார் இருக்கு. நீ ஏன் பஸ்லே வர்றே?'' விஷயம் புரியாமல் கேள்வி கேட்டாள் ரஞ்சனா.

''எனக்கு பஸ்லே வர்றதுதான் பிடிக்கும்.''

''இப்படிச் சொல்றதே ஒரு ஸ்டைலா போச்சுடி விநோ! நாமெல்லாம் மிடில் கிளாஸ்... ஆனா கார்ல போகணும், பிளேன்ல போகணும்னு ஆசைப்படுவோம். பணக்காரங்களைக் கேட்டுப்பார்... எல்லாமே அலுத்துப் போனவங்க மாதிரி... பஸ்லே போகத்தான் பிடிக்கும். நடந்து போகத்தான் பிடிக்கும்னு அலட்டுவாங்க!'' தேங்காய்ச் சாதத்தை நாசூக்காய்ச் சாப்பிட்டபடி சொன்னாள் பவானி.

அதைக் கேட்டு ஜீவிதாவிற்குச் சிரிப்பதா, அழுவதா என்றே புரியவில்லை. இதுநள் வரை அவள் காரில் சென்றதே இல்லை என்றால் நம்புவார்களா?

''ஜீவிதாவுக்குக் கவலையில்லே... படிப்பை முடிச்சதும் கல்யாணம் பண்ணிடுவாங்க...!''

''அதெப்படி?அவளோட அக்காவுக்கு ஆகாம...''

''ஆமா... உங்க அக்காவுக்கு எப்ப கல்யாணம்?''

''மாப்பிள்ளை பார்த்துக்கிட்டிருக்காங்க!''

''இவளோட அக்காவை நீ பார்த்திருக்கியா ரஞ்சனி! சூப்பர் பிகரு... ஒருநாள் எதேச்சையா ஜீவிதா வீட்டுக்குப் போனப்ப...

அவங்க வெளியே கிளம்பிட்டிருந்தாங்க. அப்பதான் பார்த்தேன். சூப்பர் லேடி. அந்தக் கால நடிகை ஜெயபிரதா மாதிரி நம்ம ஜீவிதா அழகுதான். ஆனா, அவளை அவங்க அக்கா பக்கத்துல நிக்கவச்சுப் பார்த்தா... ஜீவிதா இஸ் நத்திங்! அவங்களுக்கு மாப்பிள்ளை பார்க்கணும்னா... அரவிந்தசாமி தான் ஓக்கே! ஆனா அவருக்குத்தான் கல்யாணமாயிடுச்சே.... எங்கே போய் மாப்பிள்ளை தேடப்போறீங்க...''

''ஏய் சும்மாயிருங்கடி... வழவழன்னு பேசிக்கிட்டு!'' அதட்டினாள் ஜீவிதா.

''உனக்கு உங்க அக்கா மாதிரிப் பெரிய இன்டஸ்டிரியலிஸ்டா ஆகணும்னு ஆசையிருக்கா ஜீவிதா?''

''ம்...'' என்று தலையசைத்தாள் ஜீவிதா.

''அவளுக்கென்ன... அக்காவோட கம்பெனியிலேயே ஜாய்ன் பண்ணிட மாட்டாளா?''

''ஆமாம்... அதென்ன அக்கா கம்பெனி அக்கா கம்பெனிங்கறீங்க? அது இவங்க அப்பா துவக்கின கம்பெனி. அவர் இறந்ததும் அக்கா எடுத்து நடத்தறாங்க. அதுல சரிபாதி உரிமைநம்ம ஜீவிதாவுக்கும் இருக்கு!'' என்றாள் ரஞ்சனி.

''அப்படியா? பொறந்தா... அடுத்த ஜென்மத்திலே நான் ஜீவிதாவா பொறக்கணும்னுதான் வேண்டிப்பேன்.''

''...''

''என்ன ஜீவி... மவுனமாயிட்டே?''

''பேச என்ன இருக்கு? நேரமாச்சு... வாங்க. கிளம்பலாம்!'' எழுந்து கொண்டாள் ஜீவிதா.

''பாரேன்... பேசிக்கிட்டே இருந்ததுல சொல்லவந்த முக்கியமான விஷயத்தை மறந்திட்டேன்!'' தன்னையே நொந்து கொண்டாள் பவானி.

''என்ன, சொல்லு?''

''நான் உங்க அக்காவைப் பார்க்கணும் ஜீவிதா!''

''ஏதுக்கு?''

''எங்க ஏரியாவுல அனாதை இல்லம் ஒண்ணு கட்டப் போகிறோம். எங்க ஏரியா வாசிங்க தங்களால முடிஞ்ச அளவுபணஉதவி செய்யறதோட அவங்களுக்குத் தெரிஞ்ச பெரிய புள்ளிங்களிடமிருந்தும் பணம் உதவியா பெற்று இல்லம் கட்ட முனைப்பா செயல்பட்டுக்கிட்டிருக்காங்க. இது நல்ல விஷயமாச்சே... உங்க அக்காகிட்டேயும் டொனேஷன் கேட்கலாம்னு இருக்கோம்!''

ஜீவிதா திகைத்துப் போனாள்.

''அது... அதுவந்து... நான் அக்காகிட்டே கேட்டுச் சொல்றேனே...!''

''சீக்கிரமாகவே கேட்டுச் சொன்னா நல்லது!''

''பவானி... நீ அவங்களைப் பார்க்கப் போறப்ப என்னையும் கூட்டிக்கிட்டுப் போ... அந்த சூப்பர் லேடியை நானும் பார்க்கணும்!''

''கண்டிப்பா...!'' என்றாள் பவானி.

அப்போதே வெலவெலத்துப் போனாள் ஜீவிதா.

பத்து நாட்கள் கடந்திருக்கும்.

ஜீவிதா அந்த சம்பத்தையே மறந்துவிட்டிருந்தாள்.

அன்று ஞாயிறு என்பதால்... ஜீவிதாவும், ராகினியும் வீட்டிலிருந்தனர்.

தன் பிசினஸ் பார்ட்னர் சேகரை அன்றைக்கு வீட்டிற்குச் சாப்பிட வரச்சொல்லி அழைத்திருந்தாள் ராகினி.

அதனால் வேணியும், ஜீவிதாவும் வியர்க்க விறுவிறுக்க கிச்சனில் வேலை செய்து கொண்டிருந்தனர்.

''ஏய்... ஜீவிதா!'' ஹாலில் அமர்ந்திருந்த ராகினி குரல் கொடுத்தாள்.

''இதோ வந்திட்டேன்க்கா!'' மிக்சியில் மசாலா அரைத்துக் கொண்டிருந்த ஜீவிதா ஸ்விட்சை அணைத்துவிட்டு ஓடினாள்.

''எனக்கு ஆரஞ்சு ஜூஸ் வேணும்!''

''கொண்டு வர்றேன்!'' என்று திரும்பி வந்தாள்.

''என்னம்மா... ராகினி கூப்பிட்டாளே!''

''ஆரஞ்சு ஜூஸ் வேணுமாம்! சமையல் வேலையைப் பார்க்கறதா? அந்தம்மாவைப் பார்க்கறதா?'' அலுத்துக் கொண்டாள் ஜீவிதா.

''நான் ஜூஸ் போட்டுத் தர்றேன். அப்படியே உனக்கும் போட்டுத் தர்றேன்... குடி!''

''எனக்கு வேணாம்மா...நம்ம லிமிட்டுக்கு ஏத்த மாதிரி டீ, காபியே போதும். நீ சீக்கிரம் போட்டுத் தா! கொஞ்சம் லேட்டானாலும் கத்துவா!''

வேணி சிரித்துக் கொண்டே ஜூஸ் போட்டாள்.

அதே நேரம்... திறந்திருந்த வாசல் கதவின் மேல் மரியாதைக்கு விரலால் தட்டிச் சப்தம் எழுப்பினாள் பவானி.

அவளுடன் கல்லூரித் தோழிகள் வேறு சிலரும் இருந்தனர்.

சத்தம் கேட்டு நிமிர்ந்தாள் ராகினி.

''யெஸ்... கம்மின்!'' என்றாள்.

'யார் இவர்கள்?' என்கிற வியப்பு ராகினியின் கண்களில் தொக்கி நின்றது.

''மிஸ்... ராகினிங்கிறது...''

''யெஸ்... நான்தான்! நீங்க யாரு?''

''நாங்க... உங்க சிஸ்டர் ஜீவிதாவோட காலேஜ் மேட்ஸ்.''

''ஓ...!''

''உங்களைச் சந்திக்கணும்னு ரொம்ப நாளா டிரை பண்ணினோம். எப்பக் கேட்டாலும் ஜீவிதா அக்கா பிசின்னு சொல்லிக்கிட்டேயிருந்தா. சரி, இனி அவள்கிட்டே கேட்டுக் காரியம் ஆகாதுன்னு நாங்களே கிளம்பி வந்துட்டோம்!'' ஒரு பெரிய காரியம் சாதித்துவிட்ட மகிழ்ச்சியில் பேசினாள் பவானி.

''இவ்வளவு பிரயத்தனப்பட்டு என்னை எதுக்காகப் பார்க்க வந்திருக்கீங்க?''

பவானி மெல்ல விஷயத்தைச் சொன்னாள்.

அதைக் கேட்டுக் கலகலவெனச் சிரிக்க ஆரம்பித்தாள் ராகினி.

அந்தச் சிரிப்பிற்கு அர்த்தம் புரியாமல் திகைத்து நின்றிருந்தனர்.

''ஸோ... அனாதை இல்லம் கட்டறதுக்காக என்கிட்டே டொனேஷன் கேட்டு வந்திருக்கீங்க!''

''ஆ... ஆமா!''

''நான் ஏற்கெனவே ரெண்டு அனாதங்களைத் தத்து எடுத்து வளர்த்துக்கிட்டிருக்கேனே...!''

''நிஜமாவா? ஜீவிதா இதைப்பத்தி எங்ககிட்டே சொல்லவே இல்லையே... ரியல்லி யூ ஆர் கிரேட் மேடம்! ஒரு பெரிய தொழிலதிபரா இருக்கிறது மட்டும் பெரிய விஷயமில்லே... ஒரு நல்ல மனுஷியா இருக்கிறது ரொம்ப பெரிய விஷயம்! பணமிருக்கிற மனுஷங்கள்ல மத்தவங்களுக்கு உதவணும்னு நினைக்கிற மனசு எத்தனை பேர்கிட்டே இருக்கு? மேடம்... உங்களுக்கு ஆட்சேபணை இல்லாட்டா... நீங்க தத்து எடுத்து வளர்த்துக்கிட்டிருக்கிற அந்த ரெண்டு பேரை நாங்க பார்க்கலாமா?''

''ஷ்யூர்... ஷ்யூர்...!'' என்று அலட்டலாய்த் தோளைக் குலுக்கியவள்... ''ஜீவிதா...!'' என்றழைத்தாள்.

''இதோ... ரெடி!'' என்று குரல் கொடுத்துக் கொண்டே ஜூஸ் தம்ளரோடு வந்தாள். அங்கு இருந்த தன் தோழிகளைப் பார்த்து விதிர்விதிர்த்துப் போனாள். ''ப... பவானி... நீங்கள்லாம்... எப்ப வந்தீங்க?''

''அதிருக்கட்டும். உங்க அக்காவைப் பத்தி எவ்வளவோ விஷயங்களைச் சொன்னே! ஆனா, முக்கியமான விஷயம் பத்தி சொல்லவே இல்லையே!''

''எ... என்னது?''

''உங்க சிஸ்டர் ரெண்டு அனாதையைத் தத்து எடுத்து வளர்க்கிறாங்களாமே!''

''அ... அனாதையா?''

''ஜீவிதா... நீ போய் உங்கம்மாவை அழைச்சிட்டு வா!'' என்று தம்பரை வாங்கிக் கொண்டு அனுப்பி வைத்தாள்.

அடுத்த நொடி வேணி முந்தானையில் கைகளைத் துடைத்தபடி ஜீவிதாவோடு வந்தாள்.

''என்னம்மா... கூப்பிட்டியாமே?''

''நான் சொன்னேனே, ரெண்டு அனாதைங்க... அவங்க இவங்க ரெண்டு பேரும்தான்!'' என்று விரல் நீட்டி அவர்களைச் சுட்டிக் காட்ட, ராகினியைத் தவிர, அத்தனை பேரும் திடுக்கிட்டுப் போயினர்.

''என்ன ஆச்சரியமா பார்க்கறீங்க? உங்க பிரெண்ட் ஜீவிதா என்னை அக்கான்னு சொல்லியிருக்கா இல்லையா? இதோ... இவங்க பேர் வேணி. இந்த ஜீவிதாவோட அம்மா! ஜீவிதாவுக்கு அம்மான்னா... என்னையும் அவங்க இல்லே பெத்திருக்கணும்? வேணிம்மா... நீங்களே சொல்லுங்க... நீங்களா என்னைப் பெத்தீங்க?'

அன்பாய், மென்மையாய்க் கேட்டாள், ராகினி.

''ரா..கி...னி...!'' வேணியின் குரல் நடுங்கியது.

''ப்ச்... கேட்டதுக்குப் பதிலைச் சொல்லுங்க. உங்க பொண்ணு தப்பும் தவறுமா சொல்லி வைச்சிருக்கா. உண்மை என்னான்னு புரிய வைக்கணுமில்லையா? சொல்லுங்க... நான் உங்க பொண்ணா? ஐ...மீன் என்னை நீங்க பத்து மாசம் சுமந்து பெத்தீங்களா?''

''இ... இல்லே!''

''ஜீவிதா... இப்படி வாம்மா! இருக்கறதைப்பத்தி பெருமையடிச்சிக் கிட்டாலே... நிலைக்க மாட்டேங்குது. நீ ஏம்மா... இல்லாததைப் பத்தியெல்லாம் பேசித் தற்பெருமை அடிச்சுக்கறே? உண்மையை எத்தனை நாளைக்கு மறைச்சு வைக்க முடியும்? ஏதோ பரிதாபப்பட்டு உங்களுக்கு நல்லது பண்ணிட்டிருக்கேன். அதையே கெடுத்திடுவீங்க போலிருக்கே! நீங்க சாப்பிடற சாப்பாடு என்னோடது. நீ போட்டிருக்கிற துணி, நான் போட்டு வேண்டாம்னு வீசி எறிஞ்சது. போதாததுக்கு இருக்க இடமும் தந்து படிக்கச் செலவும் பண்ணிட்டிருக்கேன். இதுக்கெல்லாம் நீ பண்ற உபகாரம் இதுதானா?''

ஜீவிதாவின் உடம்பிலுள்ள ரத்தமெல்லாம் முகத்தில் வந்து தேங்கிவிட்டது போல் அவமானத்தில் முகம் சிவந்து நின்றாள்.

பவானியும் மற்றத் தோழிகளும் அவளை ஒரு அற்பப் புழுவைப் போல் பார்த்தனர்.

அந்தப் பார்வையின் சூட்டை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தன் மகள் படும் வேதனையைக் கண்டு மனம் குமுறினாள் வேணி.

''ஓகே... நீங்க என்னை ஆபீஸ்ல வந்து பாருங்க... அனாதைங்களுக்கு உதவறதுன்னா எனக்கு ரொம்பப் பிடிக்கும். உங்களுக்குப் பண்ணமாட்டேனா என்ன? நீங்க கிளம்பலாம்! வேணியம்மா... சமையல் ரெடியா? அவங்கள்லாம் வர்ற நேரமாச்சு. ஜீவிதா... டைனிங் டேபிளைப் பார்... பிசுபிசுவென்று இருக்கு! நல்லா துடைச்சு வையம்மா!'' என்று கூறிவிட்டு ஒய்யாரமாய் நடந்து தன் அறைக்குச் சென்றாள் ராகினி.

கோழிக்குஞ்சாய்ச் சுருண்டு, உடல் குறுக்கி, அம்மாவின் மடியில் தலைவைத்துப் படுத்திருந்தாள் ஜீவிதா.

அழுதழுது அவள் முகமெல்லாம் வீங்கிப் போயிருந்தது.

''காலைலேர்ந்து எதுவுமே சாப்பிடலே... கொஞ்சமா மோர் சாதமாவது சாப்பிடு ஜீவிதா!''

''வேணாம்மா... எனக்கு எதுவுமே பிடிக்கலே... செத்துப் போகணும் போலிருக்கு!''

''ஜீ...வி!'' அதட்டினாள்.

''என்னடி பேச்சுப் பேசறே? என்ன நடந்துபோச்சுன்னு இப்படி பெரிய பெரிய வார்த்தையெல்லாம் பேசறே?''

''இன்னும் என்னம்மா நடக்கணும்? நம்மளைப் போய் அனாதைன்னு சொல்லிட்டாளேம்மா!''

''சொல்லட்டுமே... அவளைப் பொறுத்தவரை நாம அனாதையா தெரியறோம். அவ்வளவுதான்! அவள் குணம்தான் நமக்குத் தெரிஞ்சதாச்சே! அதைப் போய் பெரிசு பண்ணலாமா? ராகினி அசட்டுப் பிசட்டுனு பேசினாலும் அவளும் நல்லவதாம்மா! நாம யாருன்னு தெரிஞ்சும் வீட்டுக்குள்ளே சேர்த்து எல்லா உதவியும் செய்யறதோட உன்னையும் படிக்க வைக்கிறாளே... அதுக்காக நாம எப்பவும் அவளுக்கு நன்றி செலுத்தணும்!''

அம்மாவை ஆச்சரியமாய்ப் பார்த்தாள்.

நம்பிக்கை எதையும் துணிந்து செய்கிறது. அன்பு எதையும் பொறுத்துக் கொள்கிறது. அடித்தாலும் உதைத்தாலும் இவர்கள் நம் காலைதான் சுற்றிக் கொண்டிருப்பார்கள் என்கிற

நம்பிக்கை ராகினிக்கு. வயிற்றில் சுமக்காவிட்டாலும் அவளும் என் மகள்தானே என்கிற பாசம் வேணிக்கு.

''அம்மா... எப்படிம்மா உன்னால் எல்லாத்தையும் ஈஸியா எடுத்துக்க முடியுது! என்னால் முடியலேம்மா... நாளைக்கு நான் எப்படி காலேஜுக்குப் போக முடியும்? என் தோழிங்க முகத்துல எப்படி விழிப்பேன்? போதும்மா, நான் படிச்சது போதும்! நான் இனி காலேஜுக்குப் போகமாட்டேன்!''

வேணி மகளின் கண்ணீரைத் துடைத்து முதுகைத் தடவிக் கொடுத்தாள்.

''கிடைக்கிறதைப் பற்றிக் கொண்டு கரை சேர்றதுதான் புத்திசாலித்தனம். உன்னோட எதிர்கால நம்பிக்கையே படிப்புதானேம்மா! வீராப்புப் பேசி அதை இழந்திடாதே! பேசறவங்க பேசட்டும். நீ காதை மூடிக்க. நமக்கு இந்த வீராப்பெல்லாம் வேண்டாம் ஜீவிதா. ராகினி இல்லேன்னு சொன்னாலும் நீ அவளுக்குத் தங்கைதான். நான் அவளுக்குத் தாய்தான். அதை அவள் வாயாலேயே ஒத்துக்கற காலம் வரத்தான் போகுது... வாம்மா... ஒரு வாய் சாப்பிட்டுப் படுத்துக்க!'' வேணி கெஞ்சினாள்.

அம்மாவின் வார்த்தைகள் அவளுக்குத் தெளிவையும் தெம்பையும் தர, எழுந்தமர்ந்தாள் ஜீவிதா.

3

மகளை ஒருவழியாகச் சாப்பிட வைத்து உறங்க வைத்த வேணி தன் உறக்கம் தொலைத்தாள். மகளிடம் ஆறுதலாய்ப் பேசிச் சமாதானம் செய்தாளேயொழிய அவள் இதயம் முழுக்க ரணமாகிக் கிடந்ததுதான் நிஜம்.

சமையறையை ஒட்டிய அறைதான் வேணியும், ஜீவிதாவும் தங்கியிருந்தது. இவர்கள் இந்த வீட்டிற்கு வருமுன் அது பழைய சாமான்கள் போட்டு வைக்கப்பட்டிருந்த ஸ்டோர் ரூமாகத்தான் இருந்தது.

அந்த பெரிய பங்களாவில் பதினைந்து அறைகள் உள்ளன. அதில் ஒன்றை இவர்களுக்காக ஒதுக்கித் தந்திருக்கலாம் ராகினி. ஆனால், செய்யவில்லை. செய்ய மாட்டாள். இந்தவரைக்குமாவது அனுமதித்ததே பெரிய விஷயம்.

அவர்கள் இருவரும் இங்கு வந்து ஐந்தாறு வருடமாகிறது.

வேணிக்குச் சொந்த ஊர் திருநெல்வேலி. அம்மா அப்பா யாருமில்லாத வேணி தன் உறவுக்காரர் வீட்டில்தான் தங்கி... அந்த வீட்டுக் குழந்தையைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பை ஏற்றிருந்தாள்.

உறவுக்காரர் வியாபாரப் பிரமுகர். அவரைத் தேடி நிறையப் பிரமுகர்கள் வீடு தேடி வருவதுண்டு.

அப்படி வந்தவர்தான் சாமியப்பன். பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிக்கும் கம்பெனி நடத்தி வருபவர். சென்னையில் கொடி கட்டிப் பறக்கும் தொழிலதிபர்களில் ஒருவர். அவருக்குத் தனலட்சுமி என்ற அழகான மனைவியும், ராகினி என்கிற ஐந்து வயதுக் குழந்தையும் இருந்தனர்.

சாமியப்பன் நல்லவர்தான். அவரைவிடத் தனலட்சுமியும் நல்லவள்தான். ஆனால், ஒரே ஒரு கெட்ட குணம். பணத் திமிரில் யாரையும் மதிக்காமல் தூக்கியெறிந்து பேசுவதுதான். சாமியப்பன் எவ்வளவோ சொல்லிப் பார்த்துவிட்டார். கேட்பதாயில்லை. வேலைக்காரி ஒரு சிறு தவறு செய்து விட்டாலும் கையை நீட்டி அறைந்து விடுவாள் தனலட்சுமி.

சாமியப்பன் ஏழையோ, பணக்காரனோ, எல்லோரையும் ஒன்றுபோல் சமமாய்ப் பாவிக்கும் குணமுடையவர். இதன் காரணமாகவே அடிக்கடி அவருக்கும், மனைவிக்கும் பிரச்னைகள் வரும்.

வியாபார நிமித்தமாக அடிக்கடி வெளியூர்ப் பயணங்கள் மேற்கொள்ளும் சாமியப்பன் முதன் முறையாகத் திருநெல் வேலி வந்தபோது... அந்த உறவுக்கார வீட்டில்தான் முதன் முதலாக வேணியைப் பார்த்தார்.

எளிமையான அழகு. உடுத்தியிருப்பது பழையதானாலும் சுத்தமாயிருந்தது. கனிவான பேச்சு, உதட்டிற்குள் மறைந்திருக்கும் புன்னகை, பண்பான குணம்...அவரை மறுபடி மறுபடி வரச் சொன்னது.

காதல் காற்றைப் போல... தடுத்து நிறுத்தினாலும் இண்டு இடுக்கில் புகுந்தாவது தான் நினைத்ததைச் சாதித்துவிடும்.

எப்படி ஆரம்பித்து, எங்கே முடிந்தது என்று உணர்வதற் குள் எல்லாமே நிகழ்ந்துவிட்டது. வேணி வயிற்றில் கரு வளரத் தொடங்கியது.

மற்றப் பணக்காரர்களைப் போல், அவளை ஏமாற்றிவிட நினைக்கவில்லை. அவளைச் சென்னைக்கே அழைத்துவந்து தனியே ஒரு சின்ன வீட்டைப் பார்த்துக் குடிவைத்தார்.

ஜீவிதா பிறந்தாள்.

மூடிமறைக்கிற விஷயமா இது? தனலட்சுமியின் காதுவரை எட்டியபோது தாம் தூமென்று குதித்தாள்.

பின்னே?

எவ்வளவுதான் அரக்கியாய் இருந்தாலும் புருஷனை விட்டுத் தருவாளா?

சாமியப்பன் அவள் ஆடி முடிக்கட்டும் என்று அமைதி காத்தார்.

தனலட்சுமிக்கோ பேசிப் பேசி அலுப்புத் தட்டிவிட்டது.

இனிப் பேசி மட்டும் என்னாகப் போகிறது? அதுதான் குழந்தை எல்லாம் பிறந்து விட்டதே!

ஆனால், ஒருவகையில் சந்தோஷப்பட்டாள். சொத்தில் இருந்து சல்லிக்காசுகூட அவர்களுக்குப் போய்ச் சேராது.

வருமானவரிக் கணக்கு காட்டவென்று சாமியப்பன் எல்லாச் சொத்துக்களையும் தனலட்சுமி பெயரிலேயே எழுதி வைத்திருந்தார். கம்பெனிகளின் சேர்மன் என்று தனலட்சுமி பெயரில்தான் இயங்கிக் கொண்டிருந்தார். அவருக்கே அவசரப் பணத் தேவை எனில் தனலட்சுமியிடம்தான் கையெழுத்து வாங்க வேண்டும்.

வேணி பணம் கேட்டு அவரை என்றுமே தொந்தரவு செய்ததில்லை. கொடுப்பதைக் கொண்டு எளிமையாய்க் குடும்பம் நடத்திக் கொண்டிருந்தாள். வாரத்திற்கு இரண்டு நாட்கள் வந்து போவார் சாமியப்பன். ஜீவிதா பெயரில் ஒரு ஐந்து லட்சமாவது வங்கியில் போட்டு வைக்க வேண்டும் என்று தனலட்சுமிக்குத் தெரியாமல் பொய்க் கணக்குக் காட்டிச் சேமிக்கத் துவங்கியிருந்தார்.

நாட்கள் விரைந்தன. ராகினி வளர்ந்து பெரியவளாகி விபரம் தெரிய ஆரம்பித்தபோது... தன் முதல் எதிரியாய்ப் பாவித்ததே வேணியையும், ஜீவிதாவையும்! பார்க்காமலேயே அவர்கள் மேல் துவேசம் வளர்த்துக் கொண்டாள். அம்மாவுக்கும்,

அப்பாவிற்கும் அடிக்கடி சண்டை வருவதற்கும் வீட்டின் அமைதி யின்மைக்கும் முழு முதற் காரணம் இவர்கள்தான் என்பதையறிந்து அப்பாவைக் கூட வெறுக்க ஆரம்பித்தாள்.

தனலட்சுமி ஒருபடி மேலே போய் எப்படியோ மோப்பம் பிடித்துக் கணவன் தன்னிடம் பொய்க் கணக்குக் காட்டிப் பணம் சுருட்டுவது எதற்காக என்பதறிந்து பயங்கரமாய்ச் சண்டை போட்டாள்.

சீ போ என்றாகிவிட்டது சாமியப்பனுக்கு. தான் செய்தது தவறுதான். இல்லையென்று நியாயம் கற்பிக்க வரவில்லை. கண் பார்வையில் கோளாறு இல்லை யென்றால்... ஏன் வைத்தியரைத் தேடிப் போகப் போகிறோம்? மனைவி என்பவள் மனைவியாக மட்டுமே நடந்து கொண்டால் போதாது. நல்ல மனுஷியாகவும் நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் நியாயம்தானே?

எதிர்பார்த்த இடத்தில் கிடைக்காத ஏதோ ஒன்று எதிர்பாராத இடத்தில், எதிர்பார்க்காத நேரத்தில் கிடைத்தால் ஏற்றுக் கொள்வது மனித இயல்பு.

அதேநேரம் வேணிக்குத் தான் இழைத்தது மிகப்பெரிய துரோகம் என்பதைச் சாமியப்பன் நன்றாகவே அறிந்திருந்தார். தன்னை நம்பித் தன்னையே ஒப்படைத்து ஒரு குழந்தைக்கும் தாயான அபலைப் பெண்ணைக் கைவிடச் சாமியப்பனின் மனம் துணியவில்லை. செய்த தவறுக்காக, தனலட்சுமி பேச்சால் வறுத்தெடுக்கும் போது தலை கவிழ்ந்து, வாய்மூடி அடங்கியே கிடந்தார்.

"மன்னிச்சிடு வேணி! உங்க ரெண்டு பேருக்கும் நிரந்தர வருமானத்துக்காக ஏதாவது பண்ணணும்னு நினைக்கிறேன்.

ஆனா முடியலே! பெரிய தொழிலதிபர்னு பேரு. ஆனா எனக்கென்று சொந்தமா ஏதுமில்லே!'' சாமியப்பன் உள்ளம் நொந்து கொண்டார்.

''என்னங்க நீங்க, பணம் காசா முக்கியம்? எனக்கும் என் பொண்ணுக்கும் உங்க இனிஷியல் கிடைச்சுதே... அதுவே பெரிய சொத்துதானே. நான் உங்ககிட்டேர்ந்து எதையும் எதிர்பார்க்கலேங்க... நீங்க நீண்ட ஆயுளோட நோய் நொடியில்லாம இருந்தா... அதுவே போதுங்க!''

''வேணி! நீ எவ்வளவு நல்லவள் தெரியுமா? உன் மனசுக்குள்ளே எவ்வளவோ ஆசைகள் இருக்கும். அதை எல்லாம் வெளிக்காட்டிக்காம என் மன ஆறுதலுக்காகவே பேசறே! எல்லாரையும் போலத்தானே உனக்கும் புருஷனோட கோவில், குளம், சினிமா, பீச்சுனு போகணும்னு ஆசை யிருக்கும்? அதை யெல்லாம் நிறைவேத்த முடியாத நிலைமையில் நான் இருக்கேன் வேணி. என்னை மன்னிச்சிடும்மா...''

''என்னங்க இது... பெரிய வார்த்தையெல்லாம் பேசிக்கிட்டு! உங்க அன்பே போதும் எங்களுக்கு! உங்க சூழ்நிலை எனக்கும் தெரியும். நடக்காததை நினைச்சு ஆசைப்படற ரகமில்லே நான்! தெருவிலே தலைநிமிர்ந்து நடக்கற அளவுக்கு என் கழுத்திலே தாலி கட்டி ஒரு மரியாதையைக் கொடுத்திருக்கீங்களே... அதுவே போதுங்க!'' என்று வேணி நெகிழ்ந்து போவாள்.

''நம்ம வீட்டையே சனி பிடிச்சி ஆட்டுது... நாளைக்கு நாம திருநள்ளாறு போகிறோம்,'' என்றாள் தனலட்சுமி.

''நிறைய வேலை இருக்கு லட்சுமி... அடுத்த வாரம் போகலாம்,'' என்று மறுத்தார் சாமியப்பன்.

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. எந்த வேலையா இருந்தாலும், தூக்கி மூலையில கடாசிட்டு என்கூட வந்தே ஆகணும்!'' பிடிவாதம் பிடித்தாள்.

அதற்கு மேல் தன் பேச்சு எடுபடாது என்று அவருக்குப் புரிந்தது. அதுவும் கோவிலுக்கு அழைக்கிறாள். மறுப்பது சரியல்ல எனப் புரியவே தலையாட்டிவிட்டார்.

கூடவே ராகினியும் செல்வதாகத்தான் ஏற்பாடு. ஆனால், மறுநாள் வீட்டுக்குத் தூரமாகிவிட்டதால் ராகினி வீட்டிலேயே இருந்து விட்டாள்.

''ராகினி வராம, நாம மட்டுமா? அடுத்த வாரமே போகலாமே லட்சுமி...''

''வாயை மூடிக்கிட்டு சும்மாயிருங்க. ராகினி வரலேன்னா என்ன? நாம போகிறோம். அவளுக்கு எக்ஸாம் நெருங்குது. அவள் இங்கேயே இருந்து படிக்கட்டும்,'' என்று தரதரவென்று இழுத்துச் செல்லாத குறையாக அவரை அழைத்துச் சென்றாள் தனலட்சுமி.

காரில் பயணம்.

ஆனால், தனலட்சுமி விரும்பியபடி கோவிலுக்குச் செல்லவில்லை. மேல் உலகத்திற்குத்தான் சென்றனர். குடித்துவிட்டுக் கண்மண் தெரியாமல் எதிரே வந்த லாரி பிரேக் செயலிழந்து இவர்கள் சென்ற கார் மீது மோதி அப்பளமாய் நசுக்கிவிட்டே அடங்கியது.

டிரைவர் உட்படச் சாமியப்பனும், தனலட்சுமியும் உருத் தெரியாமல் சிதைந்து போயினர்.

ராகினி துடித்துப் போய்விட்டாள்.

வேணியின் நிலைமையோ அதைவிட மோசம். ராகினிக்கு அப்போது இருபது வயது. ஜீவிதாவுக்குப் பதினான்கு.

அந்த துயரத்திலும் வேணியின் மனம் ராகினியை நினைத்தே வருந்தியது.

வருவது வரட்டும் என்று ராகினிக்கு ஆறுதல் சொல்ல முதன் முதலாக அந்த வீட்டிற்குச் சென்றாள்.

அவர்களைப் பார்த்ததும் அடிவயிற்றிலிருந்து நெருப்பு தகித்தது.

இவளா? அப்பாவின் வாழ்க்கையில் பங்கு போட்டவளா? அப்படியென்ன இருக்கிறது இவளிடம்? அது யார் இவளைப்போலவே! அவள் பெண்ணோ? இவர்களால்தானே அப்பாவும் அம்மாவும் சண்டை போட்டார்கள்? வீடு ரணகளமானது?

இவர்களைச் சும்மாவிடக் கடாது. அம்மா... உன்னால் முடியாததை நான் செய்யப் போகிறேன்! நீ கற்றுத் தராத பாடத்தை நான் இவர்களுக்குக் கற்றுத்தரப் போகிறேன். நான் யார் என்பதை அவர்களுக்கு உணர்த்தப்போகிறேன்.

இருந்தவரை நிம்மதியில்லாமல் தவித்தாய். அதற்காக உன் ஆத்மாவைச் சாந்தப்படுத்தப் போகிறேன். உன் வாழ்க்கையில் பங்கு போட்டவளைப் பழிவாங்குகிறேன். பார்த்துக் கொண்டேயிரு!' பெற்றோர் இறந்த துயரத்தைவிட வேணியைப் பழிதீர்க்கும் துவேசம்தான் தூக்கலாய் இருந்தது.

''கவலைப் படாதேம்மா... நடந்ததையே நினைச்சு உடைஞ்சு போயிடாதே! அம்மாவும், அப்பாவும் எப்பவும் உன்கூடவே இருப்பாங்க. உனக்கு யாருமே இல்லேன்னு கலங்காதே! நான்

இருக்கேன். நானும் உனக்கு அம்மாதான். இந்த அம்மா உனக்காக என்ன வேணும்னாலும் செய்யத் தயாராயிருக் கிறேன்!''

இதமாய்த் தலையை வருடி ஆறுதல் சொன்ன வேணியின் தொடுகையைக் கஷ்டப்பட்டுச் சகித்துக் கொண்டாள் ராகினி. வாயைத் திறந்து ஒன்றுமே பேசவில்லை. என்றாலும் அவள் மூளை வேகமாய்த் திட்டம் போட்டுக் கொண்டிருந்தது.

வேணி கிளம்பி விட்டாள் மகளுடன்.

அவர் இருந்தவரை சிரமம் தெரியவில்லை. இப்போது பிரச்னை பூதாகரமாய்த் தெரிந்தது. உடலில் இருந்த கொஞ்சநஞ்ச நகைகளை விற்று இருவர் பசியைப் போக்கிக் கொண்டாள் வேணி. இருக்கிற அரிசி ஐந்து நாட்களுக்கு வரும்.

அதன் பிறகு...?

என்ன செய்யப் போகிறோம்? அதுவும் ஒரு பெண் குழந்தையை வைத்துக் கொண்டு? அடுத்த மாதம் வீட்டிற்கு வாடகை தரக்கூடப் பணமில்லையே!

அரண்டு போய்விட்டாள் வேணி.

அப்போதுதான்... தெய்வமே நேரில் வந்ததுபோல் ராகினி அனுப்பிய வேலையாள் வந்து நின்றான்.

''சின்னம்மா உங்களை மூட்டை முடிச்சுகளைக் கட்டிக்கிட்டு பங்களாவுக்கே வந்துடச் சொன்னாங்க!''

வேணிக்கு அவளைக் கையெடுத்துக் கும்பிடணும் போலிருந்தது.

மறுக்கக்கூடிய நிலையிலா அவளிருந்தாள்?

''வர்றேன்ப்பா,'' என்று அவனை அனுப்பிவிட்டுத் துணிமணிகளை அடுக்கத் தொடங்கினாள்.

ஜீவிதாவிற்கு இந்த ஏற்பாடு பிடிக்கவில்லை.

''அம்மா... அந்த வீட்டுக்குப் போக வேண்டாம்மா! இங்கேயே இருந்துடலாம்மா! அந்தக்கா... பேரென்ன ராகினியா? அவங்களைப் பார்த்தாலே பயமாயிருக்கும்மா!''

''ஏம்மா பயப்படறே? அக்கா நல்லவ! அதனால்தானே நம்மளை அவங்க வீட்டுக்கே கூப்பிடறா! நாம் இருக்கிற நிலைமையில் மறுக்கற மாதிரி இல்லைம்மா. சொல்லப் போனா... அவள் எப்ப கூப்பிடுவாள்னு நான் காத்துக்கிட்டி ருந்தேன். பசியை நான் பொறுத்துக்குவேன். சின்னப்பிள்ளை, நீ தாங்குவியா? வீட்டுக்கு வாடகை தரக்கூடப் பணமில்லே ஜீவிதா. அடுத்த மாசம் நடுத்தெருவிலேதான் நிக்கணும். நாலு சுவரில்லாம பொம்பளைங்களால் மானத்தோட வாழ முடியாதும்மா!''

''அம்மா... நாம ரெண்டு பேரும் அப்பா மாதிரியே செத்துப் போயிடலாமா?''

பதறிப்போய் மகளை இழுத்தணைத்துக் கொண்டாள்.

''ஏம்மா இந்த மாதிரி எண்ணமெல்லாம் உனக்குள்ளே வருது? இதுதான் தீர்வுன்னா... என்னைப் பெத்தவங்க என்னை அனாதையாக்கிட்டுப் போனப்ப நானும் செத்துப் போயிருப்பேனே! தப்புடா கண்ணு! இந்த மாதிரி யோசிக்கிறதே தப்பு! ஒவ்வொரு மனுஷனுக்கும் ஒரு பொறுப்பை ஒப்படைச்சுதான் கடவுள் இந்தப் பூமிக்கு அனுப்பி வைக்கிறார். அதை நிறைவேத்தாம போறது கோழைத்தனம். உங்கப்பாவைச் சந்தோஷமா வச்சிருந்தேனே... அதுவும்

கடவுள் எனக்குத் தந்த வேலைதான். உன்னை எனக்கு ஏன் மகளா அனுப்பி வைச்சான் தெரியுமா? உன்னை நல்லபடி வளர்த்து நல்ல நிலைமைக்கு ஆளாக்கத்தான். அதுக்குப்பிறகு உனக்கென்று கடமைகள் காத்திருக்கும். இதுதான் பரிணாம வளர்ச்சி! தளர்ந்துபோகாதே! கஷ்டப்படாம கிடைக்கிற சந்தோஷத்திலே திருப்தியில்லே கண்ணு. வாழ்க்கை நதி மாதிரி... ஓடிக்கிட்டே இருக்கும். நாமும் அதுகூடவே... அதன் போக்குல ஓடித்தான் ஆகணும். நமக்குன்னு தனியா எந்தப் பாதையும் இல்லே! விதி காட்டிய வழிதான் நடந்தாகணும். கிளம்புடா!''

23219

அம்மா சொன்ன எதுவும் ஜீவிதாவிற்குப் புரியாவிட்டாலும் கிளம்பினாள், அம்மாவுக்காக.

ஏனோ, ராகினியைப் பார்த்தாலே சர்வமும் நடுங்குகிறது ஜீவிதாவிற்கு.

அவள் எதிர்பார்த்தபடிதான் நடந்தது. வேணி எதிர்பாராதது நடந்தது.


அங்கு சென்றபிறகுதான் ராகினி அவளை அம்மாவாக இருக்க வரச் சொல்லவில்லை. வேலைக்காரியாக இருக்கவே வரச் சொன்னாள் என்று புரிந்தது.

வேணிக்கு மனசு வலித்தது. என்றாலும் ஏற்றுக் கொண்டாள்.

அவர்களுக்கு ஸ்டோர் ரூமையே ஒதுக்கித் தந்தாள். வீட்டிலிருந்த நான்கு வேலைக்காரர்களையும் பணியிலிருந்து நிறுத்தினாள். தோட்டக்காரனையும் நிறுத்திவிட்டு ஜீவிதா விற்கு அந்தப் பணியைத் தந்தாள்.

அவள் உடுத்திப் பழசான உடைகளே ஜீவிதாவுக்குத் தரப்பட்டன.

மொத்தத்தில் அந்த வீட்டில் இரண்டு வேலைக்காரிகளாய் மாறிப் போயினர் இருவரும்.



ஜீவிதா பெட்டியில் இருந்த டிரஸ்ஸையெல்லாம் கிளி மாதிரி ஒவ்வொன்றாய் எடுத்துப் போட்டுக் கொண்டிருந்தாள்.

உள்ளே நுழைந்த வேணி புருவம் மேலேற மகளின் அருகில் வந்தாள்.

''ஜீவி... என்னம்மா இது? ஏன் எல்லா டிரஸ்சையும் எடுத்து இப்படிப் பரப்பி வைச்சிருக்கே?''

''அம்மா... உட்காரேன், சொல்றேன்!'' அம்மா கையைப் பற்றி இழுத்து அருகில் அமர்த்தினாள்.

''என்னம்மா?''

''இன்னும் ரெண்டு நாள்ல காலேஜ்ல சென்ட் ஆப்!''

''அப்படின்னா?''

''பிரிவு உபசார விழான்னு அர்த்தம்! அந்த பங்சனுக்கு உடுத்திக்கிட்டுப் போக நல்ல டிரஸ்சே இல்லேம்மா!''

''இந்த மயில் கலர் டிரஸ்சைப் போட்டுக்கோயேன். என் தங்கம் மயில் மாதிரியே இருப்பியே!''

''மயிலோட சாயம் வெளுத்துப் போச்சும்மா. பழசாயிடுச்சு... இந்த சுரிதார் வேண்டாம்!''

''அப்ப இது?'' சந்தன நிறச் சுரிதாரை எடுத்துக் காட்டினாள்.

''இதெல்லாமே ராகினி போட்டு அலுத்து எனக்குக் கொடுத்த டிரஸ். எல்லாமே பழசும்மா! எனக்குச் சுரிதார் எதுவும் வேண்டாம். பட்டுச் சேலை வேணும்!''

''பட்டுச் சேலையா?'' வாயைப் பிளந்தாள் வேணி.

''ஆமாம்மா... அந்த பங்சனுக்கு காலேஜ்ல எல்லாருமே பட்டுச் சேலை கட்டிட்டு வரணும்னு எங்க கிளாஸ்ல முடிவு பண்ணியிருக்கோம். அத்தனை பேரும் சொன்ன மாதிரி வருவாங்க. நானும் அதேமாதிரிப் போகலேன்னா... என்னை ரொம்ப மட்டமா நினைச்சுப்பாங்கம்மா! ஏற்கெனவே ராகினியால் என் பிரண்ட்ஸ் அத்தனை பேருக்கும் விசயம் தெரிஞ்சு... என் முதுகுக்குப் பின்னாலே கிண்டல் பண்ணிப் பேசறாங்க. படிப்பு முடியட்டும்னு பல்லைக் கடிச்சிக்கிட்டு போயிட்டிருக்கேன். இந்த நேரத்திலே நான் மட்டும் பழைய டிரஸ்லே போய் நின்னேன்னா... ரொம்ப கிண்டல் பண்ணுவாங்கம்மா!'' குரல் இளகிக் கமறலாய் வந்தது.

வேணி நெக்குருகிப் போனாள்.

ஜீவிதா... இதுவரை இது வேண்டும், அது வேண்டும் என்று எதையும் ஆசைப்பட்டுக் கேட்டதில்லை. முதன்முறையாகக் கேட்கிறாள். பாவம், அவள் ஆசையும் நியாயமானதுதானே?

எல்லாப் பிள்ளைகளும் பட்டும் பகட்டுமாய் வரும்போது இவள் மட்டும் பழையதை உடுத்திக்கொண்டு நின்றால் கிண்டல் பண்ண மாட்டார்களா? அந்த நேரத்தில் என் மகளின் மனசு என்ன பாடுபடும்? இப்போது என்ன செய்வது? செய்வதறியாது மகளைப் பார்த்தாள்.

''சொல்லும்மா... இப்ப என்ன பண்றது?''

''அதாம்மா எனக்கும் புரியலே!''

''அம்மா... நான் ஒண்ணு சொன்னா கேப்பியா?''

''உனக்காக அம்மா எதை வேணும்னாலும் செய்யக் காத்திருக்கிறேன். சொல்லுடா... என்ன செய்யணும்?''

''ராகினிகிட்டே விதவிதமா நிறையப் பட்டுச்சேலை இருக்கு. அதுல ஒண்ணு கேளும்மா! கட்டிட்டுத் திருப்பிக் கொடுத்திடறேன்!''

''ராகினிகிட்டேயா?'' எச்சில் கூட்டி விழுங்கினாள் வேணி.

''பிளீஸ்மா... எனக்காக!'' கெஞ்சினாள்.

ஜீவிதாவைப் பார்க்க அவளுக்குப் பரிதாபமாய் இருந்தது.

''சரிடா... உனக்காக நான் அவகிட்டே கேக்கறேன்.''

அம்மா அப்படிச் சொன்னதும் சந்தோசம் தாங்காமல் அவளின் கழுத்தைக் கட்டிக் கொண்டு கன்னத்தில் முத்தமிட்டாள்.

ராகினி சாப்பிட்டுக் கொண்டிருக்க... அருகிலேயே நின்றபடி பார்த்துப் பார்த்துப் பரிமாறிக் கொண்டிருந்தாள் வேணி.

''இன்னும் கொஞ்சம் சாதம் போட்டுக்கம்மா!''

''போதும்... போதும்! மோர் விடு!''

மோரைக் கலக்கி விட்டாள்.

''கொஞ்சம் உப்புப் போடு!''

வேணி தயங்கினாள்.

''நீயே எடுத்துப் போட்டுக்கம்மா!''

''ஏன் நீ போட்டா குறைஞ்சு போயிடுவியா?''

''ஐயோ... அதுக்கில்லேம்மா... என் கையால் உப்புத் தரக்கூடாது. உறவு அறுந்து போயிடும்னு சொல்வாங்க!''

அதைக்கேட்டு வாய்விட்டுச் சிரிக்க ஆரம்பித்தாள் ராகினி. கண்ணில் நீர் வருமளவு சிரித்தாள்.

வேணி பதைத்துப் போனாள்.

''ரா...கி...னி... சாப்பிடற நேரத்திலே இப்படிச் சிரிக்காதேம்மா... பொரை ஏறிக்கப் போகுது!'' நிஜமான பாசத்துடன் அக்கறையுடன் சொன்னாள்.

''பின்னே... சாப்பிடறப்ப நீ ஜோக்கடிக்கிறியே... சிரிக்காம என்ன பண்றதாம்? என்ன சொன்னே? உறவு அறுந்து போயிடுமா? நீ யாரு? நான் யாரு? நமக்குள்ளே என்ன உறவு இருக்கு. அறுந்து போறதுக்கு? ரப்பிஷ்!'' மறுபடி சிரித்தபடி சாப்பிட ஆரம்பித்தாள்.

அந்தப் பதிலில் முகம் வாடிப் போனது வேணிக்கு.

சாப்பிட்டு முடிந்ததும் வேணி நீட்டிய தண்ணீர் அடங்கிய கிண்ணத்திலேயே கையைக் கழுவிக் கொண்டாள். அவள் நீட்டிய டவலில் கையைத் துடைத்தபடி எழுந்து கொண்டாள்.

வேணி அவள் பின்னேயே சென்றாள்.

''ரா...கி...னி!''

திரும்பினாள்.

''என்ன?''

''உன்கிட்டே ஒண்ணு...''

''என்ன விசயம்னு சட்டுப் புட்டுனு சொல்லி முடி!''

''ஜீவிதாவோட காலேஜ்ல ஏதோ விழாவாம்!''

''அதுக்கென்ன?''

''எல்லாரும் பட்டுச் சேலை கட்டிக்கிட்டு வருவாங்களாம். இவள் உடுத்திக்கிட்டுப் போக ஒரு சேலைகூட இல்லை. அதனால்...''

''அதனால்...?'' அலட்சியமாய் அவளைப் பார்த்தாள்.

''ஒரு சேலை கொடுத்தால்... ஜீவிதா கட்டிக்கிட்டுப் போவா! வந்ததும் கழற்றித் துவைச்சிக் கொடுத்திடுவா!''

''என்னது? அவள் கட்டித் துவைச்சி நான் உடுத்தணுமா? இதைச் சொல்ல எவ்வளவு தைரியம் வேணும்? அளவுக்குமீறி ஆசைப்படக் கூடாதுன்னு உன் பொண்ணுகிட்டே சொல்லி வை! பழசைக் கட்டிப் பழகினவளுக்குப் பட்டு உடுத்த ஆசை கூடாது. தலைக்கு நிழலும், வயித்துக்குச் சாப்பாடும் கிடைக்குதேன்னு சந்தோசப்படுங்க. ஆசைப்படறதுக்கும் ஒரு தகுதி வேணாமா? துடைப்பக் கட்டைக்குப் பட்டுக்குஞ்சம் தேவைப்படுதா?'' ஆசிட் வார்த்தைகளை வீசியெறிந்தாள் ராகினி.

உறைந்து போயிருந்த வேணிக்குக் கண்கள் உடைப் பெடுத்துக் கொண்டன.

அவர்கள் பேசியதெல்லாம் மறைவிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த ஜீவிதா துடித்துப் போய் விட்டாள்.

''அம்மா... நான் நல்லாயிருக்கேனா? மயில் மாதிரி?'' அம்மா முன் வந்து நின்று கேட்டாள் ஜீவிதா.

மயில் கலர் சுரிதாரில் கோலமயில் போல்தான் இருந்தாள்.

''உனக்கு எதைப் போட்டாலும் நல்லாவே இருக்கும். இன்னைக்குத்தான் காலேஜ்ல விழா இல்லையா ஜீவி?''

''ஆமாம்மா!''

''எல்லாரும் பட்டுச் சேலையிலே வருவாங்களேம்மா!''

''இருக்கட்டுமே... நான் ஒரு மாறுதலுக்கு இந்த டிரஸ்ல போறேன்!''

''கிண்டல் பண்ணுவாங்களே ஜீவி!''

''ப்ச்... பேசறவங்க பேசட்டும்! பட்டும், பகட்டும்தான் மனுசனுக்கு மரியாதை வாங்கித் தரும்னா... அந்த மரியாதை எனக்கு வேண்டாம்மா! நான் வர்றேம்மா... நேரமாகுது!''

''போய்வா!'' என்று வழியனுப்பி வைத்தாள் வேணி.

போகும் மகளை நெஞ்சம் குமுறப் பரிதாபமாய்ப் பார்த்தாள்.

'என் குழந்தையைக் கிண்டல் பண்ணி வேதனைப்படுத்தப் போகிறார்களே!' என்கிற பதைப்பு இருந்தது.

ஆனால், ஜீவிதா கல்லூரிக்குச் செல்லவில்லை. யூனிவர் ஸிட்டி லைப்ரரிக்குள் சென்றமர்ந்து கொண்டு, மாலை நேரத்திற்காகக் காத்திருந்தாள்.

கல்லூரிக்குச் சென்று மற்றவர்களின் கேலிப் பார்வைக்கு ஆளாகவும் அவள் மனம் இடம் தரவில்லை. வீட்டி லிருந்தால்... அம்மாவின் மனம் கஷ்டப்படும் என்பதனால் விழாவிற்குப் போவதாகப் போக்குக் காட்டிவிட்டு இங்கு வந்துவிட்டாள்.

கொடிது... கொடிது... இளமையில் வறுமை கொடிது என்று சும்மாவா சொன்னார்கள்?

''அம்மா...''

''என்னடா?''

''கொஞ்சம் பிளாஸ்க்ல டீ போட்டு வைச்சிடறியா?''

''ஏம்மா?''

''எக்ஸாமுக்கு இன்னும் பத்து நாள்தாம்மா இருக்கு! படிக்கணும்!''

''நைட்டெல்லாம் தூங்காம கண் விழிச்சிப் படிச்சு உடம்பைக் கெடுத்துக்காதே ஜீவி!''

''இல்லேம்மா... நான் படிக்கணும். முதல் வகுப்புல பாஸ் பண்ணணும். பண்ணுவேன். ராகினிக்குத் தெரியாமே நான் படிச்சிட்டிருக்கிற கம்ப்யூட்டர் கோர்ஸும் முடியப்போகுது. இந்த ரெண்டு குவாலிபிகேஷன் போதும்மா! எனக்கு நிச்சயமா ஒரு நல்ல வேலை கிடைக்கும். அப்ப... உன்னை நான் ராணி மாதிரி வைச்சுக் காப்பாத்துவேம்மா... இந்த வீட்டை விட்டு நாமவேற எங்கேயாச்சும் போய் சந்தோசமா இருக்கலாம்மா!'' கண்களில் கனவு மின்னச் சொன்னாள் ஜீவிதா.

வேணி பதில் கூறாமல் புன்னகைத்தாள்.

''அம்மா, இன்னொரு விசயம்!''

''என்ன, சொல்லு...'

''எக்ஸாம் பீஸ் கட்டணும். கடைசி நாளுக்கு இன்னும் ரெண்டு நாள்தான் பாக்கியிருக்கு. எல்லாரும் கட்டியாச்சு. நான் மட்டும்தான் கட்டலே! ராகினிகிட்டே கேட்டியாம்மா!''

''நேத்துகூடக் கேட்டேன் ஜீவிதா! பார்க்கலாம்னு தலையாட்டினா! இத்தனை நாளா, படிப்புக்குன்னு கேட்டா மறு கேள்வி கேக்காம தந்திடுவா! இப்ப என்னவோ ரொம்ப யோசிக்கிற மாதிரி தெரியுது.''

''இப்ப என்னம்மா பண்றது?'' கலக்கம் கண்களில் மிகுந்திருந்தது.

''பயப்படாதே... நாளைக்கு நான் அவள்கிட்டே பேசறேன்!'' என்றாள் ஆறுதலாக வேணி.

மார்போடு புத்தகங்களை அணைத்தபடி ஜீவிதா வாசலில் நின்றிருக்க... வேணி ராகினியின் அறைக்குள் சென்றாள்.

ஹேர்டிரையரால் கூந்தலை உலர்த்திக் கொண்டிருந்த ராகினி இவர்களைக் கவனிக்கத் தவறவில்லை.

''என்ன... என்ன விஷயம்?'' என்றாள் ராகினி.

''வந்து... பரீட்சை நெருங்குதாம். பீஸ் கட்டணுமாம்... நாளைக்குக் கடைசி நாளாம்!''

''அதனால என்ன?''

''பீஸ் கட்டப் பணம்...!'' என்றிழுத்தாள்.

''என்ன... அம்மாவும் பொண்ணும் சேர்ந்து விளையாட றீங்களா? இங்கே என்ன பணம் கொட்டியா கிடக்கு? கேக்கறப்பவெல்லாம் அள்ளிக் கொடுத்திட்டிருக்க? இதுவரை கொடுத்ததே அதிகம். இனி என்னால தரமுடியாது!'' என்றாள் திடமாய்.

''ராகினி... அப்படிச் சொல்லாதேம்மா! இதுதான் கடைசி. பரீட்சை எழுதி பாஸ் பண்ணிட்டாள்னா ஒரு வேலைக்குப்

போய்த் தன் எதிர்காலத்துக்குன்னு நாலு காசு சேர்த்துப்பா... கைவிட்ராதே ராகினி. உன்னைக் கெஞ்சிக் கேட்கறேன்!''

''உங்களை இந்த வீட்லே சேர்த்ததே தப்புன்னு இப்ப புரியுது. வேலைக்காரி மகளுக்கென்ன பட்டப் படிப்பு கேக்குதா? படிச்சவரைக்கும் போதும். வேலைக்குப் போகணும்னு ஆசைப்பட்டா... நாட்லே எத்தனையோ எக்ஸ்போர்ட் கம்பெனி இருக்கு. அங்கே போகச் சொல்லு! நீங்க கெஞ்சினாலும் மிஞ்சினாலும் ஒத்தை ரூபாகூடத் தரப் போறதில்லே. தொந்தரவு பண்ணாம வெளியே போயிடுங்க!'' வாசலை நோக்கிக் கையைக் காட்டினாள்.

தொய்ந்து போய் வெளியேறிய வேணியையும், ஜீவிதாவையும் பார்த்து ராகினி வில்லித்தனமாய்ச் சிரித்துக் கொண்டாள்.

ஜீவிதாவின் கன்னம் தாண்டிக் கண்ணீர் வழிந்தது.

''அம்மா... பயமாயிருக்கும்மா!'' எதிர்காலம் பற்றிய பயத்தில் கை நடுங்கியது.

''கவலைப்படாதே... அம்மா இருக்கேன்.'' மகளின் கையைப் பற்றிக் கொண்டாள்.

''எப்படிம்மா உன்னால் முடியும்? ராகினி ஏம்மா இப்படி பண்ணிட்டா? இவ்வளவு நாளா என் படிப்புக்கு அவள்தானே செலவு பண்ணினா! இப்ப கொடுக்கலேன்னா... இது நாள் வரைக்கும் பட்ட அவஸ்தையெல்லாம் அர்த்தமே இல்லாமல் போயிடும்மா! பொங்கி வர்ற நேரத்திலே தாழியை உடைக்கிறாளே... இப்ப என்னம்மா பண்றது?''

''அம்மா இருக்கேன்னு சொல்றேனில்லே? அழாதே... நீ பரீட்சை எழுதறே! இப்படி வா...!'' என்று மகளைத் தங்கள் அறைக்கு அழைத்துச் சென்றாள், வேணி.

அலுவலகத்தில் வேலை அதிகம் என்றதால் கடந்த ஒரு வார காலமாகவே சீக்கிரமாய் அலுவலகம் சென்று கொண்டி ருந்தாள், ராகினி.

அன்று ஜீவிதாவிற்குக் கடைசிப் பரிட்சை.

டென்ஷனோடு கடவுளை வணங்கிப் புறப்பட்டு விட்டிருந் தாள்.

புத்தகமும் டென்ஷனுமாய் கேட் தாண்டி விரைந்து சென்றவளை மாடி பால்கனியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த ராகினி குழம்பினாள்.

'இவ எங்கே போறா? கையிலே புக்ஸ் வேற இருக்குதே! காலேஜுக்கா? நான்தான் பணம் தரலையே... அப்புறம் எப்படி?'' எரிச்சலுடன் யோசித்தவள் கீழே இறங்கி வந்தாள்.

வேணியின் முன் நின்றாள்.

''என்னம்மா? என்ன வேணும்னு கேட்டிருந்தா நானே கொண்டு வந்திருப்பேனே!''

''ஜீவிதா எங்கே போறா?''

''காலேஜுக்குத்தான். இன்னைக்குத்தான் கடைசிப் பரீட்சையாம்!''

''பீஸ் கட்ட நான்தான் பணம் தரலையே... அப்புறம் எப்படி?''

''.....''

''கேக்கறது காதிலே விழுதா, இல்லையா?''

''நான்... நான்தான் கட்டினேன்!''

''உனக்கேது பணம்?''

''வேற வழி தெரியாம தாலியை வித்து...!''


''தாலியா? எந்தத் தாலி? உன் பொண்ணுக்கு இன்னும் கல்யாணமாகலே. அதனால அவள்கிட்டே தாலி இருக்க சான்ஸே இல்லே... வேற என்ன?''

''ஏம்மா இப்படியெல்லாம் பேசறே? உங்கப்பா எனக்குக் கட்டின தாலியை வித்துதான்...'' தொண்டையடைத்தது.

''அப்பா உனக்குத் தாலி கட்டினாரா? ஆச்சரியமா இருக்கே! நீ என்ன அவர் பொண்டாட்டியா? வப்பாட்டிதான்! அவர் எப்படி உனக்குத் தாலி கட்டலாம்?'' முகம் சிவக்கக் கேட்டாள்.

''ராகினி... நீ சின்னப் பொண்ணு! உன் வாயால இப்படித் தப்பான வார்த்தைகள் வரக்கூடாது. நெஞ்சு மேல சுமக்கிற தாலியை விட நெஞ்சுக்குள்ளே சுமக்கிற நேசம்தான் நிஜமான கல்யாணம்னு நினைக்கிறவள் நான்.. நானா எதையும் வற்புறுத்தி உங்கப்பாகிட்டே கேட்டதில்லே... ஊர் உலகம் தப்பா பேசக்கூடாதுன்னு அவர் கட்டின தாலி... இன்னைக்கு என் பொண்ணோட எதிர்காலம் தப்பா போயிடுமோங்கற பயத்துல, அந்தத் தாலியை வித்துதான் பரீட்சைக்குப் பணம் கட்டினேன்!'' கண்ணீர் வழியச் சொன்னாள், வேணி.

ராகினி எரிச்சலுடன் அவளைப் பார்த்துவிட்டு அங்கிருந்து அகன்றாள்.



விக்டரி என்டர்பிரைசஸ்!

நகரத்தின் மையத்தில் மூன்றாவது மாடியில் இயங்கிக் கொண்டிருந்தது. அந்த அலுவலகத்தில் ஆண்களும் பெண்களுமாய் இருபது பேர் வேலை செய்து கொண்டிருந்தனர்.

பாலா கீழ்த்தளத்தில் தன் சாம்பல் நிற மாருதி எஸ்டீமை பார்க் செய்துவிட்டு லிப்டில் பயணித்து மேலே வந்தான்.

அவன் உள்ளே நுழைந்ததும் ஒவ்வொருவராக எழுந்து நின்று குட்மார்னிங் சொல்ல... பதிலுக்குச் சொல்லிக் கொண்டே தன்னறைக்குள் சென்ற பாலாவிற்கு இருபத்தெட்டு வயது. ஒற்றை வரியில் வர்ணிப்பதென்றால் அழகன்.

அவனுக்குப் பின்னேயே ஆபீஸ்பாய் மினரல் வாட்டர் பாட்டிலோடு உள்ளே நுழைந்து கண்ணாடித் தம்ளரில் ஊற்றி மூடி வைத்தான்.

''இதை நான் வர்றதுக்கு முன்பே செய்யறதுக்கென்ன?''

''இல்லே சார்... இப்பதான் வாட்டர் பாட்டில் வாங்கிட்டு... வந்தேன்!''

''எங்கே பார்த்தாலும் வாட்டர் பிரச்சினையா இருக்கே? இதோ பார் குமரன்... அடிக்கடி நீ இப்படித்தான் பண்ணிட்டிருக்கே... நாளைக்கும் இதே மாதிரி என் தலையைப் பார்த்ததும் தண்ணியைத் தூக்கிட்டு வர்ற வேலையை வச்சுக்காதே! பார்க்கறவங்க தப்பா நினைச்சுக்கப் போறாங்க...''

''இனிமே கரெக்டா இருக்கேன் சார்!''

''அருணோட ரூமை கிளீன் பண்ணிட்டியா?''

''இதோ... ரெண்டே நிமிடத்துல...''

''இனிமேல்தானா? தினசரி உன்கிட்டே இதே தலைவலியா போச்சே? பர்சனல் செக்ரட்டரி தேவைன்னு விளம்பரம் கொடுக்கறப்ப... கூடவே ஆபீஸ் பாய் தேவைன்னும் கொடுத்திட வேண்டியதுதான்!'' என்றான் பாலா.

''சார்... சார்... அவசரப்பட்டு என்னை வேலையை விட்டு அனுப்பிடாதீங்க சார்! என்னை நம்பி...''

''டேய்... டேய்... போடா... வேலையைப் பார்... நானாவது பேசிட்டிருக்கேன். அருண் இந்நேரம் கெட் லாஸ்ட்னு கழுத்தைப் பிடிச்சி வெளியே தள்ளியிருப்பான். அவன் லேட்டா வர்றதாலே... நீ தப்பிச்சே... போ... அருண் வர்ற நேரமாச்சு!'' விரட்டினான்.

விட்டால் போதும் என்று ஓடிப் போன குமரனுக்கு இப்போதுதான் உதட்டிற்கு மேலே பூனை ரோமங்கள் முளைவிட ஆரம்பித்திருந்த வயது.

பாலா போனைத் தன் பக்கம் இழுத்து அருணின் செல்போன் நம்பரைத் தட்டினான்.

சில நொடிகளில் அருணின் ''ஹலோ'' கேட்டது.

''குட் மார்னிங் அருண்!''

''குட் மார்னிங் பாலா!''

''இன்னைக்குச் சீக்கிரமா ஆபீஸுக்கு வரச்சொன்னேனே, மடையா! மறந்துட்டியா?''

''சாரிடா... கொஞ்சம் அவசரமா பேங்க் வரைக்கும் போக வேண்டியிருந்தது. மெட்டீரியல்ஸ் வாங்கப் பணம் வேணும்னு

நேத்து நீதானே கேட்டே! அதான் பணம் டிராப் பண்ணிட்டு வந்துக்கிட்டேயிருக்கேன்!''

''ஏன் அருண்.. இந்த வேலையைச் செய்யறதுக்குத்தான் இங்கே இத்தனை பேருக்குச் சம்பளம் கொடுத்துக்கிட்டிருக்கோம். நீ ஏன்டா இந்த வேலையை எல்லாம் செய்துக்கிட்டு...''

''ஆன் த வே... போற வழியிலேதான்னு நான் போயிட்டேன். பணம் வேற அதிகம். நானே போறது பெட்டர்னு போயிட்டேன். இன்னும் அஞ்சு நிமிடத்துல ஆபீசில் இருப்பேன். தினத்தந்தியிலே ஆள் தேவை பகுதிக்கு விளம்பரம் கொடுக்கச் சொன்னேனே... கொடுத்திட்டியா?''

''அதிலே ஒரு சின்னக் குழப்பம் அருண்! நீ வாயேன்... பேசிட்டுக் கொடுத்திடலாம்!''

''சரி... வர்றேன்!'' என்று போனை ஆப் பண்ணினான் அருண்.

அருண் தன் அலுவலகத்தில் நுழைந்தபோது பாலா வந்தபோது ஏற்பட்ட பதட்டத்தை விடவும் சற்றுக் கூடுதலாக இருந்தது. காரணம், பாலா தன் ஊழியர்களிடம் நண்பனாய்ப் பழகுவான். சிரிக்கச் சிரிக்கப் பேசுவான்.

ஆனால், அருண் அப்படியல்ல. அவன் எம்.டி.யாகவே பழகுவான், பேசுவான். அலுவலகத்தில் சிரித்துப் பேசுவ தெல்லாம் நண்பன் பாலாவிடம் மட்டுமே!

இந்த அலுவலகத்தில் இரண்டு எம்.டி.கள்.

அருணும் - பாலாவும்.

அவர்களுக்குள் இருபது வருட நட்பு பின்னிப் பிணைந் திருந்தது. பள்ளி நாட்களிலிருந்தே இணைபிரியா

நண்பர்களாய் நட்பை வளர்த்த அவர்கள் கல்லூரியிலும் தொடர்ந்தனர். அது மட்டுமின்றி இருவருக்குள்ளும் பொதுவான ஒரு எண்ணமும் வளர்ந்து வந்தது.

இருவரும் சேர்ந்தே ஒரு தொழிலைத் தொடங்கி உயர வேண்டும் என்பதுதான் அது.

பாலா பரம்பரைப் பணக்காரன். பணத்தைப் பற்றிய கவலையே இல்லை. ஆனால், அருண் அப்படியல்ல; அவனுக்குத் தன் பெற்றோர் யாரென்றே தெரியாது.

பதினைந்து வயதுவரை தன் அத்தையின் பராமரிப்பில் வளர்ந்தவன், அத்தையின் ஒரே மகள் வயதுக்கு வந்ததும், சுயநலமும், பயமும் தலை தூக்க அவனை ஆஸ்டலில் சேர்த்துவிட்டனர். நல்லவேளை படிப்பிற்கும், உணவிற்கும் பணம் கொடுத்து உதவியதால், அருணால் படிக்க முடிந்தது.

அதனாலேயே சிறு வயதிலிருந்தே, தான் உழைத்து முன்னுக்கு வர வேண்டும் என்ற வைராக்கியமும் கூடவே வளர்ந்தது.

கல்லூரிப் படிப்பு முடிந்ததும், சிறு தொழில் தொடங்க வென்று வங்கியில் ஒரு சிறு தொகையைக் கடனாகப் பெற்றான். பாலா அவனைவிடப் பத்து மடங்கு பணம் போட்டு இந்த கம்பெனியைத் துவங்கினான். நட்டு, போல்டிலிருந்து துண்டு துக்கடா பொருட்கள் வரை அத்தியாவசியமான பொருட் களைத் தயாரித்து வெளிநாட்டிற்குக் கூட ஏற்றுமதி செய்யுமளவிற்கு கம்பெனியை உயர்த்தினர் இருவரும்.

பாலா அதிகமாய்ப் போட்டிருந்தாலும்கூட, வருகிற லாபத்தில் அருண் மறுத்தும் கூடச் சரிபாதியாகப் பிரித்தான்.

இன்று அருண் சொந்த வீடு, கார், செல்போன் என்று வசதியாய் வாழ்கிறானென்றால் அதற்குப் பாலாவும் ஒரு காரணம் என்பதை அவன் மறக்க மாட்டான்.

முன்னேறு மேலும் முன்னேறு என்ற வாசகமே அருணை உசுப்பி விரட்டிக் கொண்டிருந்ததால் ஊழியர்களிடம் அவன் விரைப்பையே காட்டி வந்தான்.

பாலா அழகன் என்றால் அருண் பேரழகன் என்று சொல்லலாம்.

பரந்த மார்பும், விரிந்த தோள்களும், முகவசீகரமும், காந்தமாய் இழுக்கும் சிரிப்பும் யாரையும் மறுபடி அவனைத் திரும்பிப் பார்க்கச் சொல்லும்.

அருண் நேராகப் பாலாவின் அறைக்குள் சென்றான்.

''வாங்க பாஸ்!'' என்றான் போலியாய்ப் பவ்யம் காட்டி.

''உஸ்...'' என்று வாயால் பெருமூச்சு விட்டபடி எதிரே அமர்ந்தான்.

''என்ன பெருமூச்செல்லாம் பலமா யிருக்கு?''

''எல்லாத்தையும் நானே கவனிச்சுக்க கஷ்டமாயிருக்கு. உங்கம்மாகிட்டே சொல்லி ஒரு நல்ல வேலைக்காரிக்கு ஏற்பாடு பண்ணச் சொல்லேன்!''

''வேலைக்காரியெல்லாம் எதுக்கு பாஸ்? நிரந்தரமா ஒரு வீட்டுக்காரிக்கு ஏற்பாடு பண்ணினாதான் எல்லாம் சரிப்பட்டு வரும்!''

''டேய்...'' என்று செல்லமாய் முறைத்து, பேப்பர் வெயிட்டைத் தூக்கியெறிவது போல் பாவ்லா காட்டினான்.

''அட... ரொம்பதான் வெட்கப்படாதே!என்னமோ பெண்கள்னா, உவ்வேன்னு குமட்டற மாதிரி! சொல்லு... பொண்ணு பார்க்கட்டுமா? வயசாகுதில்லே...''

''நீ மட்டுமென்ன, மார்க்கண்டேயனா- எனக்கு ஆகற அதே வயசுதானே உனக்கும் ஆகுது?''

''மறைக்கலாம்னு பார்த்தா, விடமாட்டியே! அம்மா எனக்கும் பெண் மானை வலைவீசித் தேடிக்கிட்டிருக்காங்க. ஆனால், அவங்களுக்குப் பிடிச்சா, எனக்குப் பிடிக்க மாட்டேங்குது! அம்மாவோட டேஸ்ட் எனக்கு ஒத்து வரலேப்பா!''

''ஓகோ... இன்டர் நேஷனல் லெவலுக்கு எதிர்பார்க்கறியாக்கும்!''

''சேச்சே... என்னோட டேஸ்ட்டே வேற அருண்... பூஜை அறையிலே ஒரே ஒரு குத்து விளக்கை மட்டும் ஏத்தி வச்சிப்பார்.:. அதோட அழகும், மனசுக்குத் தர்ற அமைதியும் அலாதியானது. கொத்துக் கொத்தா தொங்கற சாண்ட்லியர் விளக்கைப் பார்த்தா கண்ணு கூசலே? நான் குத்துவிளக்கு வேணும்னு தேடினா, அம்மா கொத்து விளக்கைக் காட்டறாங்க. வாழ்க்கையே வெறுத்துப் போச்சுப்பா!''

அருண் அதைக் கேட்டு அழகாய்ச் சிரித்தான்.

''சிரிச்சு மழுப்பாதே! சீரியசா கேட்கறேன். உனக்குப் பொண்ணு பார்க்கட்டுமா?''

''என்னோட டேஸ்ட் என்னன்னு உனக்குத் தெரியுமா பாலா?''

''சொல்லேன்... தெரிஞ்சுக்கறேன்!''

''நிஜமாய்ச் சொல்லப்போனா... எனக்கு அந்த மாதிரி ஐடியாவே இல்லே. இப்படி இருக்கணும், அப்படி இருக்கணும் - அப்படின்னெல்லாம் கற்பனையே பண்ணலே! அவள் எப்படி இருந்தாலும், பார்த்ததும் மனசுல ஒரு சிலிர்ப்பை ஏற்படுத்தணும். மனசுக்குள்ளே மழை பெய்ய வைக்கணும். என் இதயத்தை அசைய வைக்கணும். இதுவரைக்கும் எந்தப் பொண்ணுமே என்னைப் பாதிக்கலே. பாதிக்கிறவள் எவளோ அவளே என் மனைவி...!''

''அடேயப்பா... அருண்... நீ எப்ப கவிஞரானே?''

''போதும் விளையாட்டு... பிழைக்கிற வழியைப் பார்ப்போம். தினத்தந்திக்கு விளம்பரம் கொடுக்கறதிலே ஏதோ குழப்பம்னு சொன்னியே... என்ன குழப்பம்?''

''இல்லே... பர்சனல் செக்ரட்டரி வேலைக்குப் படித்த பட்டதாரிப் பெண் தேவை! கம்ப்யூட்டரும் கற்றிருத்தல் அவசியம்னு கொடுக்கச் சொன்னே! எல்லாம் சரிதான். கூடவே கல்யாணமாகாத பெண் தேவைன்னு ஒரு வரி சேர்த்தா என்ன?''

''முட்டாள்... படிக்கிறவங்க வேலைக்கு ஆள் தேடறாங்களா, வேற எதுக்கான்னு நினைக்கறதுக்கா?''

''அதுக்கில்லே அருண்! அன் மேரீட் கேர்ள்ன்னா... வேலையிலே சின்ஸியரா இருப்பா. கல்யாணமானவன்னா... புருஷன், குழந்தை, வீடுன்னு அவள் எண்ணமெல்லாம் அவங்களைச் சுத்தியே வரும். வேலையிலே கான்சன்ட்ரேட் குறையும்!''

''நல்ல கண்டுபிடிப்பு! முதல்ல நான் சொன்ன மாதிரியே விளம்பரம் கொடு. யாருக்குத் தகுதி யிருக்கோ... அவங்களுக்குத்தான் வேலை. ஓக்கே?''

''ஓக்கே!'' என்றான் அசுவாரஸ்யமாய்.

''இந்தப் பணத்தை மானேஜரைக் கூப்பிட்டுக் கொடுத்திடு,'' என்றபடி ஒரு கறுப்புநிறப் பெட்டியை அவன் முன் நீட்டினான்.

அதை வாங்கிக்கொண்ட பாலா நினைவு வந்தவனாய், ''அருண்... ஒரு முக்கியமான விசயத்தைச் சொல்ல மறந்துட்டேன்!'' என்றான்.

''என்ன?''

''தனலட்சுமி இன்டஸ்ட்ரீஸ்லேர்ந்து நமக்கு ஒரு லெட்டர் வந்திருக்கு!''

''நிஜமாவா? என்னவாம்?''

''அந்த கம்பெனியோட டீலிங் வச்சுக்கணும்னு ரொம்ப நாளா டிரை பண்ணினோம் இல்லையா? அம்மனுக்கு இப்பதான் மனமிரங்கியிருக்கு. அருள் தர்றதுக்காக நேரடியர்க வரச்சொல்லி அழைப்பு வந்திருக்கு!''

''நல்ல கம்பெனி! மார்க்கெட்ல நல்ல பேர் இருக்கு. அவங்களோட காண்ட்ராக்ட் வச்சுக்கிட்டோம்னா... நமக்கு இன்னும் நல்லது. ஆமா... நம்ம போன் நம்பர் அவங்களிடம் இருக்கே! போன்லேயே அழைச்சிருக்கலாமே!''

''நீ எதுக்கு லெட்டர் அனுப்பினே? போன்லேயே உங்க கம்பெனியோட டீலிங் வச்சுக்க விரும்பறோம்னு சொல்ல வேண்டியதுதானே?''

''அது மரியாதையில்லே...!''

''அப்ப அவங்க லெட்டர் அனுப்பினதிலேயும் தப்பில்லே!''

''காலை வாரிவிடறியே...! தனலட்சுமி இன்டஸ்ட்ரீஸ் எம்.டி. பேரென்ன?''

''நீதான் படிச்சுப்பாரேன்! ராகினின்னு போட்டிருக்கு!''

''லேடியா?''

''யங் லேடி!''

''உனக்கெப்படித் தெரியும்?'' ஆச்சரியமாய்க் கேட்டான் அருண்.

''கேள்விப்பட்டேன்!''

''இன்னைக்கே போற பார்க்கலாமா?''

''அலையாதே... நம்மளைப் புதன்கிழமைதான் வரச்சொல்லி லெட்டர்ல குறிப்பிட்டிருக்கு!''

''அதுக்கில்லே பாலா... பிசினஸ் விசயம். உடனே முடிச்சிட்டா நல்லதுன்னு நினைச்சேன்!''

''நம்பறேன்... நம்பறேன்!'' என்றான் குறும்பாய்ப் பாலா.

''டேய்... நம்புடா...!''

''நம்பறேன்... நம்பறேன்!'' என்று அதே ராகம் போட்டுப் பாடினான்.

''சீ... போடா!'' என்று சிரித்தபடி எழுந்து தன் அறைக்குப் போய்விட்டான், அருண்.

புதன் கிழமை.

குறிப்பிட்டிருந்த நேரத்தில் அருணும் பாலாவும் ராகினியின் கம்பெனிக்குச் சென்றனர்.

PDF Optimization Software www.balesto.com

இன்டர்காமில் அனுமதி கேட்டு அவர்களை உள்ளே அனுப்பி வைத்தாள் வரவேற்பாளர் பெண்.

மரியாதைக்குக் கதவை விரல்களால் டொக், டொக்கி விட்டு, ''கம்மின்'' என்ற குரல் வந்ததும், திறந்துகொண்டு உள்ளே நுழைந்த இருவருமே அயர்ந்துதான் போனார்கள்.



''டேக் யுவர் சீட் பிளீஸ்...!'' தேனில் நனைந்து வந்தது ராகினியின் குரல்.

பாலா சட்டென அமர்ந்து விட்டான்.

''டேக் யுவர் சீட்... ப்ளீஸ்...'' மறுபடி அவள் கூறவும், பால்லா அருணின் கையைச் சீண்டி இந்த உலகத்திற்கு அழைத்து வந்தான்.

''த...தாங்க்ஸ்...!'' என்று அசடு வழிந்தபடி அமர்ந்தான்.

''உங்கள்ல யாரு மிஸ்டர் அருண்? மிஸ்டர் பாலா?''

''இவர் மிஸ்டர் பாலா! ஐயம் அருண்...!''

''ஓக்கே... உங்களைச் சந்திச்சதுல ரொம்ப சந்தோஷம்!'' ராகினி தலையை முப்பது டிகிரியில் லேசாய்ச் சாய்த்து, வழிந்து விழுந்த பொன்னிறக் கூந்தலை இரண்டு விரல்களால் அடிக்கடி ஒதுக்கிக் கொண்டிருந்த லாவகமும், கியூடெக்ஸ் பளபளத்த நீளமான ஆள்காட்டி விரலால் நிமிடத்திற்கொரு தடவை மூக்கில் தடவும் மேனரிசமும், எவ்வளவு சிரித்தாலும், பேசினாலும் உதட்டுச் சாயம் பிரெஷ்சாகப் பளபளத்து அவள் சிரிப்பிற்கு மெருகூட்டுவதையுமே கவனித்துக் கொண்டிருந்த அருணுக்குச் சிலிர்த்தது. மனசுக்குள்மழையடித்தது. இதயத்தை அசைத்தது.

ராகினி பிசினஸ் விசயமாய்ப் பேசிய ஒரு வார்த்தை கூட அருணின் காதில் ஏறவில்லை. நல்லவேளை, பாலா அவள் பேசியதைக் கிரகித்துக் கொண்டிருந்தான்.

''உங்க காண்ட்ராக்ட் எங்க கம்பெனிக்குக் கிடைச்சதுல ரொம்ப சந்தோஷம் மேடம்!'' பாலாதான் பேசினான்.

''எனக்கும்தான்! அக்ரீமென்ட் போட்டு முடிச்சதும் எங்களுக்கு நீங்க மெட்டீரியல்ஸ் சப்ளை பண்ண ஆரம்பிச்சிட லாம்.''

''ஓக்கே... தாங்க்யூ மேடம்! அப்ப நாங்க வர்றோம்...!''

''மிஸ்டர் அருண் ஒண்ணுமே பேசலே?'' ராகினி அருணை வியப்பாய்ப் பார்த்தபடி சொன்னாள்.

அருண் திணறி விட்டான்.

''பேச ஆரம்பிக்கலாமே!'' என்றான்.

''ஷ்... அருண்... சும்மா யிரு!'' அவனைச் சீண்டி அடக்கியவன், ''நாங்க கிளம்பறோம் மேடம்!'' என்று அருணைக் கைப்பிடித்து எழுப்பினான்.

''என்ன பாலா அதுக்குள்ளே?''

''எல்லாம் பேசி முடிச்சாச்சு. முதல்ல வெளியே வா!'' அவன் காதில் கிசுகிசுத்தான்.

ராகினி தனக்குள் கிண்டலாய்ச் சிரித்துக் கொண்டாள். 'பைத்தியக்காரன்... ஒரு முறை பார்த்ததுக்கே தலை கிறுகிறுத்துப் போயிட்டான்!'

வெளியே வந்த பாலா, அருணைக் கோபமாய்ப் பார்த்தான்.

''என்னடா ஆச்சு உனக்கு? இன்னும் கொஞ்ச நேரம் விட்டிருந்தாலும், அவள் எதிரே மானம் போயிருக்கும்!''

''ஏன்டா, நான் என்ன பண்ணினேன்?''

''நீ ஒண்ணுமே பண்ணலேதான்! ஐயா... உள்ளே போனதும் பிடிச்சுவச்ச பிள்ளையார் மாதிரி உட்கார்ந்திட்டீங்களே... நீங்க ஒண்ணும் பண்ணலேதான். முதல்ல கார்ல ஏறு!''

அவனை உட்கார வைத்துப் பாலாவே காரை ஓட்டினான்.

''சட்டையெல்லாம் நனைஞ்சிருக்கு பார், துடைச்சுக்க!'' என்றான் பாலா நக்கலாய்.

''எங்கே... இல்லையே!'' என்றான், அருண் - தன் சட்டையைத் தொட்டுப் பார்த்து.

''கண்ணுக்குத் தெரியாது. ஏன்னா அது ராகினியைப் பார்த்து நீ விட்ட ஜொள்ளு!'

''ஓ... நீ அதைச் சொல்றியா? இது ஜொள்ளு இல்லேடா, பாலா! மனசுக்குள்ளே பெஞ்ச மழை!''

''ஓகோகோ... நீ அங்கே வர்றியா?''

''ஆமா பாலா! எனக்கு ராகினியை ரொம்ப பிடிச்சிருக்கு. என்னை அசைச்சுப் பார்த்த ஒரே பொண்ணு!''

''மாட்டிக்கிட்டியா?''

''ப்ச்... கிண்டல் பண்ணாதே! அவள் எப்படி? தேவதை மாதிரியே இல்லே!''

''.....''

''என்ன பாலா பேசாம வர்றே?''

''நிஜத்தைச் சொன்னா வருத்தப்பட மாட்டியே!''

''மாட்டேன்!''

''அவளைப் பார்த்த செகண்ட்ல நானும் பிரமிச்சுப் போனதென்னவோ நிஜம்தான்! ஆனால் அடுத்த செகண்ட் லேர்ந்து அந்தப் பிரமிப்பு காணாமப் போயிடுச்சு. அவளோட பேச்சு, அதில் தெரிந்த திமிர், ஆணவம், எகத்தாளம் அவளோட அழகைக் காணாமப் போக்கிடுச்சி. ராகினி கண்ணைக் கூசவைக்கிற சாண்ட்லியர் விளக்கு, நீ உலகத்தை மறந்து போகிற அளவுக்கு அவள்கிட்டே எதுவுமே இல்லே அருண்!''

''சேச்சே... உனக்கென்ன தெரியும் அவளைப்பத்தி?''

''ஓ...உனக்கு ரொம்ப தெரியுமோ? என்னன்னுதான் சொல்லேன்... நானும் தெரிஞ்சுக்கறேன்.''

''கிண்டல் பண்ணாதே பாலா! நான் முடிவு பண்ணிட் டேன்... ராகினிதான் மிஸஸ் அருண் என்று!''

''வம்பை விலை கொடுத்து வாங்கத் தயாராயிட்டே! எதுக்கும் கொஞ்சம் யோசிச்சிட்டு முடிவெடு!''

''இதுல யோசிக்க என்ன இருக்கு? நீதான் யோசிக்கணும்!''

''நானா? ஐயோ... ராகினி எனக்கு வேணாம்பா!'' பாலா அலறினான்.

''சீச்சீ... அவள்கிட்டே என் மனசைத் திறந்து காட்ட ஒரு யோசனை சொல்லுடான்னா...''

''இதென்ன பெரிய ஜீபூம்பா வேலையா? சட்டையைக் கழற்றிட்டு அவள் முன்னாடி நில்லு!''

''உன்கிட்டே போய் ஐடியா கேட்டேனே... என்னை... என்னை... என்னைச் சொல்லணும்!''

''மூட்டாள்னுதானே?''

''யூ... ராஸ்கல்!'' அவனை அடிக்கக் கையை ஓங்கினான்.

''கார் ஓட்டறப்ப விளையாடாதேப்பா... மேலேயிருக்கிற தாத்தா பாட்டியை யெல்லாம் இப்ப பார்க்கிற ஐடியா எனக்கில்லே!'' என்றான் பாலா சிரித்துக் கொண்டே.

''சரியான வில்லன்டா நீ!''

''ஊகூம்... சொன்னதை வாபஸ் வாங்கு... வில்லன்னா யார் தெரியுமா? ஹீரோ லவ் பண்ற பொண்ணைப் போட்டி போட்டு லவ் பண்றவர். எனக்குக் கோடி கோடியா கொட்டிக் கொடுத்தாலும் ராகினிங்கற கொத்து விளக்கு வேண்டவே வேண்டாம்டா சாமி...!'' கவுண்டமணி பாணியில் அலறினான், பாலா.

அருணும் தன்னை மீறிச் சிரித்துவிட்டான்.

இரவு ஒரு மணியைத் தாண்டிவிட்ட நடுநிசி! எப்போதோ ஒருமுறை உறுமிக்கொண்டு சென்ற வாகனங்களின் ஒலியைத் தவிர வேறெதுவும் கேட்காதபோது... அருணுக்குத் தன் இதயத்தின் ஒலியும் துல்லியமாகக் கேட்டது.

இது இதுநாள்வரை ஏற்படாத அவஸ்தை. இத்தனை நாளாக எவ்வளவுதான் வேலைப் பளுவும் டென்ஷனும் இருந்தாலும் படுத்ததும் உறங்கி விடுவான். அவன் வாழ்நாளில் நள்ளிரவு ஒரு மணியை எல்லாம் பார்த்ததே இல்லை.

எப்படிப் புரண்டு படுத்தாலும் ராகினியின் முகம் குளோசப்பில் வந்து அவன் நாடி நரம்புகளிலெல்லாம் சிலிர்ப்பேற்படுத்திக் கொண்டிருந்தது.

அதற்கு மேல் படுக்கையில் புரள முடியாமல் எழுந்தமர்ந்து கொண்டான். இரு கைகளாலும் முன் நெற்றியிலிருந்து முடிக்கற்றைகளைப் பின்னுக்குத் தள்ளினான். என்றாலும் பிடிவாதமாய் மறுபடி முன்னுக்கு வந்து விழுந்தது.

''ரா...கி...னி!'' உச்சரித்துப் பார்த்தான்.

அடிக் கரும்பின் சுவை தெரிந்தது.

ராகினி... ஐ லவ் யூ...! நீ எனக்கு வேணும். என் மனைவியாக இந்த வீட்டில் காலடி எடுத்து வைக்க நீ வரணும். ராகினி.. உன்னைப் பார்த்த கணமே என்னை உன்னிடம் தொலைத்துவிட்டேன். அதே மாதிரி உணர்வு உனக்குள்ளும் எழுந்ததா? இதை நான் எப்படித் தெரிந்து கொள்வது? என்னை உனக்கு எப்படித் தெரியப்படுத்துவது? ராகினி! நீ என்னைப் பைத்தியக்காரனாக்கி விட்டாய். உறக்கத்தைப் பறித்துப் புலம்ப வைத்து விட்டாய். இன்ப அவஸ்தையில் தவிக்கிறேன், துடிக்கிறேன்! இதற்கு எப்போது விடிவு?

விடியத் தொடங்கியது. அருண்தான் உறங்கவேயில்லை.

அருணின் அறைக்குள் வந்தான் பாலா. அவன் முகத்தில் கொஞ்சம் பதட்டமும், கொஞ்சமும் கோபமும் இருந்தது.

''வா... பாலா!''

''வர்றது இருக்கட்டும். என்னடா ஆச்சு உனக்கு?''

''எனக்கென்ன? ஒண்ணுமில்லையே.. ஐம் ஆல்ரைட்!'' என்றான் சீரியசாய்.

''ஆமா கிழிச்சே போ! விஷால் சப்ளையர்ஸுக்கு எத்தனை முறை செக் போட்டுத் தருவே!''

''என்ன சொல்றே?''

''போன வாரமே அம்பதாயிரத்துக்கு செக் போட்டுக் கொடுத்தாச்சு.மறுபடி ரெண்டு நாளுக்கு முன்னே ஒரு செக் அதே அம்பதாயிரத்துக்குப் போட்டு அனுப்பியிருக்கே! அந்த சப்ளையர் கொஞ்சம் மனச்சாட்சி உள்ளவனா இருந்ததினால... அந்த செக்கைத் திருப்பிக் கொடுத்திட்டான். என்ன... என்ன அருண் இதெல்லாம்? எப்பவும் நீ இப்படி இருந்ததில்லையே... வாட்ஸ் ராங் வித் யூ?'' ஆச்சரியமாய்க் கேட்டான் பாலா.

அருண் குற்ற உணர்ச்சியில் தலை கவிழ்ந்தான்.

''சொல்லு... உன் கவனமெல்லாம் பிசகறதுக்கு என்ன காரணம்?''

நிமிர்ந்தான். நண்பனை ஆழமாய்ப் பார்த்தான்.

''ராகினி...!'' என்றான்.

''வாட்...?''

''யெஸ்.. ஐ வான்ட் ராகினி! அவளைப் பார்த்ததிலேர்ந்து தூக்கமில்லே... சாப்பிட முடியலே... என்னை ரொம்ப ஆட்டிப் படைச்சிட்டிருக்கா! ப்ளீஸ் பாலா... எனக்கு அவள் வேணும்!''

''டேய்... நீ சீரியசாதான் பேசறியா? அன்னைக்கு என்னமோ உளர்றேன்னு சாதாரணமா எடுத்துக்கிட்டேன். அருண்... நிதானமா யோசி! நினைச்சதும் முடிச்சிடுற காரியமில்லே இது? வாழ்க்கைப் பிரச்சினை!''

''ஐ லவ் ராகினி! அதை ஏன் புரிஞ்சுக்க மாட்டேங்குறே!''

''எப்படி அருண்? எப்படி இப்படி ஒரு முடிவுஎடுத்தே? அவளைப் பத்தி உனக்கென்ன தெரியும்? ராகினி ஒரு கம்பெனியின் எம்.டி. ஸ்தானத்தில் உள்ள லேடிங்கறதைத் தவிர அவளைப் பத்தி என்ன தெரியும் உனக்கு?''

''எல்லாத்தையும் தெரிஞ்சுக்கிட்டுதான் ஒருத்தரை விரும்பணும்னா... அதுக்குப் பேர் காதல் இல்லே.''

''உனக்கு முத்திப் போச்சு, அருண்!''

''இருக்கட்டும். நான் பைத்தியக்காரனாகவே இருந்துட்டுப் போறேன்! ஒரு நல்ல நண்பனா எனக்கொரு உதவியைப் பண்ணு! அது போதும்...''

''சொல்லு!''

''அவளைப் பத்தி ஒரே ஒரு விபரத்தை மட்டும் விசாரிச்சி எனக்குச் சொல்லு.''

''என்ன விபரம்?''

''அவள் யாரையாவது காதலிக்கிறாளா, இல்லையான்னு?''

''இதுக்குத்தான்டா யாரோடயும் பிரண்ட்ஷிப்பா இருக்கக் கூடாது. என்னென்ன வேலை யெல்லாம் செய்ய வேண்டி யிருக்கு?'' செல்லமாய்க் கோபித்தான் பாலா.

''பிளீஸ்டா...''

''செய்யறேன்... வேறு வழி?''

அடுத்த நாளே கைநிறையத் தகவல்களுடன் வந்தான் பாலா.

''என்னடா... ராகினியைப் பத்தி ஏதாவது விபரம் தெரிஞ்சதா?''

''நிறையவே தெரிஞ்சது... அவள் அழகான ஷோ கேஸ் பொம்மை அருண்! குடும்பம் நடத்தத் தேவைப்படுகிறவ ளில்லை.''

''கேட்டதுக்கு மட்டும் பதில்! அவள் யாரையாவது காதலிக்கிறாளா?''

''இல்லை!''

''அப்பாடா... அது போதும்!''

''அது மட்டும் போதாது, அருண். அவள் ரொம்ப திமிர்க்காரியாம். யாரையும் மதிக்க மாட்டாளாம்.''

''எல்லார்கிட்டேயும் எல்லா நல்ல குணமும் இருந்திடற தில்லே. அப்படி இருந்துட்டா அவங்க மனுஷங்களா இருக்க மாட்டாங்க. மகான்களா இருப்பாங்க. நீயும், நானும்கூட மனுஷங்கதான், பாலா!''

''பாவி... இவ்வளவு சீக்கிரம் தத்துவமெல்லாம் பேச வைச்சிட்டாளே! குருடனுக்குப் பின்னாடி கொடி பிடித்துச் செல்பவனுக்கு ஆபத்துதான்! அதைப் புரிஞ்சுக்க!''

''ராகினியைப் போய்க் குருடிங்கறியா? அவளுக்குத்தான் எவ்வளவு பெரிய அழகான கண்கள்!''

''சாமியே சரணம்! இதுக்கு மேல் உன் வாலை நிமிர்த்தவே முடியாதுன்னு புரிஞ்சுடுச்சு. இனி என் வாயை நான் பசை போட்டு ஒட்டிக்கறேன்... போதுமா?''

அருண் சிரித்தான்.

''இனி அவள் கம்பெனி சம்பந்தப்பட்ட டீலிங்கை நானே பார்த்துக்கறேன், பாலா. அப்பதான் அவளோட நல்லா பழக முடியும். ஒரு நல்ல சந்தர்ப்பம் பார்த்து என் மனசை அவள்கிட்டே தெரியப்படுத்தணும்!''

''சரிங்க, பாஸ்!''

''பாலா... என்னை அவளுக்குப் பிடிக்குமில்லே?''

''உன்னைப் பிடிக்கலேன்னா... நிச்சயம் ராகினி ஒரு குருடியாத்தான் இருப்பா!'' என்றான் பாலா.

7

முப்பது நாட்கள் கடந்தன. அருணும் ராகினியும் தினசரி போனில் ஹலோ சொல்லிக் கொள்ளும் அளவிற்கு நண்பர்களாகி விட்டிருந்தனர்.

சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்தான். அதை அவனே ஏற்படுத்தியும் கொண்டான்.

பார்க் ஷெராட்டன் ஓட்டலுக்கு ராகினியை வரச்சொல்லி விட்டு ரிசர்வ் செய்திருந்த டேபிளில் முன்னதாகவே வந்து அமர்ந்திருந்தான் அருண்.

அவனை அரை மணி நேரம் விழிகளை அலைபாய வைத்துவிட்டு ராகினி வந்தாள்.

டைட் ஜீன்சும், தொளதொள ஷர்ட்டும், அலைபாய்ந்த கூந்தலுமாய் வந்த ராகினியைப் பார்த்ததும், அருணின் இதயத்தின் ஸ்ருதி தாளம் தப்பி வந்தது.

''ஹாய் அருண்... சாரி பார் த டிலே...''

''இட்ஸ் ஓக்கே... சிட் டவுன் பிளீஸ்...''

அமர்ந்தாள்.

பேரர் வந்ததும் வரிசையாய் உணவு வகைகளை ஆர்டர் செய்தான்.

''எதுக்கு அருண் இவ்வளவும்?''

''என்னோட சந்தோசத்துக்காக!''

''அதுக்காக இவ்வளவுமா?'' என்றபடி சாப்பிட ஆரம்பித்தாள்.

''ஏதோ முக்கியமான விசயம் பேசணும்னு வரச்சொல்லிட்டு சாப்பிட்டுக்கிட்டே இருந்தா என்ன அர்த்தம்?''

''சாப்பிட்டு முடியுங்க... சொல்றேன்!''

''சரி... சாப்பிட்டாச்சு... சொல்லுங்க, என்ன மேட்டர்?'' ராகினி நாப்கின்னால் உதடை நாசூக்காய்த் துடைத்துக் கொண்டே கேட்டாள்.

அருண் தன்னை முதலில் தயார்ப்படுத்திக் கொண்டான். ''எனக்குச் சுத்தி வளைச்சுப் பேசத் தெரியாது, மிஸ் ராகினி. என்னைப் பத்தி நீங்க என்ன நினைக்கிறீங்க?''

''குட் பிரண்ட்... அப்புறம், நல்ல டீலர்!''

''அவ்வளவுதானா?''

''ம்... யோசிச்சி அப்புறமா சொல்றேனே! சரி, இப்ப நீங்க கேட்டதுக்காக நானும் கேக்கறேன். என்னைப் பத்தி நீங்க என்ன நினைக்கிறீங்க, அருண்?''

அருணுக்கு அவள் அப்படிக் கேட்டதும் உச்சி குளிர்ந்து போனது.

''நான் யோசிச்சு அப்புறமா சொல்றேன்னு சொல்ல மாட்டேன். பிகாஸ்... நான் எப்பவும் உங்களையேதான் நினைச்சிட்டிருக்கேன், ராகினி!''

''வாட் டு யூ மீன்?''

''ஐ... மீன்... ஐ லவ் யூ!''

''.....''

ஒரு ஃபைலோடு அருண் முன் வந்தமர்ந்தான் பாலா.

''அருண்... பெர்சனல் செக்ரட்டரி வேலைக்கு விளம்பரம் கொடுத்திருந்தோமில்லையா? ஏகப்பட்ட அப்ளிகேஷன்ஸ் வந்தது. அதிலேர்ந்து பதினஞ்சு பேரை மட்டும் வடிகட்டி வரச்சொல்லி இண்டர்வியூ கார்டு அனுப்பியாச்சு. எல்லாரும் வந்தாச்சு. பதினோரு மணியானதும் இண்டர்வியூ ஆரம்பிச் சிடலாமா?''

''ப்ச்... அதை யெல்லாம் நீயே பார்த்துக்க, பாலா!''

''டேய் அருண்... இங்கே பார். நிமிர்ந்து என்னைப் பார்! இன்னும் அந்த சம்பவத்தையே நினைச்சிட்டிருக்கியா?'' பரிதாபமாய் நண்பனைப் பார்த்துக் கேட்டான்.

''முடியலை பாலா... இப்படியொரு அவமானத்தை இதுவரை நான் சந்திச்சதே யில்லே! அதுவும், நான் உயிருக்குயிரா நேசிச்ச ராகினி வாயிலேர்ந்து அப்படியொரு வார்த்தையை நான் எதிர்பார்க்கலே, பாலா!''

''நான்தான் அப்பவே சொன்னேனே அருண். அவள் ரொம்ப திமிர் பிடிச்சவள்னு. நீதான் காதிலேயே வாங்கிக்கலே.

புத்தகங்களைவிட மனுசங்களைத்தான் படிக்கணும். அதுதான் புத்திசாலித்தனம். மறந்துடு, அவளை, அவள் சொன்ன வார்த்தைகளை... எல்லாத்தையும் மறந்திடுடா...'' கெஞ்சினான்.

''பாலா... நீயே சொல்லு! நான் நல்லாயில்லை?''

''அதான் சொல்றேனே... ராகினி ஒரு குருடின்னு!''

அருண் பெருமூச்சுடன் தலை கவிழ்ந்து கொண்டான்.

ரீப்ளே செய்யப்பட்டது போல் அன்று ராகினி சொன்ன வார்த்தைகள் மறுபடி காதில் எதிரொலித்தன.

அவன் அப்படிக் கேட்டதும் முதலில் திகைத்த ராகினி பிறகு வாய்விட்டுக் கலகலவெனச் சிரிக்க ஆரம்பித்தாள்.

''நீங்க... என்னை லவ் பண்றீங்களா? பிக் ஜோக்!''

அவன் காதலில் முதல் அடி விழுந்தது.

''கேக்கறதுக்கு முன்னாடியே யோசிக்க மாட்டீங்களா அருண்? நான் யார் தெரியுமா? என்னோட பேக்ரவுண்ட் என்ன தெரியுமா? எனக்குக் கணவரா வரப் போகிறவருக்கு என்னென்ன தகுதிகள் இருக்கணும்னு நான் பெரிய லிஸ்டே போட்டு வைச்சிருக்கேன். என்னோட கணவரோட பரம்பரை ராஜ பரம்பரையா இருக்கணும். இந்த முதல் கண்டிஷன்லேயே நீங்க சுருண்டு போய்டுவீங்களே அருண்! உங்க அம்மா, அப்பா முகத்தை நீங்க பார்த்திருக்கீங்களா? அத்தை வீட்டுலே எடுபிடியா வளர்ந்தவர் ராகினி மேல ஆசைப்படலாமா? ஏதோ பார்க்க கொஞ்சம் கலரா இருக்கவும்... நான் மயங்கிடுவேன்னு நினைச்சீங்களா, அருண்? எப்படி இவ்வளவு தைரியமா என்கிட்டே கேட்க எண்ணம் வந்தது? இப்படியொரு எண்ணம்

இருப்பது தெரிஞ்சிருந்தா... இங்கே வந்தே இருக்கமாட்டேன். இனிமேலும் நம்ம பிரண்ட்ஷிப்பை மட்டுமில்லே, டீலர்ஷிப்பையும் தொடர்றது அவ்வளவு சரியா வராது. இதுவே நம்ம கடைசிச் சந்திப்பா இருக்கட்டும்!'' என்று கூறிவிட்டு எழுந்து போய்விட்டாள்.

மரண அடி அருணுக்கு.

அவள் மறுத்ததே பெரிய இடி! இதில் அவனை அனாதை, எடுபிடி என விமர்சித்தது இதயத்தை ரம்பத்தால் அறுப்பது போலிருந்தது.

ஒரே வார்த்தை! சாரி என்று நாகரீகமாய்ச் சொல்லி மறுத்திருக்கலாம்.

ஆனால், ராகினியின் உடையில் மட்டும்தானே நாகரீகம் இருக்கிறது!

அன்று முதல் அருண் உறக்கத்தை இழந்தான். காதலை உதாசீனப்படுத்துவதைவிடப் பெரிய வலி உண்டா?

அலுவலகப் பணிகளில் கூட அவனால் ஈடுபாடு கொள்ள முடியவில்லை.

''அருண்... ராகினிக்கு அதிர்ஷ்டமில்லேன்னு நினைச்சுக்க. இந்த ராகினி இல்லேன்னா... இன்னொரு ரோகிணி கிடைக்காமலா போயிடுவா? அதையே நினைச்சிட்டிருக்காம மனசை ரிலாக்ஸ்சா வைச்சுக்கப்பா... இண்டர்வியூ பண்றப்ப... நீயும் அவசியம் கூட இருக்கணும்!''

''பிளீஸ்... பாலா!''

''ஊகூம்... நான் விடறதாயில்லே, பாஸ்... நீயும் வர்றே... கெட் அப்!'' என்று அவன் கையைப் பற்றி எழுப்பினான்.

அருணும் வேண்டா வெறுப்பாக எழுந்து அவனுடன் சென்றான்.

ஒவ்வொருவராக இண்டர்வியூ பண்ணி அனுப்பிக் கொண்டே இருந்தனர்.

இதுவரை வந்த பன்னிரண்டு பெண்களில் ஒருவர் கூட செலக்ட் ஆகவில்லை.

பாலாவிற்கே வெறுப்பாய் இருந்தது. அருணின் நிலையோ சொல்ல வேண்டியதே இல்லை.

''அடுத்த ஆளை வரச் சொல்லு, பாலா! சீக்கிரம் முடிச்சிடலாம்.''

பாலா ஃபைலைப் பார்த்தான்.

அடுத்த இடத்தில் ஜீவிதா என்ற பெயர் பளிச்சிட்டது.

பாலா சொல்ல... பியூன் வரிசையில் அமர்ந்திருந்த ஜீவிதாவை அழைத்தான்.

தடதடக்கும் இதயத்துடன் தன் சர்ட்டிபிகேட்ஸ் அடங்கிய ஃபைலை மார்போடு அணைத்தபடி உள்ளே நுழைந்த ஜீவிதாவை ஏசி அணைத்துச் சிலிர்ப்பூட்டியது.

''சிட் டவுன்,'' என்று சேரைக் காட்டிய பாலாவிற்குள் ஜீவிதாவைப் பார்த்ததும் ரசாயன மாற்றங்கள் நிகழ்ந்தன.

மாசு மருவில்லாத எளிமையான வட்ட முகம்.

எந்தவித அழகு சாதனப் பொருட்களின் தேவையின்றியே அழகாய் ஜொலித்துக் கொண்டிருந்த அவள் முகத்தில் தெய்வீகக் களை குடியிருந்தது.

பாலாவிற்கு அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போல் இருந்தது.

'இவள்தான்... இவள்தான் நீ தேடிக் கொண்டிருந்த குத்துவிளக்கு!' என்று அவன் உள்மனம் விடாமல் அலறியது.

அருணுக்குக் கூட அவளைப் பார்த்ததும் ஏதோ மனசுக்குள் நிம்மதி பரவியது போன்ற உணர்வு. தன் மன வேதனைகளைக் கொட்டி அவளிடம் ஆறுதலாய் நான்கு வார்த்தைகளைப் பெற வேண்டும் போல் ஒருவித ஆவல் எழுந்தது. அப்படியொரு சிநேகத்தை வெளிப்படுத்தும் தாய்மையின் கனிவு மிளிரும் முகம் ஜீவிதாவோடது.

தான் என்ன கேள்வி கேட்டோம் என்றே பாலாவுக்குத் தெரியாது. அவன் கேட்க, அவளும் பதில் சொல்ல... அந்த வேலைக்கு அவளைத் தேர்ந்தெடுத்து விட்டனர்.

ஜீவிதா அதை எதிர்பார்க்கவில்லை. அவள் எதிர்கொள்ளும் முதல் இண்டர்வியூ இது. படிப்பை முடித்த கையோடு. அம்மாவைச் சந்தோசமாய் வைத்துக் காப்பாற்ற வேண்டுமே என்கிற பதைப்போடு இந்தக் களத்தில் இறங்கியபோது... இது போன்று எத்தனை கம்பெனிகளின் படியில் ஏறி இறங்க வேண்டியிருக்குமோ... என்ற எண்ணத்துடனே இந்த நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டாள்.

படிப்புச் சான்றிதழைவிட எல்லா கம்பெனியிலும் எதிர்பார்ப்பது முன் அனுபவம்தான். அந்த அனுபவம் ஜீவிதாவிற்கு ஒரு பர்சென்ட் கூட இல்லை. அதனால் எந்த எதிர்பார்ப்புமின்றி... பெயருக்கு இந்த இண்டர்வியூவில் கலந்து கொள்ளவே வந்தாள்.

ஆனால், நடந்ததோ... சற்றும் எதிர்பாராதது.

PDF Optimization Software www.balesio.com

இன்னும் கூட அவளால் நம்ப முடியவில்லை. அப்பாய்ண்ட்மென்ட் ஆர்டர் கைக்கு வந்த பிறகுதான் எல்லாமே நிஜம் என்று உணர்ந்தாள். சந்தோசம் தாங்காமல் முகம் பூவாய் மலர... கைகூப்பி இருவரையும் பார்த்து, ''தாங்க்யூ... தாங்க்யூ வெரி மச் சார்!'' என்றபோது... தாமரைப் பூ கண்ணெதிரே மலர்ந்த அதிசயத்தைக் கண்டான் பாலா.

ஓடிவந்து அம்மாவைக் கட்டிப் பிடித்துக் கொண்ட ஜீவிதா வேணியின் முகமெங்கும் முத்தத்தால் எச்சில் படுத்தினாள்.

மகள் சந்தோசமாய் இருக்கிறாள் என்பதே அந்தத் தாய்க்குப் பெரும் உவகை தந்தது... ''என்னடா, என்ன இது சிறு குழந்தையைப் போல்..:''

''அம்மா...'' என்றவள் அதற்கு மேல் பேச்சு வராமல் ஆனந்தத்தில் கண்கள் கலங்க... முகம் விகசிக்க... அம்மாவையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்னடா...'' மகளின் முகத்தை இரு கைகளால் ஏந்திக் கொண்டாள்.

''அம்மா... நம்ம கஷ்டம் இன்னையோட தீர்ந்து போச்சும்மா!''

''என்ன சொல்றே?''

''எனக்கு வேலை கிடைச்சிடுச்சும்மா.''

''என் ராசாத்தி... நிஜமாவா சொல்றே?''

''பின்னே? பார்த்தியா அப்பாய்ண்ட்மென்ட் ஆர்டர்!'' கவரைப் பிரித்துக் காண்பித்தாள்.

வேணி நிம்மதியாய் மூச்சு விட்டாள்.

''அம்மா... முதல் மாசம் சம்பளம் வாங்கினதுமே உனக்கு நாலஞ்சு சேலைகள் எடுக்கணும். அப்புறம் நமக்குச் சின்னதா ஒரு வீடு பார்க்கணும்!''

''வீடா எதுக்கும்மா?''

''என்னம்மா... எதுக்குன்னு கேக்கறே? இந்த வீட்லே இன்னும் எத்தனை காலத்துக்கு நாம் அடிமைகளா இருக்கணும்? நமக்குன்னு சின்னதா ஒரு வீடு... நம்ம சொந்த உழைப்பில், நம்ம அரிசியைப் பொங்கிச் சாப்பிடறதை விட நிம்மதி வேற உண்டா?''

வேணி அமைதியாய் இருந்தாள்.

''ஏம்மா ஒரு மாதிரியா இருக்கே?''

''என் ஜீவிதா கூடச் சுயநலமா யோசிக்க ஆரம்பிச்சிட்டா ளேன்னு கொஞ்சம் மனசு கஷ்டமாயிடுச்சி... அதான்!''

''புரியலேம்மா.''

''நல்லா நினைவுபடுத்திப் பார்! சோத்துக்கு வழியில்லாம, நடுத் தெருவிலே நிக்க வேண்டிய நேரத்திலே, மனசுக்குள்ளே ஆயிரம் வெறுப்பிருந்தாலும், நம்மளை இங்கே வரவழைச்சு, இருக்க இடம் கொடுத்து, வயித்துக்கும் சாப்பாடு போட்டவள் ராகினி. அவளுக்கு நம்ம மேல வெறுப்பு உண்டாகறது இயற்கை. நம்ம பக்கம் சில நியாயங்களிருந்தாலும், அவளோட கோணத்துல அது அநியாயமா தெரியறது இயற்கை. எடுத்தெறிஞ்சு பேசினாலும் உன்னைப் படிக்க வச்சவ அவள்தானே? நமக்கு ஒரு வழி பொறந்ததும் அவளை விட்டுட்டு ஓடறது சுயநலமில்லையா? அவளும் வயசுப் பொண்ணு... அவள் மறுத்தாலும், அவளும் என் பொண்ணு!

அவளை விட்டுட்டு நான் வரமாட்டேன் ஜீவிதா! நிதானமா யோசிச்சுப் பார்! சுயநலத்தை ஒதுக்கி வைச்சிட்டு யோசிச்சா நியாயம் புரியும். இந்த வேலை கிடைக்க படிப்பைக் கொடுத்த உன் அக்காவிற்கு முதல்ல இந்த சந்தோசமான செய்தியை ஸ்வீட் கொடுத்துச் சொல்லு! அப்ப நானும் சந்தோசப்படுவேன்!'' என்றாள், வேணி.

ஜீவிதா, அம்மா அப்படிப் பேசுவாள் என்று எதிர்பார்க் காததால், திகைத்துப் போய் நின்றிருந்தாள்.



ஜீவிதாவும், வேணியும் ராகினியின் அறைக்குள் சென்றனர். புத்தகம் படித்துக் கொண்டிருந்த ராகினி இவர்களை நிமிர்ந்து பார்த்தாள்.

''வர்றதுக்கு முன்னாடி கதவைத் தட்டிட்டு வரணுங்கற மேனர்ஸ் கூடத் தெரியாதா? என்ன விசயம்? பசுவும், கன்றும் சேர்ந்தே வந்திருக்கு!'' என்றாள் ஏளனமாக.

ஜீவிதா தயக்கமாய் அம்மாவைப் பார்த்தாள். வேணி கண்களால் மகளுக்குத் தைரியம் சொன்னாள்.

ஜீவிதா மேலும் இரண்டடி முன்னேறி இனிப்புப் பெட்டியைத் திறந்து ராகினியிடம் நீட்டினாள்.

''ஸ்வீட் எடுத்துக்குங்கக்கா!''

ராகினி நிஜமாகவே அதிர்ந்துதான் போனாள்.

ஸ்வீட்டா? ஸ்வீட்டைத் தர்ற அளவுக்கு இவங்க சந்தோஷமா இருக்காங்களா? நெஞ்சில் தீப்பற்றிக் கொண்டது.

''என்ன விசயம்.. ஸ்வீட் தர்ற அளவுக்கு?''

''எனக்கு வேலை கிடைச்சிருக்கு!''

எதிர்பாராத இந்தச் செய்தியால் ஆடிப் போனாள் ராகினி.

''வேலையா.. உனக்கா?''

''ஆமாங்க்கா! இந்தப் படிப்பு நீங்க போட்ட பிச்சை. இந்த உதவியை நாங்க எப்பவும் மறக்க மாட்டோம். அந்தப் படிப்புதான் எனக்கு இந்த வேலையை வாங்கிக் கொடுத்திருக்கு. உங்க வாயால் என்னை வாழ்த்துங்க... ஸ்வீட் எடுத்துக்குங்க!''

''எப்ப இண்டர்வியூவிற்குப் போனே - எனக்குத் தெரியாம?''

''நேற்று முன்தினம். போயிட்டு வந்த பிறகு சொல்லிக்க லாம்னு தெரியப்படுத்தாமல் போயிட்டேன். ஸாரிக்கா!'' பணிவாய்ப் பேசினாள் ஜீவிதா.

அதனாலேயே பொங்கி வந்த ஆத்திரத்தை அடக்கிக் கொண்டாள்.

''எந்தக் கம்பெனி?''

ஜீவிதா சொன்னாள்.

ஓ.. அந்த முந்திரிக் கொட்டை அருணோட கம்பெனிதானா?

''சரி.. சரி.. போ!''

''ஸ்வீட் எடுத்துக்கலியே?''

போனால் போகட்டும் என்று எடுத்துக் கொண்டாள்.

வேணியும், ஜீவிதாவும் வெளியேற... ராகினியின் கையிலிருந்த லட்டு அவள் ஆத்திரம் தாங்காமல் பூந்தியாகி விட்டது.

ஒரே வாரத்தில் அவளுக்கு ஒதுக்கப்பட்டிருந்த வேலையை எளிதாகக் கற்றுக் கொண்டாள் ஜீவிதா. அருண் அறையை ஒட்டிய காபின்தான் ஜீவிதாவின் இருப்பிடம் என்பதால்.. அவனுடைய நேரடிப் பார்வையில் எந்நேரமும் இருந்தாள்.

பாலா அவள் கேட்குமுன்பே சந்தேகங்களை நிவர்த்தி செய்துவிடும் சாக்கில் அடிக்கடி அவள் டேபிளுக்கு வந்தான்.

அந்த அலுவலகம் ஜீவிதாவிற்கு மிகவும் பிடித்துப் போய்விட்டது. எல்லாவற்றையும் விட அருணை.. ரொம்பவே பிடித்து விட்டது. அவளையும் மீறி அவள் கண்கள் அவனை ஏறிடுவதை அவளால் தடுக்க முடியவில்லை.

அதுவே அவளுக்குப் பயத்தைத் தந்தது.

அவனை அவனுக்கே தெரியாமல் ரசித்துக் கொண்டிருக்கிறேன். இது தவறல்லவா? நான் யார்? அவன் யார்? இந்த ரசிப்பு எல்லை மீறி ஒரு தலையாய்க் காதலிப்பதில் நின்று விட்டால்.. என்னை மீட்க என்னாலேயே முடியாதே!

வேண்டாம். இந்த எண்ணமே எனக்குள் வரக் கூடாது. என் லட்சியமென்ன? வாழ்க்கையில் முன்னேற வேண்டும். அம்மாவைக் கண் கலங்காமல் வைத்துக் காப்பாற்ற வேண்டும்.

கை நீட்டிச் சம்பளம் வாங்குகிற நான் இப்படி மனதை அலைய விடுவது எவ்வளவு பெரிய குற்றம்! தனக்குத் தானே சமாதானம் பண்ணிக் கொண்டாள்.

அருணுக்குக் கூட ஜீவிதாவின் எளிமையும், பணியில் காட்டும் சுறுசுறுப்பும் வெகுவாய்ப் பிடித்து விட்டது.

பாலா ஜீவிதாவின் அருகில் வந்து நின்றதும், மரியாதை நிமித்தம் எழுந்து நின்றாள்.

''அடடா.. எதுக்கு நிக்கறீங்க? உக்காருங்க.. நான் ஒரு நாளைக்கு இருபது முறை இங்கே வர்றேன்.. இருபது முறையும் எந்திருச்சி நிக்கறீங்க.. மரியாதை மனசிலே இருக்கட்டும் ஜீவிதா! ஒரு கொட்டேஷன் கொடுத்தேனே.. அதை ரெடி பண்ணிட்டீங்களா?''

''இதோ சார்!'' என்று தயாராய்வைத்திருந்த பேப்பரை எடுத்துக் கொடுத்தாள்.

படித்துப் பார்த்த பாலாவின் கண்கள் ஆச்சர்யத்தில் விரிந்தன.

''வெரிகுட்.. ஒரு மிஸ்டேக்கும் இல்லாமல் அடிச்சுக் கொடுத்திருக்கீங்க... ஆச்சரியப்படுத்தறீங்க மிஸ் ஜீவிதா!''

''எல்லாம் உங்களோட ஒத்துழைப்புதானே சார்!'' என்றாள் பணிவாய்.

அந்த வார்த்தை அவனை ஜில்லிட வைத்தது.

சாயந்தர வேளை.

பீச்சோர பார்க்கிங் பகுதியில் காரை நிறுத்தி விட்டு, அதன் மீது சாய்ந்தபடி காற்றை இலவசமாகச் சுவாசித்துக் கொண்டிருந்தனர் அருணும், பாலாவும்.

''இந்த வருஷம் நம்ம கம்பெனிக்குப் போன வருஷத்தை விடவும் நல்ல லாபம் கிடைச்சிருக்கு!'' என்றான் பாலா.

''ஆமாம் பாலா... அந்தப் பணத்தை எல்லாம் மறுபடியும் கம்பெனியிலேயே இன்வெஸ்ட் பண்ணி டெவலப் பண்ணணும்!''

''நிச்சயமா! அதே சமயம் இதுக்கெல்லாம் நம்ம ஒர்க்கர்ஸும் ஒரு காரணம். அவங்களுக்கு ஒரு பார்ட்டி வைச்சு ஏதாவது காம்ப்ளிமெண்ட் தரணும்.''

''கண்டிப்பா... இதை நானும் சொல்லணும்னு நினைச்சிருந் தேன். நீயே சொல்லிட்டே. என்னைக்குப் பார்ட்டி வைச்சுக்க லாம்னு நீயே முடிவு பண்ணிடு.''

பாலா அருண் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''என்ன பாலா.. என் முகத்தையே பார்த்துக்கிட்டிருக்கே?''

'இப்பதான் அருண் உன் முகத்துல பழைய களை தெரியுது. பழைய அருணை இப்பத்தான் பார்க்கறேன்!''

''என்ன பண்றது? நடந்ததையே நினைச்சிட்டி ருந்தா..எதிர்காலம் பாதிக்கும்னு புரிஞ்சது. ராகினியால் அடிபட்ட வலியை மறந்திட்டேன். ஆனா, தழும்பு இருக்கு..''

'சரி.. சரி.. மறுபடி எதுக்கு அவள் பேச்சு? சீக்கிரம் உனக்கொரு கல்யாணம் பண்ணிப் பார்த்திடணும்!''

''அப்படீங்களா... பெரியவரே? பொண்ணெல்லாம் பார்த்திட்டீங்களா?'' என்றான் பணிவாகக் கையைக் கட்டி.

''நாட்டுல நல்ல குடும்பத்துப் பொண்ணுங்களுக்கா பஞ்சம்? பொண்ணு பார்க்கிற வேலையை என்கிட்டே விட்றா.. என் விருப்பப்படி உனக்குப் பொருத்தமான பொண்ணா பார்க்கறேன்!''

''உன் விருப்பம் எப்படிப்பட்டது?''

''ம்..'' என்று யோசித்தவன், ''ஜீவிதா மாதிரின்னு வைச்சுக்கோயேன்!''

''ஜீவிதாவா!''

''அவளைச் சொல்லலை.. அவளை மாதிரிப் பொண்ணாத் தேடுவேன்னு சொல்ல வந்தேன். ஒரு மனுசன் நிம்மதியா சந்தோசமா வாழணும்னா... ஜீவிதா மாதிரியான ஒரு பொண்ணே மனைவியா அமைஞ்சாதான் அது சாத்தியம்! எளிமையான அழகு, அதிராத நடை, அடக்கமான பேச்சு, சத்தமில்லாத புன்னகை, வேலையில் திறமை.. இது அத்தனையும் ஒரு பெண்ணிடம் ஒரு சேர இருப்பது அபூர்வம்...''

''ஏதேது... கொஞ்சம்விட்டா.. ஜீவிதாவையே கல்யாணம் பண்ணிக்கடான்னு சொன்னாலும் சொல்வே போலிருக்கே!'' முகம் முழுக்கப் புன்னகை பரவிக் கிடக்கக் கேட்டான் அருண்.

''சேச்சே...ஜீவிதா.. உனக்கா? ஊகூம்.. கனவுல கூட அப்படிச் சொல்ல மாட்டேன்!'' என்று சிரித்த பாலா மனசுக்குள், ''அவள் எனக்கு மட்டும்தான் சொந்தமானவள், அருண்,'' என்று சொல்லிக் கொண்டான்.

தென்றலை அனுப்பித் திரைச் சீலையை விலக்கி.. அவ்வப்போது ஜன்னல் வழியே முகம் காட்டிச் சிரித்த பவுர்ணமி நிலவைப் பார்த்தபோது பாலாவுக்குப் பாவமாய் இருந்தது. நிலவைப் பார்க்கும் போதெல்லாம் ஜீவிதாவின் முகம்தான் நினைவுக்கு வந்தது.

அவனுக்கே வியப்பாய் இருந்தது.

கடலின் ஆழம், பெண்களின் மனது மட்டுமல்ல, காதலின் ஆதியும், அந்தமும் கூட யாராலும் உணர முடியாத ரகசியம்தான். ஒரு பூ மலர்வதைப் போல, ஒருவர் மீது காதல் ஏற்படுவதும் எந்தக் கணத்தில் என்று உணர முடியாது.

புரண்டு படுத்தான் பாலா.

வாசலில் அசைவு தெரிந்தது. அம்மா மரகதம் வந்திருந்தாள். கையில் பால் தம்ளரோடு.

கட்டிலில் அமர்ந்தவள்.. ''குடிச்சிடுப்பா!'' என்றாள்.

''இன்னும் நான் சின்னக் குழந்தைன்னே நினைப்பு உங்களுக்கு!'' என்று சிரித்தபடி பாலை வாங்கிப் பருகினான்.

''பெத்தவங்களுக்குப் பிள்ளைங்க எப்பவும் சின்னக் குழந்தைங்கதான். ஆனா பிள்ளைங்க தன்னை எப்பவும் குழந்தைங்களாகவே நினைச்சிட்டிருக்கக் கூடாது!''

''என்னம்மா சொல்றே?''

''உனக்கு இருபத்தெட்டு வயசு முடியப் போகுது பாலா. அதுவாவது நினைவிருக்கா?''

''ஆரம்பிச்சிட்டியாம்மா?''

''இது அலுத்துக்கற விசயமில்லே, பாலா! நீ எனக்கு ஒரே பிள்ளை. உங்கப்பாவும் நம்மளை விட்டுப் போன பிறகு உன் இன்பம் துன்பம் மட்டும்தான் என் வாழ்க்கையாகிப் போனது. உனக்கொரு கல்யாணத்தைப் பண்ணிப் பேரக் குழந்தைகளைப் பார்க்கணுங்கற ஆசை இந்தக் கிழவிக்கு இருக்கக் கூடாத்தா, சொல்லு?'' மரகதத்தின் குரலில் வேதனை ஒலித்தது.

''எங்கம்மா எனக்கு எப்பவும் அம்மாவா இருக்கணும்னு ஆசைப்படறேன். நான் பாட்டுக்குக் கல்யாணம் பண்ணிக்

கிட்டு குழந்தை குட்டிகளைப் பெத்துட்டா.. பாட்டியாயிடுவியேங்கிற கவலைதாம்மா எனக்கு!'' முகத்தைப் பரம சாதுவாய் வைத்துக் கொண்டு சொல்ல, மரகதம் அவன் காதைப் பிடித்துத் திருகினாள்.

''சிரிச்சுப் பேசியே மழுப்பிடாதே!''

''சரிம்மா.. உன்னைப் பார்த்தா ரொம்ப கஷ்டமாதான் இருக்கு. பார்ப்போம்.. சீக்கிரமே எவளையாவது நம்ம வீட்டுக்கு அழைச்சிட்டு வர்றேன்!''

''பா.. லா.. டேய் கண்ணா... திருட்டுப் பயலே.. என்னைப் பார்த்துச் சொல்லு...என் மருமகளை உனக்கு நல்லா தெரியும். அப்படித்தானே!'' மரகதம் மகிழ்ச்சி பொங்க மகனை ஊடுருவிப் பார்க்க.. வெட்கத்தில் தலையைக் கவிழ்ந்து கொண்டான்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லேம்மா!''

''சொல்றா, கண்ணா...!'' அம்மா கொஞ்ச -

''ஐயோ... நீ நினைக்கிற மாதிரி எதுவுமில்லேம்மா!'' என்று தலையணையில் முகம் புதைத்துக் கொண்டான்.

சோழா ஓட்டலில் பார்ட்டிக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

ஊழியர்கள் அத்தனை பேர் முகத்திலும் பரவசம். அத்தனை பேருக்கும் வாட்ச் பரிசளித்து, கவரில் இரண்டாயிரம் ரூபாய் போட்டுக் கொடுத்தனர். அறுசுவை உணவையும் ஒரு கை பார்த்த ஊழியர்களுக்குச் சந்தோசத்திற்குக் கேட்கவா வேண்டும்?

தாங்கள் விரும்பியதை எவ்வளவு வேண்டுமானாலும் தாங்களே எடுத்துப் போட்டுக் கொண்டு சாப்பிடும் பஃபே முறை!

ஜீவிதா தவிர அத்தனை பேரும் நன்றாகச் சாப்பிட்டனர்.

பாலா இதைக் கவனித்தவன், அவளருகில் வர முயல்வதற்குள் அருண் அவளை நெருங்கி விட்டான்.

''என்ன மிஸ் ஜீவிதா.. எதையும் சரியாச் சாப்பிடலே போலிருக்கே?'' என்றான்.

அவன் தன்னைக் கவனித்துக் கொண்டிருக்கிறான் என்ற நினைப்பே பாஸந்தி சாப்பிட்டது போலிருந்தது ஜீவிதாவுக்கு.

''இல்லே சார்... ஒரு சேர மொத்தமாய் எல்லா வகை உணவையும் பார்க்கிறபோது.. சாப்பிட்டு விட்ட திருப்தி ஏற்பட்டு விட்டது!''

''ஓஹோ.. நீங்க எட்ட இருந்து பார்த்தே திருப்திப்பட்டுக்கிற ஆசாமியா?'' என்று சிரித்தவன், ''எனக்காகக் கொஞ்சம் ப்ளீஸ்...'' என்றபடி தானே ஒரு கட்லெட்டை எடுத்து அவள் தட்டில் போட்டான்.

ஜீவிதா அதை ஆவலாய்ச் சாப்பிட ஆரம்பித்தாள்.


ஒரே ஒரு கணம்தான்.. பாலாவின் இதயம் சூம்பிப் போனது. ஆனால், அடுத்த கணமே நார்மலுக்கு வந்து விட்டான் அவன் இயல்புப்படி...

பார்ட்டி முடியச் சற்றே நேரமாகிவிட, பாலாவின் கண்கள் ஜீவிதாவைத் தேடின. நேரமாகி விட்டதைக் காரணம் காட்டித் தன் காரிலேயே அவளை ஏற்றிக் கொண்டு வீட்டில் டிராப் பண்ணிவிட்டு வரலாம் என்ற யோசனையுடன் இங்குமங்கும் தேடினான்.

ஆனால், அவன் கண்ட காட்சி அவனைத் திகைப்புறச் செய்தது.

காரணம் -

அருணின் காரில் ஜீவிதா ஏறிக் கொண்டிருந்ததே!



ஜீவிதாவிற்கு இது புது அனுபவம். இதுவரை அவள் காரில் எல்லாம் பயணித்ததில்லை. அதுவும் முதன் முறையாக அருண் தன் காரில் வற்புறுத்தி ஏற வைத்தது இன்னும் கூட. அவளால் நம்ப முடியவில்லை.

'அவன் மனதில் என்ன இருக்கிறது? எதற்காக என் மீது மட்டும் இவ்வளவு கரிசனம்?' மனம் எதையோ கணக்குப் போட்டு, எதிர்பார்த்து விடை தெரியாமல் தத்தளித்தது.

காரில் வரும்போது அவன் அவளைப் பற்றி விசாரித்தான். உண்மையைச் சொல்லிச் சந்தோசப்பட்டுக் கொள்ளும்ளவிற்கா அவள் வாழ்க்கை உள்ளது? அவள் அம்மா இரண்டாந் தாரமாய் வாழ்க்கைப் பட்டதையோ, ராகினியின் தயவில் தான் இத்தனை வருடமும் அடிமை வாழ்க்கை நடத்தியதையோ எப்படிச் சொல்ல முடியும்?

மனதிற்குள் இன்னொரு பதைப்பும் முளைவிட்டிருந்தது. எங்கே அவன் வீட்டிற்கே வந்துவிடுவானோ, ராகினி அவன் எதிரே தன்னை வேண்டுமென்றே அவமானப்படுத்திப் பேசி விடுவாளோ என்கிற பயம். நல்ல வேளை, அருண் தெரு முனையிலேயே காரை நிறுத்தி விட்டான்.

'இந்த நேரத்தில் வீட்டு வாசலிலேயே இறக்கி விடுவது சரியாயிருக்காது!'' என்று அவனே ஒரு காரணத்தையும் சொன்ன போதுதான் அவளுக்கு உயிரே வந்தது.

'அவன் மட்டும் வீட்டிற்கு வந்திருந்தால் தன் அவல வாழ்க்கை வெளிப்பட்டிருக்குமே?' நினைத்தபோதே உடம்பு தூக்கி வாரிப் போட்டது.

ஆனால், இந்த அவல வாழ்க்கையை எத்தனை நாள் மறைக்க முடியும், ஜீவிதா?'

ஜீவிதா பலதையும் மனதிற்குள் போட்டுக் குழம்பினாள்.

யாருடைய திருமணத்திற்கோ செல்கிறாள் போலும். ராகினி பட்டுச் சேலை, ஒரு சில நகைகளில் தேவலோக மங்கையைப் போல் ஜொலித்தாள்.

வேணி அவள் அழகைப் பார்த்துப் பூரித்துப் போனாள்.

''ராகினி... நான் சொல்றேன்னு தப்பா நினைக்கக் கூடாது!''

''பீடிகை போட்டுப் பேச வேண்டாம். நேரடியாய் விசயத்துக்கு வா!''

''ராகினி... உனக்கும் வயசாகிட்டே போகுது. எல்லார் கல்யாணத்துக்கும் நீ போறே.. உன் கல்யாணத்துக்கு இந்த ஊரே திரண்டு வந்து வாழ்த்த வேண்டாமா? உன்னைப் பெத்தவங்க உயிரோட இருந்திருந்தா... உன்னை இத்தனை வயசுக்கும் கல்யாணம் பண்ணாம விட்டு வச்சிருப்பாங்களா? உன்னைக் கல்யாணக் கோலத்துல பார்க்க என் மனசு துடியா துடிக்குது ராகினி!''

அதைக் கேட்டுப் பலமாய்ச் சிரித்தாள்.

''ஏதேது... விட்டா பாச மழையே பொழிஞ்சிடுவே போலிருக்கே! கொஞ்சம் ஸ்டாக் வைச்சுக்க. என்னமோ நீதான் எனக்கு மாப்பிள்ளை பார்த்து, மண்டபம் பார்த்து, கார் சீரோட, கிலோ கணக்குல நகை போட்டு எனக்குக் கல்யாண

பண்ணப் போகிற மாதிரி. எனக்கு எதை எப்ப செய்யணும்ங்கிறது நல்லாவே தெரியும். என் கல்யாணத்துக்கு வந்து நீயும் திருப்தியா சாப்பிட்டுப் போ! என்கிட்டே பேசி நேரத்தைப் போக்காம, உன் அருமைப் பொண்ணுக்கு அவள் ரேஞ்சுக்கு ஏத்த மாதிரி, பியூனோ, கிளார்க்கோ இப்பவே மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிச்சிடு. இங்கே இத்தனை வருஷம் உழைச்சதுக்கு ஏதோ நானும் கொஞ்சம் பண உதவி பண்றேன்!'' எகத்தாளமாய்க் கூறிவிட்டு நடந்தாள் ராகினி.

சம்மட்டியால் ஓங்கி அறைந்தது போல் வலித்தது வேணிக்கு. முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

ஞாயிற்றுக் கிழமை!

பாலாவின் வீட்டிற்கு வந்திருந்தான் அருண்.

''என்னப்பா அருண்... இந்தப் பக்கம் உன் தலை தெரிஞ்சே எத்தனை மாசமாயிடுச்சி! இந்த அம்மாவை மறந்திட்டியாப்பா?'' எதிர்கொண்ட மரகதம் உரிமையோடு கோபித்தாள்.

''சாரிம்மா... கொஞ்சம் பிஸி..''

''அம்மாவை விட அப்படியென்னப்பா பிஸி?''

''சரி.. இனிமே அடிக்கடி வர்றேன்.''

''வர்றது இருக்கட்டும்.. எப்ப ஜோடியா வரப் போறே?''

''போங்கம்மா.. பாலா.. எங்கே?''

''ஆம்பிளைப் பிள்ளைக்கு என்ன வெட்கம்? பாலா.. பாலா.. இங்கே வா.. யார் வந்திருக்கான்னு பாரு!''

''அடடேட.. வா, அருண்! போன் கூடப் பண்ணாம என்ன சர்ப்ரைஸ் விசிட்?'' அறையிலிருந்து வெளிப்பட்ட பாலா வரவேற்றான்.

''அதான்... நீயே சொல்லிட்டியே, சர்ப்ரைஸ் விசிட்னு!''

''சரி.. மேல வா! அம்மா.. அருணுக்கு லஞ்ச் நம்ம வீட்லேதான்.. தூள் கிளப்பு.. வாடா!'' என்று இடுப்பில் கை கொடுத்து அழைத்துச் சென்றான்.

ஏதேதோ பேசினார்கள். சிரித்தார்கள். பாலா ஒன்றைக் கவனிக்கத் தவறவில்லை. அருண் முகத்தில் ஒருவிதப் பதட்டம் சூழ்ந்திருந்தது.

பாலா அவனருகில் அமர்ந்தான்.

''சரி.. சொல்லு.''

''என்னது பாலா?''

''என்னவோ சொல்லணும்னு நினைக்கிறியே... அதை.''

''பாலா.. அது உனக்கெப்படி?'' ஆச்சர்யமாய்ப் பார்த்தான்.

''எத்தனை வருட நட்பு! உன்னை எனக்குத் தெரியாதா? சொல்லு.. என்ன விசயம்?''

''பாலா.. நான் கல்யாணம் பண்ணிக்கலாம்னு முடிவு பண்ணிட்டேன்!''

''அட்றா சக்கை! அம்மாவை விட்டுப் பொண்ணு பார்க்கச் சொல்லட்டுமா?''

''ஐயோ.. வேணாம்!''

''ஏன்?''

''நான் பார்த்தாச்சு.''

''நிஜமாவா? யாரது... எனக்குத் தெரியாம?''

''உனக்குத் தெரியும். சொல்லப் போனா நீ அவளைப் பத்தி நல்ல குணங்களை எடுத்துச் சொல்லியதால்தான் நான் அவளைப் பத்தி யோசிக்க ஆரம்பிச்சேன். நெருங்கிப் பழக ஆரம்பிச்சேன். அவளை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு!''

''சஸ்பென்ஸை இழுக்காதே, அருண். அந்த அவள் யாருன்னு சொல்லிடேன்!''

''சொல்லவா?''

''சீக்கிரம்..!''

''ஜீவிதா!''

டமார் எனப் பாலாவின் இதயம் வெடித்தது.

''எ.. என்ன சொன்னே?''

''ஏன்டா ஆச்சர்யமா யிருக்கா? ஜீவிதாவேதான்! ராகினியால் நான் பட்ட காயத்துக்கு அவள்தான் எனக்கு மருந்து. அவளுக்கும் என் மேல விருப்பம் இருக்கிறதுன்னு புரிஞ்சுக்கிட்டேன். இருந்தாலும் நான் முதல்ல சொல்றதுதான் சரின்னு பட்டது. நாளைக்கே ஜீவிதாகிட்டே இதைப்பத்திப் பேசிடலாம்னு இருக்கேன்!''

பாலாவினால் தாங்க முடியவில்லை. எங்கே அழுது விடுவோமோ என்று பயமாக இருந்தது. சட்டென எழுந்து நடந்தான்.

''பாலா.. எங்கே போறே திடீர்னு?''

''அ.. அம்மாகிட்டே... விருந்து தடபுடலா இருக்கட்டும்னு சொல்லிட்டு வரத்தான். எவ்வளவு பெரிய சந்தோசமான செய்தியைக் கொண்டு வந்திருக்கே!'' முகத்தைக் காட்டாமலே கீழே இறங்கி வந்த பாலாவுக்கு.. தன்னை நிதானப்படுத்திக் கொள்ளப் பல நிமிடங்கள் தேவைப்பட்டது.

தான் ஆர்டர் செய்திருந்த பொருளை வாங்கிச் செல்வதற்காக அந்த ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் முன்பாகக் காரை நிறுத்தினாள் ராகினி. கண்ணாடியாலான அலங்காரப் பொருட்களின் விற்பனைக் கூடம் அது.

படியேறியவள் சட்டென நின்றவள் ஏதோ உறைக்க, மறுபடி திரும்பிப் பார்த்தாள்.

பார்க்கிங் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த அந்தக் கார் அருணோடதல்லவா? நம்பரைப் பார்த்தாள்.

யெஸ்.. அவனோடதுதான்! அப்படியானால் அவனும் காம்ப்ளக்ஸ் உள்ளேதான் இருக்கிறான் போலும். சே.. மறுபடி அவன் கண்ணில் பட வேண்டி வருமோ?

இருக்கட்டுமே! அதனால் எனக்கென்ன வந்தது? அவன் என்னிடம் பேச வந்தால் முகத்திலடிப்பது போல் நாலு வார்த்தை கேட்டுவிட்டே வர வேண்டும்! தீர்மானித்துக் கொண்டவள், சிங்க நடை போட்டு உள்ளே சென்றாள்.

சங்கிலியால் பிணைக்கப்பட்ட நாய்க்குட்டி போல் அருண் பின்னேயே சென்று கொண்டிருந்த ஜீவிதாவுக்குக் குழப்பமாய் இருந்தது.

மாலை அலுவலகம் முடிந்ததும், 'என்னுடன் வர முடியுமா ஜீவிதா?' என்றழைத்தான் அருண்.

எம்.டி.ஆயிற்றே! அதற்கும் மேலாக மனதைக் கவர்ந்தவன்... அழைக்கும் போது மறுக்க முடியுமா?

'சரி' என்று புறப்பட்டு விட்டாள்.

கார் நேராக ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் வாசலில் வந்து நின்றது.

வாயே திறக்காமல் அருண் போகுமிடமெல்லாம் ஜீவிதாவும் சென்றாள்.

ஜீவிதா அங்குள்ள பொருட்களைப் பார்த்துப் பிரமித்துப் போயிருந்தாள்.

'எவ்வளவு அழகான பொருட்கள்! எப்படிச் செய்கிறார்கள் இந்தளவு கலை நுணுக்கத்தோடு... அதுவும் கண்ணாடியில்!'

விலையைப் பார்த்து நா உலர்ந்து போனது. ஒவ்வொன்றும் மூவாயிரம், நான்காயிரத்திற்குக் குறையாமல். அடேயப்பா..! தொடக்கூடப் பயந்தாள்.

அருண் கடையைச் சல்லடையாய் அலசியபின் கடைசியாய் அந்தப் பொருளைப் பார்த்து விட்டான்.

கைக்கெட்டாத தொலைவில் வைக்கப்பட்டிருந்த கண்ணாடித் தாஜ்மகாலை! விளக்கு வெளிச்சத்தில் வைரமாய் ஜொலித்துக் கொண்டிருந்தது.

''அதை எடுப்பா..'' என்றவன், ''ஜீவிதா! இப்படி வாங்களேன்,'' என்றான்.

அருகில் வந்தாள் ஜீவிதா.

''இது அழகாயிருக்கிறதா, ஜீவிதா?''

''ஓ... ஃபன்டாஸ்டிக்... ரொம்ப அழகாயிருக்கு!''

PDF Optimization Software www.balesto.com

''இந்தத் தாஜ்மகாலை எதோட நினைவுச் சின்னம்னு சொல்வாங்க தெரியுமா?''

''தெரியும். காதலின் நினைவுச் சின்னம்!''

''இந்தாங்க.. இது என்னோட அன்புப் பரிசு!''


''எ.. எனக்கா...? எதுக்கு சார்?''

''உங்களுக்குக் கொடுக்கணும்னு தோணிச்சு. இதைத்தான் ஒரு மணி நேரமா இங்கே தேடிக்கிட்டிருந்தேன். ஏன்னா.. நினைவுச் சின்னமாச்சே!'' அர்த்தம் பொதிந்த பார்வையுடன், அறிவார்ந்த வார்த்தைகளைப் பயன்படுத்தித் தன் காதலை வெளீப்படுத்தினான் அருண்.

ஒரு காதல் வயப்பட்ட இதயத்தால்தான் தன்னை நேசிக்கிற இதயத்தைக் கண்டுபிடிக்க முடியும். ஜீவிதாவுக்கு எல்லாமே புரிய, சிலிர்த்துக் கொண்டாள். தவித்துப் போனாள். உயரே பறப்பது போன்ற உணர்வில் மெய்ம்மறந்து போனாள்.

இவை அத்தனையையும் ராகினியும் பார்க்க நேர்ந்ததுதான் கொடுமை.

உதடின் சாயம் கண்களுக்கு இடம் மாறிவிட்டது போல் கோபத்தில் சிவந்து போனது.



''என்னடி இது பார்சல்?'' வேணி ஆச்சரியத்துடன் மகளிடம் கேட்டாள்.

''மொதல்ல பிரிச்சுப் பார்.. சொல்றேன்.''

பிரித்தாள்.

வேணியின் கண்கள் அகலமாய் விரிந்தன.

''யம்மாடி... எவ்வளவு அழகாயிருக்கு! நீயா வாங்கினே?''

''அந்தளவு என்கிட்டே ஏதும்மா பணம்? என்னோட எம்.டி. கொடுத்தாரும்மா!''

''எதுக்காக...?'' அம்மா மகளின் முகத்தைப் பயத்துடன் ஆராய்ந்தாள்.

''...''

''ஜீவிதா.. நீ அமைதியா இருக்கிறதைப் பார்த்தா எனக்குப் பயமாயிருக்குடி..!''

''அம்மா.. நீ பயப்படற அளவுக்கு எதுவும் இல்லேம்மா! சந்தோசப்படற விசயம்தான். எங்க எம்.டி.யோட பேர் அருண். ரொம்ப அழகானவர். நல்லவர். எனக்கும் அவரை ரொம்பப் பிடிச்சிருக்கு. அவருக்கும் என்னை..''

''என்னடி சொல்றே..?''

''ஆமாம்மா... உன்கிட்டே நான் எதையும் மறைச்சதில்லே. நீ எனக்கு அம்மா மட்டுமில்லே.. நல்ல தோழியும் கூட. உன்கிட்டே சொல்லாம வேற யார்கிட்டேம்மா சொல்லு வேன்?'' என்றவள் எல்லாவற்றையும் சொன்னாள்.

அவள் சொல்வதைக் கேட்டு வேணிக்குள் சந்தோசம் தாண்டவமாடியது என்றாலும் ஏதோவொரு பயம் நெஞ்சை யடைத்தது.

''ஜீவிதா... எனக்கென்னவோ பயமாயிருக்கும்மா! ஆயிரக் கணக்கில் பணத்தைக் கொட்டி இவ்வளவு அழகான பரிசை வாங்கிக் கொடுக்கிற அந்தப் பிள்ளை எங்கே! இந்தப்

PDF Optimization Software www.balesio.com

பொருளைப் பத்திரமா வைக்கக் கூட ஒரு இடம் இல்லாம தவிக்கிற நாம எங்கே! இதெல்லாம் சரிப்பட்டு வருமாம்மா? நாம யாரு? எந்த நிலைமையில் இருக்கிறோம்? இது எதுவுமே அவருக்குத் தெரியாதே! தெரிய வரும்போது என்னவாகும்?''

''ஒண்ணும் ஆகாதும்மா! அவர் அந்தஸ்து பேதம் பார்க்கிறவர் இல்லேம்மா!''

''ம்.. எல்லாம் நல்லபடி நடந்தா.. அதைவிட எனக்கு வேற என்ன வேணும்?'' என்றாள் வேணி பெருமூச்சுட்ன்.

இவர்கள் பேசிய அனைத்தையும் வாசலில் நின்றபடி கேட்டுக் கொண்டிருந்த ராகினி அருண் ஜீவிதாவைக் காதலிக்கிறான் என்ற விசயத்தை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டாள்.

அந்தச் செய்தியை அவளால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை.

கேவலம்... ஜீவிதாவிற்கு இப்படியொரு அதிர்ஷ்டம் எப்படி வரலாம்? அந்தப் பாழாய்ப் போன அருணுக்கு வேற எவளுமே கிடைக்கலியா? போயும் போயும் ஜீவிதாவை..

நோ.. கூடாது! என் எச்சில் சோற்றைச் சாப்பிட்டு, நான் உடுத்தி வீசியெறிந்த உடைகளை உடுத்தி நாய் மாதிரி என் காலடியில் விழுந்து கிடப்பவளுக்கு கார், பங்களா வசதிகளுடன் வாழ்க்கையா?

விடமாட்டேன். அந்த மாதிரிச் சுகபோக வாழ்க்கை வாழ உன்னை விட மாட்டேன் ஜீவிதா. அதற்காக எதை வேண்டுமானாலும் செய்வேன்! ராகினி பொருமினாள். யோசித்தாள்.

கடைசியில் அதைத் தவிர வேறு வழி அவளுக்குத் தெரிய வில்லை.

அருண் அழகன்தான். என்ன, அந்தஸ்தில் எனக்கு இணையாக மாட்டான். ஆனால், ஜீவிதாவிற்கு அருண் ரொம்ப அதிகம். அவளைக் கோபுர உச்சியில் ஏற்றுவதை விட நான் ஒரு படி கீழே இறங்குவதில் தப்பில்லை.

முடிவு செய்து விட்டாள்.

அருண் தன் கண்களையே தன்னால் நம்ப முடியாமல் பார்த்தான்.

ஆம்.. அவன் எதிரே அமர்ந்திருப்பது ராகினியேதான்! அவனே எதிர்பாராத இனிமையான வார்த்தைகளைப் பேசிக் கொண்டிருப்பதும் அவளேதான்.

திடீரென்று அவனுக்குப் போன் பண்ணி, ''நான் ராகினி பேசறேன். நான் உங்களைச் சந்திக்கணும். முக்கியமான விசயம் பத்தி பேசணும். உடனே வர முடியுமா, அருண்?'' என்றாள்.

''நானா?'' நம்பாமல் கேட்டான்.

''நீங்கதானே அருண்?'' அவள் சிரித்தபடி கேட்கவும், சிலுசிலுவென்ற ஓடையில் காலை நனைத்த சுகம் அவனுக்கு.

அடுத்த கணமே புவிஈர்ப்பு விசை போல் காரைக் கிளப்பிக் கொண்டு புறப்பட்டான்.

அதியமாகக் காட்டன் சேலையில் எளிமையான தேவதையாக இவன் வருகைக்காகக் காத்திருந்தவளைப் பார்த்ததும் ஆச்சரியம் தாங்கவில்லை அருணுக்கு.

''வாங்க அருண்!'' என்று முகம் முழுக்கப் புன்னகையுடன் வரவேற்றது அதைவிட ஆச்சரியம்.

ராகினி அவனுக்குப் பிடித்த உணவு வகைகளை ஆர்டர் செய்தாள்.

''ஆச்சர்யமாயிருக்கு ராகினி! எதற்காக இந்த உபசரிப்பு?''

''சொன்னா நம்புவீங்களா?''

''நீங்கதான் மனசுல உள்ளதை இடம் பொருள் ஏவல் பார்க்காமல் பளிச்சுனு கொட்டிடுவீங்களே... உங்களை நம்பாம இருக்க முடியுமா?''

''நான் உங்க மனசைப் புண்படுத்தி யிருக்கேன். அப்படி யிருந்தும் நான் கூப்பிட்டதும் ஓடி வந்தீங்களே.. அதே மாதிரி.. எல்லாத்தையும் நீங்க மறந்திடணும். என்னை மன்னிக்கணும்!''

''ரா.. கி.. னி..!''

''இந்தப் பேரை நீங்க உரிமையோட உச்சரிக்கணும்னு நான் விரும்பறேன், அருண்!'' குரலில் தாபம்.

திகைத்துப் போனான் அருண்.

''ராகினி...!''

''என்ன நம்ப முடியலியா? அன்னைக்கு ஏதோ ஒரு மூடுல உங்களை எடுத்தெறிஞ்சு பேசிட்டேன். ஆனா, அதுக்குப் பிறகுதான் எனக்கே தெரிஞ்சது, நான் என்னையறியாமலேயே உங்களைக் காதலிக்கிறேன்னு. அந்த சம்பவத்துக்குப் பிறகு நான் ஒவ்வொரு நிமிடமும் வாழவே முடியாதுங்கற நிலைமைக்கு நான் வந்தாச்சு. அதே ஃபீலிங்தானே உங்களுக்கும் இருக்கும்? காதல் ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் ஒரே ஒரு முறை ஒரே ஒரு நபரிடம்தான்

வரும். அந்தக் காதலே தோல்வியில் முடிஞ்சதுன்னா.. அதைவிடக் கொடுமை வேறெதுவும் இல்லை. நாம தோற்கக் கூடாது, அருண். ஜெயிச்சுக் காட்டுவோம்.''

''....''

''என்ன அருண், ஒண்ணுமே பேசமாட்டேங்கறீங்க? என் மேல இன்னும் கோபமா?''

''இ... இல்லே..''

''அப்ப உங்க மனசுல வேற யாரையாவது..''

''சேச்சே...'' அவசரமாய் மறுத்தான்.

''அப்புறம் என்ன தயக்கம்?'' - ராகினி அவன் கையை மெல்லப் பற்றினாள்.

இந்த உலகமே தன் காலடியில் வந்து விழுந்ததைப் போல் பெருமையாக இருந்தது அவனுக்கு.

அவள் கை மேல் தன் மற்றொரு கையை வைத்து அழுத்திய அருண், ''ஐ லவ் யூ.. ராகினி!'' என்றான்.

ராகினி... ஜீவிதாவைத் தோற்கடித்து விட்ட சந்தோசத்தில், ஆகாயத்தில் பறந்தாள்.

''முட்டாள்... உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு?'' பாலா கோபத்துடன் அலறினான்.

''ராகினி அப்படிச் சொன்ன பிறகு.. எனக்கு வேற வழி தெரியலேடா..''

''என்ன வழி தெரியலே? போடி.. நீயும் உன் லவ்வும்னு சொல்லிட்டு வர்றதை விட்டுட்டு இவனும் ஐ லவ் யூ சொல்லிட்டு வந்தானாம்!''

PDF Optimization Software www.balesio.com

''புரியாமப் பேசாதே, பாலா!''

''நீதான்.. புரிஞ்சுக்காம நடந்துக்கறே. பாவம்டா ஜீவிதா.. அவள் மனசுல ஆசையை விதைச்சிட்டு.. நம்பிக்கையை ஏற்படுத்திட்டு, திடீனு ராகினி பக்கம் சாயறியே... உனக்கு மனச்சாட்சியே இல்லையா?''

''நான் ஒண்ணும் ராகினியைத் திடீர்னு லவ் பண்ணலே. என் மனசுல முதல்ல இடம் பிடிச்சவ அவள்தான். ஜீவிதா மேல எனக்கு அபெக்ஷன் இருந்தது... ஒத்துக்கறேன். ஆனா, அது காதல் இல்லே... பிரண்ட்ஷிப்தான்னு இப்பதான் புரியுது. நல்லவேளை... அவள்கிட்டே அவசரப்பட்டு நான் எதுவும் சொல்லிடலே..''

''சொன்னாதானா? உன்னோட செய்கை அவளுக்கு உணர்த்தியிருக்காதா? வேண்டாம், அருண். ராகினி வசதி யானவங்கற காரணத்துக்காக ஜீவிதாவை ஏமாற்றாதே... அது பாவம்!''

''சாரி பாலா! நான் விரும்பிய வாழ்க்கை என்னைத் தேடி வரும் போது அதை மறுக்கிறதுக்கு நான் முட்டாள் இல்லே. நான் ராகினியைத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போகிறேன்!'' என்று கூறிவிட்டு வெளியேறினான் அருண்.

அவனைத் தடுத்து நிறுத்த முடியாமல் சிலையாய் நின்றிருந்தான் பாலா.

ஜீவிதாவுக்கு ஒன்றுமே புரியவில்லை.

அருண் அவளை நிமிர்ந்து பார்ப்பது கூட இல்லை. சரி... அதுதான் போகட்டும். எதற்காக அவளைப் பாலாவின் அறைக்கு இருப்பிடம் மாற்றினான்?


என்ன நடக்கிறது இங்கே? அவன் மனதில் என்னதான் இருக்கிறது?

குழப்பத்தில் வேலையில் கவனம் பிசகிய ஜீவிதாவை இரக்கத்துடன் பார்த்தான் பாலா.

''ஜீவிதா.. லஞ்ச் டைம் முடியப் போகுது... நீங்க சாப்பிடப் போகலியா?''

''இ.. இல்லே.. விரதம்!'' என்றாள், பொய்யாய்.

அவள் வேதனை பார்த்துப் பாலா உண்ண மறந்தான்.



உற்றார், உறவினர்கள் யாரையும் திருமணத்திற்கு அழைக்கவில்லை. அலுவலக ஊழியர்களைக் கூட அழைக்கவில்லை. இது ராகினியின் வேண்டுகோள்.

திருமணத்தை எளிமையாக - முக்கியமான ஓரிருவரை மட்டும் அழைத்துக் கோயிலில் நடத்த வேண்டும். அதன் பிறகு ஒரு நாள் பார்த்து வெகு விமரிசையாக வரவேற்பை வைத்துக் கொள்ளலாம் என்றதும் தலையாட்டி விட்டான் அருண்.

பாலா, அவன் தாய் மரகதம் மட்டுமே வந்திருக்க, ராகினி சார்பாக யாருமே வரவில்லை. ராகினிக்குத் திருமணம் என்பதே வேணிக்கோ, ஜீவிதாவுக்கோ கூடத் தெரிய வாய்ப்பில்லை.

ராகினி அருணிடம் இன்னொரு வேண்டுகோளையும் வைத்திருந்தாள்.

ராகினி குடியிருக்கும் வீடு, அவள் பிறந்து வளர்ந்த மாளிகை, அவள் பெற்றோர் வாழ்ந்து மடிந்த நினைவு மண்டபம். அவர்களின் ஆசீர்வாதம் தனக்கு எப்போதும் வேண்டும் என்பதால், சிரமம் பாராது அருணும் தன் வீட்டிற்கே வந்துவிட வேண்டும் என்றாள்.

ராகினி எதைச் சொன்னாலும் சிரமேற்கொண்டு நிறைவேற்றி விடும் துடிப்பில் இருந்த அருண் சற்றும் யோசிக்காமல் தலையாட்டி விட்டான்.

இந்த நிமிடம் வரை, அருணுக்கும் சரி, பாலாவுக்கும் சரி, ராகினியின் தங்கைதான் ஜீவிதா என்று தெரியவே தெரியாது.

திருமணம் முடிந்ததும் ராகினியின் விருப்பப்படி முதலில் அருணின் வீட்டிற்குச் சென்று, மாலையானதும் தன் வீட்டிற்குச் செல்வதாய் ஏற்பாடு.

மணமக்களை ஏற்றிக் கொண்டு புறப்பட்ட கார் அருணின் வீட்டை நோக்கிச் சென்றது.

முகம் கழுவிக் கொண்டு துடைத்தபடி வந்தவளிடம் காபி, டிபனை நீட்டினாள் வேணி.

''இன்னைக்கென்ன சீக்கிரமா திரும்பிட்டே?''

''தலையை வலிக்கிறாப் போல இருந்தது.. அதான்... காபி மட்டும் போதும்!''

''ஏம்மா.. இப்பல்லாம் நீ சரியாவே சாப்பிடறதில்லே? முகத்துலேயும் பழைய களையே இல்லை. என்னடா.. ஏதாவது பிரச்சினையா?'' இதமான குரலில் அம்மா கேட்டதும், அழுதுவிடுவேன் என்று ஜீவிதாவின் உதடும் கண்களும் பயமுறுத்தின.

என்னவென்று சொல்வாள்? அருணின் பாராமுகத்துக்கு அவளுக்கே காரணம் தெரியாதபோது, எதையென்று சொல்வது?

''ஒண்ணுமில்லேம்மா... இப்ப என்ன, நான் இந்த டிபனைச் சாப்பிடணும்... அவ்வளவுதானே! இப்படிக் கொடு!''என்று அம்மாவிடமிருந்து தட்டை வாங்கிச் சாப்பிட ஆரம்பித்தாள்.

ஒரு வாய் கூட உள்ளே போயிருக்காது. வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

''ராகினி வந்துட்டா போலிருக்கு. நீ சாப்பிடும்மா... நான் அவளைக் கவனிச்சிட்டு வந்திடறேன்!'' என்ற வேணி வெளியே வந்தவள்,

வந்தவள் திடுக்கிட்டுப் போனாள்.

காரணம் -

மணக் கோலத்தில் ராகினியும், ஒரு இளைஞனும் இறங்கியதைக் கண்டு.

''ரா.. ராகினி.. என்னம்மா இது?''

''தெரியலே...? எனக்குக் கல்யாணம் ஆயிடுச்சி!''

''ராகினி! யார் இந்த அம்மா?'' என்றான் அருண்.

''வீட்டுலே வேலை செய்றவங்கதான், இருக்க இடம் இல்லாம ஒரு பொண்ணோட நடுத்தெருவுல நின்னுக்கிட்டு இருந்தவங்களை.. நான்தான் பரிதாபப்பட்டு இங்கே அழைச்சிட்டு வந்தேன். ஆறேழு வருசமா இங்கேதான் இருக்காங்க!''

PDF Optimization Software www.balesio.com

''பரவாயில்லையே.. சோஷியல் ஒர்க்கெல்லாம் பண்றே!'' புது மனைவியைச் சிலாகித்துப் பாராட்டினான்.

ராகினி சிரித்துக் கொண்டாள்.

''இப்படி நாங்க எவ்வளவு நேரம் நிக்கறது? உங்க பொண்ணு ஆபீஸ்லேர்ந்து வந்திருப்பாளே... அவளை ஆரத்தி கரைச்சி எடுத்துக்கிட்டு வரச் சொல்லுங்க!'' என்றாள்.

ராகினியை மணக் கோலத்தில் பார்த்த அதிர்ச்சி! தனக்குத் திருமணம் என்பதைத் தன்னிடம் கூடத் தெரிவிக்காமல் ஒதுக்கி வைத்துவிட்டாளே என்கிற ஆதங்கம். தன் கணவனிடம் அவளைப் பற்றி அறிமுகப்படுத்திய விதம்.. நெஞ்சை இறுக்கிப் பிடித்தது. இதயம் பாறாங்கல்லாய்க் கனத்தது. வெளிறிய முகத்துடன் உள்ளே வந்த வேணி ஆரத்தியைக் கரைத்து மகளிடம் நீட்டினாள்.

''ஜீவிதா... இதை எடுத்துக்கிட்டுப் போம்மா!''

''ஆரத்தியா? யாருக்கும்மா?''

''வெளியே போய்ப் பார்.. தெரியும்!''

அம்மாவையே வியப்பாய்ப் பார்த்தபடி ஆரத்தித் தட்டுடன் வாசலுக்கு வந்த ஜீவிதா... ராகினியையும், அருணையும் திருமணக் கோலத்தில் பார்த்ததும்.. அவள் உடலின் ஒவ்வொரு செல்லும் அதிர்ந்தது. அருண்கூட ஜீவிதாவை அங்கு எதிர்பார்க்கவில்லை.

'ஜீவிதா இங்கே எப்படி? ஒருவேளை அந்த வேலைக்காரப் பெண்மணியின் மகளோ?' என்றெண்ணினான் அருண்.

''ம்.. சீக்கிரம் வா! அங்கேயே நின்னுக்கிட்டிருந்தா எப்படி? வந்து சுத்திப் போடு...'' என்றழைத்தாள் ராகினி.

ஜீவிதா ஒவ்வொரு அடியாய் எப்படி நடந்தாள், எப்படி ஆரத்தி சுற்றினாள், எப்போது உள்ளே வந்தாள் என்று அவளுக்கே தெரியாது.

ராகினி அவளைப் பழிவாங்கி விட்ட மமதையுடன் செல்ல.. ஜீவிதாவும் இந்த வீட்டிலேயே இருக்கிறாளே என்கிற சங்கடத்துடன் அருண் அவள் பின்னே சென்றான்.

எந்த தோல்வியையும் தாங்கிக் கொள்ளலாம். ஆனால், காதல் தோல்வியை மட்டும் யாராலும் தாங்கிக் கொள்ள முடியாது.

ஜீவிதாவும் சுருண்டு படுத்து விட்டாள்.

ஊமையாய் அழுது கொண்டிருந்தாள். சிறு துயரங்கள் கண்ணீர் விடும். பெரும் துயரங்கள் இதயத்தில் உதிரம் வடிக்கும். ஜீவிதாவின் இதயத்திலும் உதிரம் வடிந்து கொண்டிருந்தது.

மகள் காதலித்தவன்தான், மகளுக்குக் காதலின் நினைவுச் சின்னத்தைப் பரிசாக வழங்கினவன்தான் ராகினியின் கணவன் என்பது வேணிக்குத் தெரியாது.

''இவள் இப்படிப் பண்ணுவான்னு நினைச்சே பார்க்கலே, ஜீவிதா! நாம யார்? இவள் இல்லேன்னாலும் நாம சொந்தம் இல்லேன்னு ஆகிடுமா? ஒரு வார்த்தை எனக்குக் கல்யாணம்னு சொல்லியிருக்கலாமே! சரி..அதை விடு, தன் புருஷன்கிட்டே நம்மளை அனாதைன்னு அறிமுகப்படுத்தினதைத்தான் என்னால தாங்கிக்க முடியலே. நாம இங்கே இருக்க வேண்டாம் ஜீவிதா! உன்னோட வருமானம் போதும், நம்ம ரெண்டு பேருக்கும். எங்கேயாவது போயிடலாம். ராகினி புருஷன் அழகாயிருக்கார். இது மாதிரி இருப்பாரா உன் முதலாளி?

அவர்கிட்டே சொல்லி சீக்கிரம் உன் கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணச் சொல்லு, ஜீவிதா!''

வேணி பேசிக் கொண்டேயிருக்க... 'ஐயோ... அம்மா..' என்று ஓலமிட்டுக் கதற வேண்டும் போலிருந்தது ஜீவிதாவுக்கு.

ஜீவிதாவுக்கு அந்தப் பொழுதே விடியக் கூடாது என்பது போன்ற அவஸ்தை. விடிந்ததும் படுக்கையை விட்டு எழவில்லை. வேணி கவலையாய் மகளிடம் வந்தாள்.

''ஜீவிதா.. நேரமாகுதேம்மா... எந்திரிக்கலே.. ஆபீசுக்குப் போகணுமே..''

இனி அந்த வேலைக்கே போகப் போறதில்லேம்மா.. என்றெண்ணியவள், ''இல்லேம்மா... போகலே,'' என்றாள் எழுந்திருக்காமலேயே.

இந்தப் பொண்ணு மனசுக்குள்ளேயே எதையோ போட்டுப் புழுங்கிட்டிருக்கா! அப்புறம் அதைப்பத்தி மெல்ல விசாரிக்கணும்!

அன்றைய பணிகளை ஆரம்பித்தாள்.

ஊஞ்சலில் அமர்ந்திருந்த ராகினிக்குக் காபியைக் கொடுத்துவிட்டு, 'மாப்பிள்ளை... காபி,' என்று இழுத்தாள்.

''அவர் தூங்கறார்... அப்புறம் கொண்டுவா..!'' என்றவள், திரும்பி நடந்த வேணியைச் சொடக்குப் போட்டு, ''இப்படி வா!'' என்றழைத்தாள்.

''என்னம்மா?''

''என் கல்யாணத்துக்கு உன்னைக் கூப்பிடலேன்னு வருத்தமா?''

''...''

''இதிலேர்ந்து நீ என்ன புரிஞ்சுக்கிட்டே? உன்னை நான் எந்த பொசிஷன்ல வச்சிருக்கேன்னு தெரிஞ்சிருக்குமே?''

''....''

''இன்னொரு விஷயம் தெரியுமா? உன் பொண்ணு உன்னை மாதிரிதான் தகுதிக்கு மீறி ஆசைப்பட்டா.. வசதியான ஆளை வளைச்சுப் போட்டுச் சிம்மாசனத்திலே ஏறி உட்கார்ந்துடணும்னு திட்டம் போட்டா! எல்லாரும் தனலட்சுமி மாதிரி இருந்திட முடியுமா? என்ன அப்படிப் பார்க்கிறே? உன் பொண்ணு காதலிச்ச விசயம் எல்லாம் எப்படி இவளுக்குத் தெரிஞ்சதுன்னா? உன் மகளை விட அழகுல, அந்தஸ்துல மட்டுமில்லே, அறிவிலேயும் நான் உயர்ந்தவள்தான். உன் பொண்ணு காதலிச்ச ஆள் யார் தெரியுமா? என் புருஷன்!''


''ரா... கி.. னி..!''

''என்ன அலர்றே? மனசு ஐயோன்னு மகளுக்காகத் துடிக்குதில்லே? மகளுக்குக் கிடைக்க வேண்டிய வாழ்க்கையை இப்படித் திட்டம் போட்டுப் பறிச்சிட்டாளேன்னு பார்க்கறேயில்லே? அப்படித்தானே இருந்திருக்கும், எங்க அம்மாவுக்கும்? நானாவது உன் பொண்ணு காதலிச்சவனைத் தட்டிப் பறிச்சேன்! ஆனால், நீ எங்க அம்மாவோட புருஷனையே பங்கு போட்டுக்கிட்டவளாச்சே! எங்கம்மா எவ்வளவு வேதனைப்பட்டிருப்பாங்க... கண்ணீர் விட்டிருப்பாங்க! அந்த வேதனையை நீ அனுபவிக்கணும். கண்ணீர் விடணும்!'' ராகினி ஆவேசமாய்ப் பேசிக் கொண்டே இருந்தாள்.

அப்போதுதான் எழுந்து வந்த அருண் காதிலும் அத்தனையும் விழுந்தது.

அம்மாடி... ஜீவிதா... என் கண்ணே.. மலைபோல நம்பிட்டிருந்தியே.. அந்த வாழ்க்கையே உனக்கு இல்லாமப் போயிடுச்சா? எப்படிடி தாங்கிக்கிட்டே? கடவுளே.. எங்களை ஏன் சோதிக்கிறே?

வேணி அடுக்கடுக்காய் ஏற்பட்ட வேதனைகளின் கனம் தாளாமல் நெஞ்சின் மையப் பகுதியில் ஏதோ அடைத்துக் கொள்வது போலிருக்க... அடுத்த கணமே மண்ணில் சரிந்தாள், பிணமாக.



நாட்கள் கடந்து மாதங்கள் உருண்டன. ஜீவிதா அந்த வீட்டில் நடைபிணமாய் வளைய வந்தாள். வேணியின் இடத்தில் இப்போது அவள்தான் இருந்தாள்.

அம்மாவின் மரணம் அவள் தன்னம்பிக்கையையே சீர்குலைத்து விட்டது. அருணிடம் ஒரு வார்த்தை கூட அவள் பேசவில்லை. இனி அவன் அலுவலகத்தில் தொடர்ந்து வேலை செய்யப் பிரியப்படாமல் ராஜினாமா செய்து விட்டாள்.

அந்த ராஜினாமாவைப் பாலா எதிர்பார்த்தான். என்றாலும் மனசு வலிக்கவே செய்தது. கையில் வேலை இல்லாமல் தனியே எப்படி வாழ்வது? வேறு கம்பெனிகளுக்கு விண்ணப்பித்தாள். அவள் அதிர்ஷ்டம் ஒரு இண்டர்வியூ கார்டு கூட வரவில்லை.

ராகினி அவளை ஓட ஓட விரட்டினாள். மாங்கு மாங்கு என்று வேலை வாங்கினாள். ஜீவிதா அங்கு முழு நேர வேலைக்காரியாக மாறினாள். வேண்டுமென்றே அவள் கண்களில் படும் விதமாகக் கணவனுடன் நெருக்கமாக இருப்பாள்.

அருண் ராகினியை நன்றாகப் புரிந்து கொண்டிருந்தாலும், அவனால் எதிர்த்துக் கேட்க முடியவில்லை. ஜீவிதாவிற்காகத் தனிமையில் கண்ணீர் விட மட்டுமே முடிந்தது.

அருண் ஜீவிதாவைத் தெரிந்தது போல் கூடக் காட்டிக் கொள்ளாதது அட்லீஸ்ட் தன் அலுவலகத்தில் பணிபுரிந்தவள் என்ற அளவில் கூடக் காட்டிக் கொள்ளாதது கண்டு சிரித்தாள் ராகினி. 'அந்தளவிற்கு அவனுக்குத் தன் மீது பயமிருக்கிறதே!'

அதனால் அவனை எப்போதும் தன் மோகத்திலேயே கிறங்கிக் கிடக்க... அவனுக்குத் திகட்டத் திகட்டத் தன்னைத் தந்தாள். அருண் பேசாமடந்தையாகிப் போனதற்கு அந்த மயக்கமும் ஒரு காரணம்.

கவலையை விடக் கொடிய நோய் இவ்வுலகில் உண்டா? மனம் கொள்ளாத கவலையுடன் வாழ்ந்த ஜீவிதா இளைத்துப் போனாள்.

அவளைப் பார்க்கவே வேதனையாய் இருந்தது அருணிற்கு.

அநியாயமாய் அவள் மனதில் ஆசையை விதைத்து என் பங்கிற்கு நானும் அவளைக் கஷ்டப்படுத்தி இருக்கிறேன் என்று நொந்து கொண்டான்.

அறைக்கு ஜூஸ் எடுத்துக் கொண்டு வந்த ஜீவிதா, அங்கு ராகினி இல்லாதது கண்டு திரும்பி நடக்க.. உள்ளே வந்து கொண்டிருந்தான் அருண்.

அவனைப் பார்த்துவிட்டு வேகமாய் நடக்க முயன்றவளைக் கை நீட்டித் தடுத்தான்.

''நில்லு ஜீவிதா!''

''....''

''என் மேல கோபமா?''

''....''

''சொல்லு.. ஏன் என்கிட்டே பேச மாட்டேங்கிறே?''

''.....''

''நான் உன் மனசைப் புண்படுத்தியிருந்தா என்னை மன்னிச்சிடு, ஜீவிதா!''

''சார்.. பெரிய வார்த்தையெல்லாம் பேசாதீங்க. தப்புச் செஞ்சவள் நான்! என் தகுதிக்கு மீறி ஆசைப்பட்டது தப்பில்லையா? அதான்... ஆண்டவன் இவ்வளவு பெரிய தண்டனையைக் கொடுத்திட்டான். பணக்காரங்க யதார்த்தமா பேசிப் பழகினா... என்னை மாதிரி ஏழைங்க உடனே அதைக் காதல்னு தப்புக் கணக்குப் போட்டுடக் கூடாது..''

''ஜீவிதா.. நீ எவ்வளவு மனசு நொந்து பேசறேன்னு எனக்குப் புரியுது. நீ மறுத்தாலும், நானும் குற்றவாளிதான். ராகினி உன்னோட அக்கான்னு இங்கே வந்த பிறகுதான் புரிஞ்சுக்கிட்டேன். மனசார அவளை ஏத்துக்கிட்டாலும்.. அவள் செய்யற அநியாயங்களை என்னால தாங்க முடியலே.. அவளை அந்த ஆண்டவன்தான் காப்பாத்தணும். அவள் கண்ணிலே கண்ணீர் வரக் கூடாதுன்னு உன்னை இப்படி கண்ணீர்விட வச்சிட்டேனேன்னு வருத்தமாயிருக்கு. நீ சின்னப் பெண். உன் வாழ்க்கை இதோட முடிஞ்சிடப் போறதில்லே. நீ

வாழணும். ஒரு நல்ல பையனாப் பார்த்து நான் உனக்குக் கல்யாணம் பண்ணி வைக்கிறேன், ஜீவிதா!''

ஜீவிதா பதிலேதும் கூறாமல் வறட்சியாய் ஒரு சிரிப்பை உதிரவிட்டு வெளியேறினாள்.

''சபாஷ்... இது எத்தனை நாளா நடக்குது அருண்?'' பின்பக்கமிருந்து குரல் கேட்க.. திடுக்கிட்டுத் திரும்பினான், அருண்.

உள் அறையிலிருந்து வந்து கொண்டிருந்தாள் ராகினி.

''எப்படி... எப்படி...? நான் அநியாயம் பண்றேனா? ஜீவிதாவுக்கு நீங்கள் மாப்பிள்ளை பார்க்கப் போறீங்களா? என்ன திடீர்னு அவள் மேல உங்களுக்கு இவ்வளவு கரிசனம்?''

''தப்பா நினைச்சுக்காதே, ராகினி! ஜீவிதா உன்னோட தங்கைங்கற விசயம் வேணியம்மா இறந்த அன்னைக்கே தெரியும். இது தப்பில்லையா? உங்கப்பாவும், வேணியம்மாவும் இணைஞ்சது தப்போ, சரியோ - அது சூழ்நிலையைப் பொறுத்தது. அதைப்பத்திப் பேசி ஆகப் போறதென்ன? பாவம் ஜீவிதா... சின்னப் பொண்ணு. அவள் என்ன பாவம் பண்ணினா? இந்த வீட்டு வேலை முழுவதும் அவள்தான் செய்யறா.. நீ நினைச்சா.. பத்து வேலைக் காரங்களை நியமிக்கலாம். ஆனால், செய்யலே. ஏன்னா அந்தப் பொண்ணை உனக்குப் பழிவாங்கணும்!''

''ஓகோ.. அவ்வளவு அக்கறை இருந்தா.. ஜீவிதாவுக்கு நீங்க உங்க ஆபீஸ்லேயே ஒரு வேலை போட்டுத் தரலாமே! போரடிக்கறப்ப.. உங்க கார்லேயே அழைச்சிட்டுப் போய் ஓட்டல், ஷாப்பிங்னு போகலாமே! அழகான தாஜ்மகாலை வாங்கி, 'ஏனோ, இதை உனக்குக் கொடுக்கணும்னு

தோணிச்சு!'ன்னு காதல் நினைவுச் சின்னத்தைப் பரிசாக் கொடுக்கலாமே!'' நிதானமாய், அதே சமயம் ஏளனமாய்க் கேட்டாள், ராகினி.

''ரா.. கி.. னி..!'' அதிர்ந்தான் அருண்.

''என்ன அருண்... இதெல்லாம் இவளுக்கு எப்படித் தெரியும்னுதானே பார்க்கிறே? இந்த ராகினிக்குத் தெரியாம எதுவுமே நடக்காது. அவளைப் பழிவாங்கணும்ங்கற ஒரே காரணத்துக்காகத்தான் உன்னை நான் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். கடமைக்காகக் கல்யாணம் பண்ணிக் கிட்டாலும் உனக்கு நான் எந்த விதத்திலும் குறை வைக்கலே! நமக்குள்ளே எந்தப் பிரச்சினையும் வரவேண்டாம். ஸோ, என் விசயத்திலே தலையிடக் கூடாது. ஜீவிதா பக்கம் கூட பார்க்கக் கூடாது. அவளுக்கு ஒரு கல்யாணம் பண்ணணும். அவ்வளவுதானே? அது என் பொறுப்பு. நேரத்தைப் போக்காம ஆபீஸ் கிளம்பற வழியைப் பாரு, அருண்!'' என்று மூச்சு விடாமல் பேசிய ராகினிக்குத் தலை சுற்றுவது போலிருக்க... மயங்கிக் கீழே சரிந்தாள்.

அருணுக்கு மகிழ்ச்சியில் தலைகால் புரியவில்லை. பின்னே.. சாதாரண விஷயமா என்ன? அவன் அப்பா ஆகப் போகிறானே! ராகினி வயிற்றில் இரண்டு மாதக் கரு இருப்பதை டாக்டர் உறுதிப்படுத்தி விட்டார்.

ராகினிக்கும் தான் தாயாகப் போகிறோம் என்பதில் பெருமையாகத்தான் இருந்தது. ஆனால், அந்த மகிழ்ச்சி யிலேயே மூழ்கி விடாமல் காரியத்திலேயே குறியாய் இருந்தாள்.

சீக்கிரமாக ஜீவிதாவிற்குக் கல்யாணம் பண்ணிவிட வேண்டும்.

காரியத்தில் இறங்கினாள்.

பத்தே நாளில் மணமகனைப் பற்றிய முழு விவரத்துடன் அருண் முன்னால் அமர்ந்தாள்.

''என்னைப் பொறுப்பில்லாதவள்னு சொன்னியே, அருண். இப்பப் பார்த்தியா.. ஜீவிதாவுக்கு மாப்பிள்ளை பார்த்துப் பேசி முடிச்சிட்டு வந்துட்டேன்!''

''நிஜமாவா?''

''பின்னே சும்மாவா? இதுதான் மாப்பிள்ளையோட போட்டோ!'' கவரிலிருந்து ஒரு கையகலப் போட்டோவை எடுத்துக் காட்டினாள்.

அந்தப் போட்டோவிலிருந்த நபரைப் பார்த்து முகம் மாறினான்.

''இவனா?''

''இவரேதான்!''

கன்னங் கரேல் என்று முகம் பூசணிக்காய் அளவிற்கு. அசிங்கமாய் வயதான ஒரு நபரை...

''சேச்சே.. எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கலே, ராகினி!''

''கல்யாணம் ஜீவிதாவுக்கு. அது நினைவில் இருக்கட்டும். ஜீவிதா.. ஜீவிதா.. இங்கே வா..!''

வந்தாள்.

''உனக்காக நான் ஒரு மாப்பிள்ளை பார்த்துப் பேசி முடிச்சிட்டு வந்துட்டேன். அடுத்த வாரமே கல்யாணம். மாப்பிள்ளை பேரு பெருமாள். வயசு நாப்பத்தஞ்சுதான்.

ஆனால், இதுதான் முதல் கல்யாணம். அரிசி மண்டியில் கூலி வேலை செய்யறார். இந்தா போட்டோ.. பிடிச்சிருக்குதானே?''

பார்த்தாள்.

''பிடிச்சிருக்கு!'' என்றாள்.


''அப்ப நீ போகலாம்!'' என்று ஜீவிதாவை அனுப்பி விட்டாள்.

அருணுக்கு அதிர்ச்சி.

ஜீவிதா! உன் இதயம் அந்த அளவிற்கா இறுகிக் கிடக்கிறது? இப்படியொரு ஆளைப் பிடிச்சிருக்கு என்று சொல்ல உனக்கெப்படி மனசு வந்தது? இந்தச் சிறையிலிருந்து தப்பிக்க இப்படியொரு வழி கிடைத்ததே என்பதாலா? அல்லது காதல் தந்த வலியால் வெறுத்துப் போய் இந்த முடிவுக்கு வந்தாயா?

இல்லை... ஜீவிதா... நான் அனுமதிக்க மாட்டேன். இந்த விதை வறண்ட நிலத்தில் விழுந்து பாழாவதை அனுமதிக்க மாட்டேன். நீ நல்லா வாழணும்... செழிப்பா வாழணும்..

அருண் தீவிரமாய் யோசிக்க ஆரம்பித்தான்.



கல்யாண ஏற்பாடுகள் துரிதமாய் நடந்தன. இன்னும் இரண்டு நாட்களில் திருமணம்.

பாலா.. காரை விரைவாக ஓட்டிக் கொண்டு வந்தான். காரின் பின் சீட்டில் மரகதம் அமர்ந்திருந்தாள்.

பாலாவிற்கு நெஞ்செல்லாம் நெகிழ்ந்திருந்தது.

அருண்.. நீ எவ்வளவு பெரிய அழுத்தக்காரனாய் இருந்திருந்தால்... இத்தனை நாட்களாக உண்மையை மறைத்திருப்பாய்? ராகினியின் தங்கைதான் ஜீவிதா என்று அப்போதே சொல்லியிருந்தால்.. என் ஜீவிதா இவ்வளவு துன்பப்பட வேண்டிய அவசியமே இருந்திருக்காதே! அந்த ராட்சசியின் கையில் சிக்கிக் கொண்டு அவதிப்பட வைத்திருக்க மாட்டேனே! இப்போதாவது வந்து சொன்னாயே... அது போதும்.

ஜீவிதாவை எப்படியாவது காப்பாற்றி அழைத்துச் சென்றுவிடு! இங்கிருந்தால்.. அவள் பார்த்துள்ள பீப்பாய் மாப்பிள்ளைக்கே கல்யாணம் பண்ணி வைத்துவிடுவாள். அவளை அழைத்துச் சென்று எங்காவது பாதுகாப்பாகத் தங்க வை! அவளுக்கு நல்ல மாப்பிள்ளையை நான் பார்த்துக் கல்யாணம் பண்ணி வைக்கிறேன் என்றாயே, அருண்! என்னைப் பார்த்தால் உனக்கு நல்லவனாகத் தெரியவில்லையா?

''சீக்கிரம் போ பாலா.. என் மருமகளை நான் சீக்கிரம் பார்க்கணும்,'' என்றாள் மரகதம்.

பாலா சிரித்துக் கொண்டே மேலும் விரைவுபடுத்தினான்.

அருண் பாலாவின் வரவிற்காக ஒவ்வொரு நொடியும் ஆவலாய் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

ராகினியின் அட்டகாசத்தை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

'இப்படிக்கூட ஒரு பெண் இருப்பாளா?' என்று ஆச்சரியப்பட்டான்.

'ஜீவிதாவைப் பழிவாங்கவே உன்னைத் திருமணம் செய்து கொண்டேன்!' என்ற போது அருணுக்கு முகத்தில் அறைந்தது போலிருந்தது. அப்போதே அவளை விட்டுவிலகிவிட வேண்டும் என்று நினைத்திருந்தான்.

ஆனால், அந்தச் சமயத்தில்தான் ராகினி கர்ப்பமா யிருக்கிறாள் என்கிற இனிய செய்தி வந்து அவன் எண்ணத்தை மாற்றி விட்டது. அவளை விட்டு விலகுவதைவிட நல்ல பெண்மணியாய் மாற்றுவதே சிறந்தது என்று முடிவு செய்து கொண்டான்.

பாலாவின் கார் உள்ளே நுழைந்தது.

அருண் பரபரப்பாய் இறங்கி வந்து வரவேற்றான். பாலாவோடு, அவன் தாயாரும் இறங்க, அருணுக்கு ஆச்சரியம்... அதைவிட ஆச்சரியம், பழம், பூ, இனிப்புத் தட்டுடன் வந்திறங்கியது.

''வாங்கம்மா.. வா. பாலா..'' என்று வரவேற்றான்.

பாலாவின் கண்கள் ஜீவிதர்வைத் தேடியபடி, கால்கள் படியேறின.

பேச்சுக்குரல் கேட்டு வெளியில் வந்த ராகினி அவர்களைப் பார்த்து நாகரீகமாய்ப் புன்னகைத்தாள்.

''வாங்கம்மா... இப்பத்தான் வழி தெரிஞ்சுதா? ஹலோ.. பாலா.. ஹவ் ஆர் யூ?''

''ஃபைன்!'' என்றான்.

எல்லோரும் அமர்ந்தனர்.

ராகினி மரகதம் டேபிள் மீது வைத்திருந்த பெரிய வெள்ளித்தட்டைக் கண்கள் விரியப் பார்த்தாள். பழங்கள்,

பூக்கள், இனிப்பு வகைகளுடன் பட்டுப் புடவை, சில நகைப் பெட்டிகளும் இருந்தன.

''என்னம்மா இது? எதுக்கு இதெல்லாம்?''

''சொல்றேன்.. இங்கே ஜீவிதான்னு ஒரு வேலைக்காரப் பொண்ணு இருக்காமே... அவள் கையால முதல்ல கொஞ்சம் குடிக்கத் தண்ணீர் கொண்டுவரச் சொல்லும்மா!'' என்றாள் மரகதம்.

அடுத்த கணமே ராகினி உத்தரவிட, தண்ணீர் தம்ளருடன் வந்த ஜீவிதாவைப் பார்த்ததுமே பிடித்து விட்டது, மரகதத் திற்கு.

பாலாவைப் பார்த்த ஜீவிதா மரியாதை நிமித்தமாகப் புன்னகைத்தாள். பாலா வெகுநாள் கழித்துத் தன் காதல் நிலவைப் பார்த்த பிரமிப்பில் உருகிப் போய் நின்றிருந்தான்.

''ஜீவிதா.. இப்படி வாம்மா!'' என்றழைத்தாள், மரகதம்.

ஜீவிதா அருகில் வந்தாள்.

''இந்தாம்மா.. இதை வாங்கிக்கோ... என் மகன் பாலாவுக்கு உன்னைப் பிடிச்சிருக்கு. எனக்கும் உன்னைப் பிடிச்சிருக்கு. உனக்கு உங்க அக்கா பார்த்த மாப்பிள்ளையை விட என் மகன் ராஜகுமாரன்! அவனை நீ மறுக்க மாட்டேங்கற நம்பிக்கை யிலே சொல்றேன். இந்தச் சேலையையும், நகையையும் அணிந்து கொண்டு வா! இப்பவே உங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம்!''

ஜீவிதா நடப்பதை நம்ப முடியாமல் ஆடிப் போய் நிற்க, ராகினி பேயாட்டம் ஆடினாள்.

''என்னம்மா இது? வீடு தேடி வந்து வம்பா பண்றீங்க? அவளுக்கு இரண்டு நாள்ல கல்யாணம். மரியாதையா

இதையெல்லாம் எடுத்துக்கிட்டு வெளியே போயிடுங்க!'' கத்தினாள் ராகினி.

''ராகினி.. நீங்களும் ஒரு பொண்ணுங்கறதாவது நினைவிருக்கா? ஜீவிதாவுக்குத் தேடி வர்ற நல்ல வாழ்க்கையை ஏன் தடுக்கறீங்க?''

''ஷட் அப்... அண்ட் கெட் அவுட்!''

''பளார்!'' அருணின் வலது கை ராகினியின் இடது கன்னத்தில் இறங்கியது.

''இதற்கு மேலேயும் நான் சும்மா யிருந்தா.. நான் ஆம்பளையே இல்லை! உன் ஆணவத்துக்கு ஒரு முடிவு கட்டியாகணும். ஆண்டு அனுபவிச்சவங்களே போய்ச் சேர்ந்தாச்சு. இவ செத்தவங்களுக்காக உயிரோட இருக்கிற வங்களைப் பழிவாங்கறா! இனி உன்னை ஜெயிக்க விட மாட்டேன். ராகினி! பாலா.. ஜீவிதாவைக் காப்பாத்துன்னு மட்டும்தான் கேட்டுக்கிட்டேன். ஆனா, அவளை நீயே கல்யாணம் பண்ணிக்க முடிவு பண்ணினதை நினைச்சிபூரிச்சுப் போயிட்டேன், பாலா! ஜீவிதா.. தயங்காதே.. நீ அவங்களோட புறப்படு!

''அருண்! நீ நினைக்கிற மாதிரி நான் தியாகம் பண்ணலேடா! நிஜமாகவே ஜீவிதாங்கிற குத்து விளக்கைப் பார்த்த நாள் முதலாகவே மனசுக்குள்ளே பூஜிக்க ஆரம்பிச்சிட்டேன். அவள்கிட்டே என் மனசைச் சொல்லணும்னு நினைச்ச நேரத்திலே.. நடுவிலே ஏதேதோ நடந்து என் காதலுக்குப் பிரேக் டவுன் விழுந்திடுச்சி. ஜீவிதா! உங்களுக்குப் பார்த்த மாப்பிள்ளையை விட, நான் எந்த விதத்திலேயும் குறைஞ்சவனில்லே. என்னைக் கல்யாணம் பண்ணிப்பியா ஜீவிதா?'' கண்ணில் கனிவும், உதட்டில் குறும்புமாய்க் கேட்டான்.

ஜீவிதா தான் ஒரு மாய உலகத்தில் நின்றிருப்பது போல உணர்ந்தாள். நடப்பதெல்லாம் கனவா, நனவா என்று புரிபடாத அவஸ்தை.

'பாலா சொல்வதெல்லாம் உண்மையா? அவர் என்னை நேசித்தாரா? இதென்ன புதுத் தகவலாக இருக்கிறது?'

''என்ன ஜீவிதா, என்னை நீ இன்னும் நம்பலையா?'' மீண்டும் கேட்டான் பாலா.

எங்கிருந்தோ வந்த தென்றல் ஜீவிதாவின் பாதையில் கிடந்த முள்ளையும் கல்லையும் அகற்றி வழி விட்டது போல் ஜீவிதாவின் மனதினுள் ஒரு நிம்மதி பரவ, பாலாவைப் பார்த்து மென்மையாய்ப் புன்னகைத்தாள்.

அவ்வளவுதான். எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டி ருந்த ராகினிக்கு ஆவேசம் எழ, ஜீவிதாவைப் பிடித்திழுத்து, ''உள்ளே போடி நாயே.. எவனாவது வருவானா... அழைச்சிட்டுப் போவானான்னு காத்திட்டிருந்தியா? காலை உடைச்சிடுவேன்... போடி உள்ளே... '' என்று-

உள்ளே தள்ளிவிட, அந்த வேகத்தில் சுவரில் மோதி ஜீவிதாவின் நெற்றியில் ரத்தம் குபுகுபுவெனப் பொங்கியது.

அனைவரும் அதிர்ந்தனர்.

''அடி ராட்சசி... நீ நல்லாயிருப்பியா? அந்தப் பொண்ணை இந்தப் பாடு படுத்தறியே... பாலா! இன்னுமா பார்த்துக் கிட்டிருக்கே? என் மருமகளை அழைச்சிட்டு வாடா!''

மரகதம் கூறவும், பாலா ஜீவிதாவின் கையைப் பற்றி வெளியே அழைத்து வந்தான். முன்னே மரகதம் சென்று கார் கதவைத் திறந்து வைத்தாள்.

''பாலா.. விடு. விட்டுட்டுப் போ.. அவளை.. விடு!'' கோபத்துடன் கத்திக் கொண்டே ஓடி வந்த ராகினி நிலைப்படியில் கால் தடுக்கி... அப்படியே படியில் உருண்டாள், 'அம்மா..' என்ற பெரும் அலறலுடன்.

ஆஸ்பத்திரி.

அடுத்தடுத்த கட்டில்களில் ராகினியும், ஜீவிதாவும் படுத்திருக்க.. ஜீவிதாவின் ரத்தம் ராகினியின் உடம்பில் ஏறிக் கொண்டிருந்தது. கீழே விழுந்து அடிபட்டதில் தலையில் பலத்த காயம். ரத்தம் ஏகமாய் வெளியேறி விட்டது.

போதாக்குறைக்குக் கருவிலிருந்த இரண்டு மாதச் சிசுவும் தாயின் அடாவடிக் குணத்தைச் சகித்துக் கொள்ள விரும்பாமல் வெளியேறி விட்டது. அவசரமாய் ரத்தம் செலுத்தியாக வேண்டிய கட்டாயம். ஜீவிதாதான் முதல் ஆளாக வந்து நின்றாள் ரத்தம் கொடுக்க.

ராகினி கண் திறக்க மேலும் இரண்டு மணி நேரமாயிற்று. நடந்தவைகளைக் கண்மூடி யோசித்துப் பார்த்தவள், குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தாள்.

அவள் அழுகைச் சத்தம் கேட்டு அறைக்கு வெளியே நின்றிருந்த அருண், பாலா, மரகதம், ஜீவிதா, அத்தனை பேரும் ஓடி வந்தனர்.

''என்ன.. என்னாச்சு ராகினி?'' என்றான் அருண்.

''அக்கா.. அழாதீங்க!'' என்றாள் ஜீவிதா.

''ஜீவிதா.. இப்படி வா!'' இரு கைகளையும் நீட்டி அழைத்தாள் ராகினி.

''அக்கா..'' என்றபடி வந்தவளை இறுக அணைத்துக் கொண்டாள்.

''என்னை மன்னிப்பியா, ஜீவிம்மா?''

''என்னக்கா இது? நான் ஏன் உன்னை மன்னிக்கணும்?''

''நான் உனக்கு ரொம்ப துரோகம் பண்ணிட்டேன், ஜீவிதா! நான் ஒரு பெண்ணுன்னு சொல்லிக்கவே வெட்கமாயிருக்கு!''

''அக்கா..''

''என்னைப் பேச விடு! நாம ரெண்டு பேரும் ஒரே அப்பாவுக்குப் பிறந்திருந்தாலும், உன்னைக் கள்ளிப்பாலா நினைச்சு கசப்புக் காட்டினேன். நீ என்ன சொன்னாலும் செய்தாலும் நாம ஒரே ரத்தம்தான்னு இப்ப நிரூபிச்சிட்டியே.. எனக்கு உன் ரத்தத்தைக் கொடுத்துக் காப்பாத்திட்டியே..''

''அது நான் செய்த புண்ணியம், அக்கா!''

''உன் மனசு யாருக்குடி வரும்? ஆனா இனிமே வரும். ஏன்னா, உன் ரத்தம்தானே என் உடம்பிலே ஓடுது! அம்மாவை எவ்வளவு கொடுமைப் படுத்திட்டேன். அவங்க மனசு நோகும்படி பேசிப் பேசியே அம்மாவைக் கொன்னுட்டேன். அம்மாவை இழந்து நீ எவ்வளவு துடிச்சிருப்பேன்னு இப்ப உணர்றேன், ஜீவிதா! என்னோட ரெண்டு மாதச் சிசு என்னை விட்டுப் போனப்பதான் தாய்ப் பாசம்னா என்னன்னு புரிஞ்சுக்கிட்டேன். அம்மா என்னை மன்னிப்பாங்களா, ஜீவிதா?'' விம்மினாள்.

''அக்கா.. உன்னையறியாமல் நீ செஞ்ச தப்புக்கு நிச்சயமா மன்னிப்பு உண்டுக்கா. வீணா மனசைப் போட்டு அலட்டிக்காதே!''

மரகதம் அருகில் வந்து ராகினியின் தலையை ஆறுதலாய்த் தடவிக் கொடுத்தாள்.

''உன்னை இப்படிப் புது மனுஷியா பார்க்கணும்னுதான் அருண் தம்பி ஊசி முனையில் தவமிருந்தான், ராகினி! பொண்ணுங்க ஆசைப்படலாம், ஆத்திரப்படலாம். ஆனா, எல்லாத்துக்கும் ஒரு எல்லையிருக்கு. அதைத் தாண்டிப் போயிட்டா, நிச்சயம் தண்டிக்கப்படுவோம். வானத்தைத் தொடணும்னு ஆசைப்படலாம். அது லட்சியமா இருக்கணும். வெறியா மாறிடக் கூடாது. ஏழை பணக்காரன், நல்லவன் கெட்டவன்னு எந்தப் பாரபட்சமும் இல்லாம நம்மை அரவணைச்சு, பாதுகாத்துக்கிட்டிருக்கிற அந்த நீல வானத்தைப் போல நாமளும் பாரபட்சமில்லாம நடந்துக்கணும், ராகினி.''

''இப்ப எனக்கு எல்லாமே புரிஞ்சு போச்சும்மா. களங்கமில்லாத அந்த நீலவானத்தைப் போல என் மனசும் சுத்தமாயிடுச்சும்மா! நான் புது மனுஷி. புது ராகினி. என் அருணோட புது மனைவி!'' என்றாள் கணவனைக் காதலுடன் பார்த்தபடி.

அருண் பேச வார்த்தை வராமல் ராகினியின் கையைப் பற்றி அன்புடன் முத்தமிட்டான்.

''ஏன்டாப்பா.. நீ பண்றது நல்லாவா யிருக்கு? கல்யாணமாகப் போற புது ஜோடி எதிரே இப்படியா பொண்டாட்டியைக் கொஞ்சுவே?'' மரகதம் கிண்டலடிக்க...

''அதானே..!'' என்று பாலா குரல் உயர்த்த...

ஜீவிதா மனம் விட்டுச் சிரித்தாள்.

அந்தச் சிரிப்பில் எந்தச் சங்கடமும் இல்லை. சஞ்சலமும் இல்லை. இனி அவள் வாழ்க்கையில் வீசப் போவது ஆனந்தப் பூங்காற்று மட்டுமே!